॥ लघुवासुदेवमननम् ॥

லகு வாஸுதேவ மனனம்

மொழி பெயர்ப்பு :

K. V. சுப்பரத்னம்

(அகிலபாரத சங்கர ஸேவா ஸமிதி பொது காரியதரிசி; அட்வகேட், ஈரோடு.)

பிரசுரிப்பவர் :

சிருங்கேரி ஸ்ரீ ஜகத்குரு ஸநாதன தர்ம வித்யா ஸமிதி

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

ஸ்ரீ தக்ஷிணாம்நாய சிருங்ககிரி ஸ்ரீ சாரதாபீடாதிபதி
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகள் அருளிய

ஸ்ரீமுகம்

"லகுவாஸுதேவ மனனம்" என்ற நூல் எங்கும் மிகவும் பிரஸித்தமானது. அநேகமாக எல்லா பண்டிதர்களுக்கும் இந்நூலைப்பற்றி நன்றாகத் தெரியும். இந்த பிரகரணத்தில் வேதாந்த விஷயங்கள் மிகத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலிலுள்ள விஷயங்களைச் சிந்திப்பதால், ஞானமடைய விரும்பும் ஸாதகர்களுக்கு உண்மை அறிவும், வேதாந்த சாஸ்திரத்தில் நுழைய விரும்புபவர்களுக்கு சாஸ்திர விஷய ஞானமும் சிரமமில்லாமல் ஏற்படுகிறது.

ஸ்ரீ சுப்பரத்னம் ஐயர் இந்நூலைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். வக்கீல் உத்தியோகத்தில் லோக வியவஹாரங்களில் ஈடுபட்ட ஸ்ரீ சுப்பரத்னம் அய்யருக்கு அவகாசம் அதிகமாக கிடைக்காதபோதிலும் இந்நூலை அவர் தமிழாக்கியிருப்பது அவருக்கு சாஸ்திரங்களில் மிகுந்த நம்பிக்கை இருப்பதைக் காட்டுகிறது. இந்தத் தமிழாக்கம் மூலத்தை ஒட்டியே நன்கு தெளிவுபடுத்துகிறது.

எங்கள் பிரிய சிஷ்யரான ஸ்ரீ வைத்யஸுப்ரஹ்மண்ய அய்யரின் ஷஷ்டி அப்தபூர்த்தி ஸமயத்தில் நடைபெறும் உத்ஸவத்தின் அங்கமாக இந்நூல் வெளியிடப்படுவது எங்களுக்கு மிகவும் ஸந்தோஷத்தைத் தருகிறது.

இந்நூல் வேதாந்த விஷயங்களை அறிய விரும்புபவர்களின் கைகளில் வெகுகாலம் நன்கு விளங்கவும் தமிழாக்கம் செய்தவர்கள் சிரேயஸ்ஸையடையவும் ஆசீர்வதிக்கிறோம்.

சிருங்ககிரி,
22-8-69

ஸ்ரீ
நாராயணஸ்மரணம்

முகவுரை.

அத்வைத வேதாந்த ஸம்க்ஷேப கிரந்தமாக 'லகுவாஸுதேவ மனனம்' வெகுகாலமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. பண்டிதர்களும் இதரர்களும் ஆன்ம வளர்ச்சிக்கும், அறிவுவளர்ச்சிக்கும் இந்த நூலை ப்ரபோத மளிக்கும் வழிகாட்டியாகப் பயின்று வருகின்றார்கள். எக்காலத்தில் இது எழுதப்பட்டது என்பது தெரியவில்லை. இந்தியாவின் பற்பல வேதாந்த நூலாசிரியர்களுடையது போலவே இந்நூலாசிரியரின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள முடியவில்லை. தென் இந்தியாவில் தான் இந்த கிரந்தம் பெரும் பிரசித்தி பெற்று வந்திருக்கிறது. விரிவான நூலை இயற்றிய வாஸுதேவமுனியும், "அறிவற்றவருக்கும் அறிவைப் புகட்டவேண்டும், ஸ்வயம் மேன்மை யடைய வேண்டும்" என்ற நோக்கமுடன் பிருஹத் கிரந்தத்தைச் சுருக்கி இந்நூலை இயற்றிய (நூல் ஆரம்பத்திலுள்ள சுலோகங்களைப் பார்க்கவும்) அவர் சிஷ்யரும் தென்நாட்டு ஸ்மார்த்த ஸம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள், பாரம்பர்யமான கிருஷ்ண பக்தர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். பாகவத புராணம் போன்ற ஞான நூல்களால் போஷிக்கப் பட்டவர்கள். கிருஷ்ணனிடம் பக்தி, ஸ்ரீ சங்கரபகவத் பாதரிடம் பக்தி, ஸதா ஆயுள் முழுவதும் அத்வைத விசாரம் கூடிய சம்பிரதாயம் இவர்களது. வேதாந்தத்தின் பிரௌட கிரந்தங்களை எளிய வழியில் விசதமாக விளக்கும் தன்மை வாய்ந்தவர்கள். இங்கு காணப்படும் ஆழ்ந்த பூர்வபக்ஷங்களும், உசிதமான தெளிவுள்ள சித்தாந்தங்களும் கிரந்த கர்த்தாவின் நுண்ணிய அறிவும், அனுபவமும், ஸ்வானுபூதியின் மூலமே விளக்கப்பட்டிருப்பது நன்கு விளங்கும் சிஷ்யர்களும் இந்தத்தன்மைகளைப் பெற்றிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் நம் நினைவுக்கு வருவது சிருங்கேரியின் 34-வது ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளின் அதி ஆச்சர்யமானதும் தெளிவானதும் அவர்களின் ஆத்மானுபூதியின் ஒளியுடன் கூடியதுமான 'விவேக சூடாமணியின்' வியாக்கியானம்.

பன்னிரண்டு வர்ணகங்கள் கொண்ட இந்த கிரந்தம் அளிப்பது ஆத்மதத்வ விளக்கமும் பிரமையால் ஏற்படும் விடரீதக் கொள்கைகளின் நிராகரணமும் சரீரத்ரயம், அவஸ்தாத்ரயம், பஞ்சகோசம் முதலியவைகளை விளக்குவதுடன் இவைகளிலிருந்து மாறுபட்டது ஆத்மா என்று போதிக்கிறது. இந்த சரீரங்கள், கோசங்கள் இவைகளின் தன்மையை அறிவதன் மூலம் இவைகளுக்கு வேறுபட்டு இவைகளுக்குப் பிரகாசத்தை அளிக்கும் ஆத்மாவானது அறியப்படும். இந்த வழியில், அதாவது சரீரகோசங்களின் தன்மை மூலம் ஆத்ம ஸாக்ஷாத்கார தத்வத்தை இந்த நூல் நிருபணம செய்கிறது. மனதின் வியாபகம், அநுபூதி யடைந்த மனோதத்வம் இவைகளைப்போன்ற பிராசீன ஹிந்துக்களின் நுண்ணறிவு ஈன்ற முடிவுகளை தற்போது மேல் நாட்டாரின் மனோதத்வ சாஸ்திரம் புதிதாகக் கண்டுபிடித்து, ஏற்றுக்கொள்ளுகிறது. மனோதத்வ சாஸ்திர ஸம்பந்தமான ஆங்கிலச்சொல் ஒவ்வொன்றுக்கும் கிரேக பாஷையில் நான்கும் ஸம்ஸ்கிருதத்தில் நாற்பதும் இருக்கின்றன. மனதும், தேகமும் கூடினவன் மனிதன். இவைகளின் கோசங்கள் பரஸ்பரம் இணைந்து செயல் படுகின்றன. வெளியில தோன்றும் ஸ்தூல தேகத்துடன் சூக்ஷ்மமான, கண்ணுக்குப் புலப்படாத பௌதிகமான பிராணகோசம் இணைந்திருக்கிறது. இது ஹிந்துக்களின் பிராசீனமான கொள்கை. இதுவும், மற்றும் பல கொள்கைகளும், இப்போது கையாண்டு வரும் மனோதத்வ பரிசீலனை (psychoanalysis)யில சுஷுப்தி போன்ற தூக்க நிலையை (hypnosis) ஏற்படுத்துவது மூலமும், மனோதேக ஒன்றுதலை (psychosomatic) ச்சார்நத வைத்ய வழிகள் மூலமும், தேகத்தினுடையதும், மனோ அலைகளுடையதுமான மின் மண்டலத்தின் ஆராய்ச்சி மூலமும் மனோதேஹ ஸம்பந்தத்தின் அதிசயிக்கத்தக்கதான புது அறிவு அநுமோதனம் செய்யப்படுகின்றன.

ஸ்வாமி விவேகாநந்தர் அருளுகிறார்கள். "தேகம் நான் என்று உன்னைப் பாவிப்பாயானால் நீ பிரபஞ்சத்துக்கு அப்பாற்பட்டவன்; ஜீவன் என்று கருதுவாயானால் அநாதியான ஜோதியின் பொறி ஒன்றாவாய்; ஆத்மாவே நீ என்றறிந்தால் நீ எல்லாமே". உபநிஷதங்களும் கோஷிக்கின்றன. "ஆத்மாவுக்கு அன்னியமாக ஏதாவது உண்டு என்ற கொளகையுள்ளவன் எங்கும், எல்லாவற்றாலும் நிராகரிககப்படுகிறான்".

அந்தரிக்ஷத்தின் பல மூலைகளில் மனிதன் சஞ்சரிக்கலாம். வெளிநோக்கங்களை சாதிக்கலாம், ஆனால் அவன் உள்நோக்கி அகத்திலும் சஞ்சரிக்கவேண்டும். வெளியில் சஞ்சாரம்போலவே இந்த உள் சஞ்சாரமும் ஆழ்ந்தது. மாண்புடையது. இதுதான் பூர்ண பிரச்னையான தன் சொந்த பிரச்னையை ஜீவன்முக்தி நிலையில் சாதிக்கவல்லது. 'வாஸுதேவமனனம்' போன்ற கிரந்தங்களே இந்த முயற்சியில் தேவையானவை, விஞ்ஞானத்துக்குப் பொருந்தியவை என்பதெல்லாம் வருங்காலத்தில் உணரப்படும்.

அகிலபாரத சங்கரஸேவாசமிதியின் பொதுகாரியதரிசி ஸ்ரீ K. V. சுப்பரத்னம் அவர்களின் தமிழாக்கம் மிகவும் மேன்மை வாய்ந்திருக்கிறது. இந்த பெரும் பணியாற்றிய இவர்களுக்கு வாசகர்களின் நன்றி உரியதாகும். இந்த நூலின் பதிப்பாளர் ஸ்ரீ V. வைத்தியஸுப்ரமணியய்யர் அவர்களுக்கும் நம் ஆழ்ந்த நன்றி உரியது. அவர்களின் பெரும்கொடையைப் போற்றுவது கடினமானதே. சங்கரர், அத்வைதம், சிருங்கேரிபீடம இவைகள் சம்பந்தமாக மாபெரும் பணிகளில் மேல்மேலும் ஈடுபட்டு அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழவேண்டும்.

15—8—69

பேராசிரியர் T. K. வெங்கடேச்வரன்,
டென்வர்; கொலராடோ—அமெரிக்கா,
(தற்போது சென்னைக்கு விடுமுறையில் வந்துள்ளார்)

முன்னுரை

அகில பாரத சங்கர ஸேவா ஸமிதியின் மூலமாக பிரசுரிக்கப்படும் 'ஸ்ரீசங்கரக்ருபா' 'ஸ்ரீஜகத்குரு கிரந்தமாலா' மற்றும் உள்ள பிரசுரங்களையும் படித்த என் நண்பர்களில் பலர் அவைகளில் காணப்படும் வேதாந்த பதங்களுக்கு விளக்கம் தெரிவிக்கக்கூடிய புத்தகம் சமிதியின் மூலம் பிரசுரித்தால் சௌகர்யமாக இருக்கும் என்று சொன்னார்கள். இதற்கு தகுந்த வழி 'வாஸுதேவ மனன'த்தை அவர்களுக்குத் தெரிவிப்பதுதான் என்று எண்ணினேன். ஸமஸ்கிருதத்தில் இருக்கும் மூலத்தைப் படித்துத் தெரிந்து கொள்ளமுடியாத நண்பர்களின் உபயோகத்துக்காக, இந்த தமிழ் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

வாசுதேவமனனத்துக்கு ஏற்கனவே சில தமிழாக்கம் உள்ளது என்பது தெரியும். ஆனால் அவைகளில் பெரும்பான்மையாக ஸம்ஸ்கிருத வார்த்தைகளையே உபயோகித்தும் சில இடங்களில் கடினமான தமிழ் பதங்களையே உபயோகித்துமிருப்பதால் சாமான்ய ஜனங்களுக்கு தெரிந்துகொளள சிரமம் ஏற்படுகிறது. மூலத்தின் அர்த்தத்தை மனதில் கொண்டு எல்லோரும் அறியும்படியாக பேசும்நடையில் இதை எழுதி இருக்

மூல கிரந்தத்தின் போக்கு குரு சிஷ்ய ஸம்வாத ரூபமாகவும் அவ்வப்போது படிப்படியாகத் தோன்றும் சந்தேகங்களையும் அதன் நிவாரணங்களையும தெளிவாக்கும் வழியில் அமைந்துள்ளது. இதையே அனுசரித்து இப் புத்தகத்திலும் விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைப்படிப்பதால் ஸம்ஸ்கிருத மூல நூலைப் படிக்க உத்ஸாகம் வரும் என்பது தான் என் தாழ்மையான நோக்கம்.

தக்ஷிணாம்நாய பீடமான சிருங்கேரி ஸ்ரீசாரதா பீடத்தில் இப்போது அமர்ந்திருக்கும் ஸ்ரீஜகத்குரு மகா

ஸன்னிதானத்தின் அனுகிரகத்தால் இதை எழுதவேண்டும் என்ற எண்ணம் எனக்கு உண்டாகி அவருடைய கிருபா கடாக்ஷத்தால் இதை இந்த மட்டில் என்னுல் எழுத முடிந்தது. அப்படிப்பட்ட கருணுமூர்த்தியின் திவ்ய பாதாரவிந்தங்களில் இதை என் சிறிய குருகாணிக்கையாக சமர்ப்பிக்கிறேன். என்னை அநுகிரகித்து இதற்கு ஸ்ரீ முகம் அருளியிருக்கும் ஜகத்குருவுக்கு என் ஸாஷ்டாங்க நமஸ்காரங்களை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சிறு மொழி பெயர்ப்பை செய்யும் போது ஏற்பட்ட பல சந்தேகங்களை நிவர்த்தி செய்து உதவியவர் என் ஆப்த நண்பர் சிருங்கேரி மடம ஆஸ்தான வித்வான் காருதரிச்சி பிருமமஸ்ரீ ராமனுத சாஸதிரிகளவர்கள் இப்புத்தகம் அச்சாகும்போது தேவையாயிருந்த திருத்தங்களைச் செய்து கொடுத்த ஸ்ரீரங்கம் வேதாந்த வித்வான், வ்யாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ K. S. வெங்கடராம சாஸ்திரிகள அவர்களுக்கு என நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்புத்தகத்தைப் பிரசுரிக்கும் சிருங்கேரி ஜகத்குரு ஸநாதன தர்மவித்யாஸமிதி காரியதரிசி குருபக்தசிரோமணி ஸ்ரீ V. வைத்யசுப்ரமண்யய்யர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி.

சிந்தனையை வளர்க்கும் கருத்துகள் அடங்கிய சிறப்புரை (Foreword) எழுதிக்கொடுத்த டென்வர் ஸர்வகலாசாலை பேராசிரியரும், ஆசிய நாட்டுக் கலைகளின் பரிசீலன அதிபருமான, பிரசித்தி வாய்ந்த பேராசிரியர் T. K. வெங்கடேச்வரன் அவர்களுக்கும் என் நன்றி.

அழகிய முறையில் வெகு சீக்கிரமாக அச்சடித்துக கவர்ச்சிகரமான தோற்றத்துடன் புத்தகத்தை தயாரிதது கொடுத்தஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ அச்சகத்தாரை நான் என்றும் மறக்கமுடியாது.

செப்டம்பர்-1969. *K. V.* **சுப்பரத்னம்**

பொருளடக்கம்

ஐந்தாவது வர்ணகம்

ஆறாவது வர்ணகம்

ஏழாவது வர்ணகம்

எட்டாவது வர்ணகம்

ஒன்பதாவது வர்ணகம்

பத்தாவது வர்ணகம்

பதினொன்றாவது வர்ணகம்

பன்னிரண்டாவது வர்ணகம்

GLOSSORY INDEX

च 'ब्रह्म नास्ति, न भाति' इति व्यवहारहेतुरावरणद्वयमपि नश्यति। तदाऽनर्थनिवृत्तिरानन्दावाप्तिश्च भवतः। इति सप्तावस्थाः सिध्यन्ति सप्तावस्था नाम — 'अज्ञानमावृतिस्तद्वद्विक्षेपश्च परोक्षधीः। अपरोक्षमतिः शोकहतिस्तृप्तिर्निरंकुशा ॥' इति। एवमाद्यावस्थानिर्मले चैतन्यवस्तुनि मिथ्याभूतप्रपञ्चकल्पनमध्यारोपः ॥

अथापवाद उच्यते — 'कारणव्यतिरेकेण कार्यं नास्ति' इति बोधेन शुक्तिकायां रजतवद्रज्जौ सर्पवच्च 'ब्रह्मणि प्रपञ्चो नास्ति' इति निषेधोऽपवादः। 'या मा सा माया' 'या न विद्यते साऽविद्या' इति व्युत्पत्त्या मायायाः कल्पितत्वं सिद्धम्। एवं यः 'ब्रह्मव्यतिरेकेण किमपि नास्ति, तद्ब्रह्माहमेव' इति विचार्य जानाति स एव जीवन्मुक्त इति वेदान्तसिद्धान्तः ॥

इति प्रथमवर्णकम् ॥

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

ஸ்ரீ வாஸுதேவ மனனம்

தமிழ் சுருக்கம்

*

முதல் வர்ணகம்

தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களில் மோக்ஷம் ஒன்றே முக்கியமான புருஷார்த்தம் ஏனென்றால் அதுதான் சாசுவதமானது. சாந்தோக்ய உபநிஷத்தில் 'மோக்ஷம் அடைந்தால் மறுபடி பிறப்பதில்லை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற மூன்று புருஷார்த்தங்களும் முக்யமானவை அல்ல. ஏனென்றால்

அவை சாசுவதமானவை அல்ல. அதே உபநிஷத்தில் 'இவ்வுலகில் எவ்வாறு கர்மாவினால் (செய்கையால்) சம்பாதிக்கப்பட்ட போகம் அழிந்து போகிறதோ அவ்வாறே புண்யங்களால் சம்பாதிக்கப்பட்ட மேலுலக போகமும் அழிந்துவிடுகிறது' என்று கூறப்பட்டுள்ளது.

அந்த மோக்ஷம் என்பது ப்ரம்மஞானத்தினால்தான் அடையப்பெறுவது சுவேதாசுவதரோபநிஷத்தில் 'அதை அறிந்தவன் மரணத்தைத்தாண்டிவிடுகிறான் மோக்ஷத்துக்கு வேறுவழி இல்லை' என்றும், தைத்திரீய உபநிஷத்தில் 'பிரம்மத்தை அறிந்தவன் மோக்ஷமடைகிறான்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ப்ரம்மம் அத்யாரோபம் (இல்லாதது இருப்பதுபோன்ற தோற்றம்), அபவாதம் (மறுப்பு) என்ற இரண்டினால் அறியப்படவேண்டும்.

அத்யாரோபம் (பொய்தோற்றம்) என்பது கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவதாம், கயிற்றில் பாம்புதோன்றுவதேயாம். தூணில் மனுஷியன் என்ற எண்ணம் தோன்றுவதேயாம். இதுபோல நிஷ்பிரபஞ்சமான ஆத்மவஸ்துவில் பிரபஞ்சம் உண்டு என்று கற்பனை தோன்றுவது ஆரோபம். இந்த அத்யாரோபம் என்பது வஸ்துவின் உண்மையான ஸ்வரூபம் தெரியாமல் இருப்பதால் ஏற்படுகிறது. இந்த அஞானத்தையே அவித்யை, மோஹம், மாயை, மூலப்ரக்ருதி, அவ்யக்தம், முதலான பல பெயர்களால் கூறுகிறார்கள். இந்த அக்ஞானத்திற்கு எது காரணம் என்று கேட்பதற்கில்லை. ஏனெனில் இது அநாதி, ஆரம்பம் இல்லாதது.

மூலப்ருக்ருதி என்பதாவது, வெள்ளை, சிகப்பு, கருப்பு என்ற மூன்று நிறங்கள் கொண்ட மூன்றுவித நூல்களால் இணைக்கப்பட்டு உருவான ஒரு கயிறு போல் ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களின் ஒன்றுபட்ட சேர்க்கை இதற்கு பிரளயம் என்றும் மஹாஸுஷுப்தி என்றும் பெயர். ஸுஷுப்தி என்பது ஸ்வப்னமில்லாத தூக்கம். கோடிக்கணக்கான ஜீவர்கள் யாவரும் அவரவர்களின் பூர்வஜன்ம கர்மாக்களால் ஏற்பட்ட வாசனைகளுடன் தட்டான் வைத்திருக்கும் மெழுகில் தங்கத்தூள்கள் எப்படி ஒட்டியிருக்கின்றனவோ அதுபோல் ஜகத் ஸ்ருஷ்டிக்கு முன் மூலப்ரக்ருதியில் மறைந்து

கிடக்கின்றனர். இந்த அனுபவம் எல்லா ஜந்துக்களுக்கும் ஸுஷுப்தி என்ற நிலையில் காணப்படுகிறது.

இந்த மூலப்ரக்ருதி ஸ்ருஷ்டி காலத்தில் ஜீவனின் பக்குவமான அதாவது பலனைக்கொடுக்கத்தயாராக உள்ள கர்மாவின் காரணமாக மாயை, அவித்யை, தமஸ் என்று மூன்று விதமாக ஆகிறது. மாயை என்பது ஸத்வகுணத்தைப்பிரதானமாக உடையது. சிருஷ்டிக்கு முன்பு பிரம்ம சைதன்யம் இந்த மாயையில் பிரதிபிம்பிக்கும்போது ஏற்படும் ரூபம் ஈசுவரன் எனப்படும். இவருக்கு அவ்யாக்ருதர், அந்தர்யாமி என்றும் பெயர்கள் உண்டு. இதுதான் ஜகத்தை உற்பத்தி செய்வது. இதுவே பரிபூர்ணப்ரஹ்ம சைதன்யரூபமாகவே தமோகுண ப்ரதானமான தாமஸீசக்தியுடன் சேர்ந்து, குடத்துக்கு மண் போல் பிரபஞ்சத்திற்கு உபாதான காரணமாகவுமாகிறது. இந்த ஜகத்துக்கு இரண்டு காரணங்களும் ஆத்மாவேதான் குடத்தை உண்டுபண்ண குயவன் நிமித்தகாரணம், மண் உபாதான காரணம். அதுபோல் ஜகத்சிருஷ்டிக்கு தனி இரண்டு காரணங்கள் இல்லை பிரம்மம் ஒன்றேதான் இரண்டு காரணமுமாகிறது. உதாரணம் சிலந்திக்கூடுக்கு சிலந்தியே உபாதானகாரணமாகவும் நிமித்தகாரணமாகவும் ஆகிறது அது தன்னிடமிருந்தே தன்வாயிலிருந்தே நூலை சிருஷ்டித்து கூடுகட்டுகிறது. இதுபோல் மாயையும் சைதன்யமும் கலந்த ஈசுவரன் ஒருவனே தன்னிடமுள்ள மாயையைக்கொண்டு உபாதான காரணமாகவும் சைதன்யாம்சத்தைக்கொண்டு நிமித்தகாரணமாகவும் ஆகிறான் என அறியவும்.

இந்த ஈசுவரன் ஜகத்தை எப்படி சிருஷ்டித்தார்?

ரஜோகுணம் மிகுந்த அவித்யையானது பலவிதமாயும் எண்ணற்றதாயுமுள்ளது அந்த அவித்யையில் தோன்றும் சைதன்யத்தின் பிரதிபிம்பங்களான ஜீவர்களும் கணக்கற்றவை இந்த ஜீவனுக்கு வியஷ்டியாக (தனித்தனியாக) உள்ள அவித்யை காரண சரீரம் இந்தக் காரண சரீரமான அவித்யையில் இருக்கும் நிலைதான் ஜீவனுக்கு ஸுஷுப்தி அவஸ்தை. இந்தக்காரண சரீரம்தான் ஆநந்தமயகோசம். இதுபோல் ஸமஷ்டியாக (மொத்தமாக) உள்ள மூலப்ரக்ருதி ஈசுவரனுடைய காரணசரீரம் அதில் இருக்கும் நிலை அவருக்கு

ஸுஷுப்தியவஸ்தை. அதுவே அவருடைய ஆநந்தமய கோசம் இவ்வாறு காரணப்பிரபஞ்ச ஸிருஷ்டி ஏற்படுகிறது.

இனி சூக்ஷ்மபிரபஞ்சத்தின் சிருஷ்டியைப் பார்ப்போம். ஈசுவரனுடைய ஸங்கல்பத்தால் தமோகுணரூபமான பிரக்ருதி ஆவரணசக்தி, விக்ஷேபசக்தி என்று இரண்டு விதமாகப் பிரிகிறது இதில் விக்ஷேபசக்தி ஸூக்ஷ்ம ஆகாசமாக ஆயிற்று. ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து ஜலம் ஜலத்திலிருந்து மண் உண்டானது இவை ஐந்தும் ஸூக்ஷ்ம பூதங்களென்றும், அபஞ்சீக்ருதங்கள் என்றும் பிருதிவிதன்மாத்திரை அப்புதன்மாத்திரை, தேஜஸ் தன்மாத்திரை, வாயுதன்மாத்திரை, ஆகாசதன்மாத்திரை என்றும் கூறப்படுகின்றன[1].

இவைகளுக்கு ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களும் காரணமான அஞானத்திலிருந்து வந்துள்ளன.

ஆகாசத்தின் ஸத்வகுணாம்சத்திலிருந்து காது என்ற ஞானேந்திரியமும் வாயுவின் ஸத்வாம்சத்திலிருந்துத்வகிந்திரியமும் தேஜஸ்ஸின் ஸத்வாம்சத்திலிருந்து கண்ணும் ஜலத்தின் ஸத்வாம்சத்திலிருந்து நாக்கும் பிருதிவியின் ஸத்வாம்சத்திலிருந்து மூக்கும் உண்டாயின இவ்வாறு ஐந்து ஞானேந்திரியங்கள் உண்டாயின ஆகாசம் முதலான ஐந்து பூதங்களின் ஸத்வாம்சங்களும் ஒன்றுசேர்ந்து அதிலிருந்து அந்தக்கரணம் உண்டாயிற்று. இது நான்குவகைப்பட்டது. மனது, புத்தி, சித்தம் அகங்காரம் என. புத்தியில் அகங்காரமும், மனதில் சித்தமும் உள் அடங்கியவை.

இப்படியே ஆகாசம் முதலிய ஐந்து பூதங்களின் ரஜோ குணாம்சங்களிலிருந்து தனித்தனியாக முறையே வாக்கு, கை, பாதம், பாயு உபஸ்தம் என்ற ஐந்துகர்மேந்திரியங்கள் உண்டாயின ஆகாசம் முதலியவைகளின் ரஜோகுண அம்சங்கள் எல்லாம் சேர்ந்து உண்டானது பிராணன் இது பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், என்று ஐவகைப்படும். இப்படிப்பட்ட 5 ஞானேந்திரியங்கள்,

ரியங்களுக்குப் புலப்படாததால ஸூக்ஷ்ம பூதங்களெனறும. மறற பூதங்களின கலப்பிலலாததால் தனமாத்ரைகளெனறும பஞ்சீகரணமாகாததால அபஞ்சீக்ருதமென்றும் பெயர். பஞ்சீகரணம்பறறி பினனல் கூறப்படும

5 கர்மேந்திரியங்கள், 5 பிராணன்கள், மனது, புத்தி இவைகள் ஒன்று சேர்ந்து 17 அவயவங்கள் அடங்கிய சூக்ஷ்ம சரீரம், லிங்க சரீரம் என்றும் சொல்லப்படும். இதுதான் விஷய போகத்துக்கு ஸாதனமானது. இந்த சூக்ஷ்ம சரீரத்தில் இருக்கும் நிலை ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் ஸ்வப்னவஸ்தையாகும். இதில் விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம், பிராணமயகோசம் ஆகிய மூன்றும் உள்ளது இதுவே சூக்ஷ்மத்தின் சிருஷ்டியாகும்.

இனி ஸ்தூலத்தின் சிருஷ்டியைப் பார்ப்போம். தமோ குணத்தை ப்ரதானமாகக் கொண்ட ஐந்து பூதங்களில் ஒவ்வொன்றையும் இரண்டு பாதியாகப்பிரித்து ஒரு பாதியை மட்டும் மறுபடியும் நான்கு பாகமாகப் பிரித்து இந்த நான்கு பாகங்களையும் மற்ற நான்குபூதங்களுடன் சேர்த்துவிடுவதற்கு பஞ்சிகரணம் என்று பெயர் இந்த முறையால் ஒவ்வொரு பூதத்திலும் ஐந்து பூதங்களின அம்சங்களும் உள்ளன இவற்றிற்கு பஞ்சீக்ருத பூதங்கள் என்று பெயர். பஞ்சீகரணத்திற்கு முன் ஸூக்ஷ்மமாக இருந்த பூதங்கள் பஞ்சீகரணத்திற்குப்பின் ஸ்தூலமாகிவிடுகின்றன.

இதன் விளக்கமாவது :—

பிருதிவி என்ற பூதத்தில் பிருதிவி $\frac{1}{2}$, ஜலம் $\frac{1}{8}$, தேஜஸ் $\frac{1}{8}$, வாயு $\frac{1}{8}$, ஆகாசம் $\frac{1}{8}$ பிருதிவி ஒன்று.

அப்பு என்பதில் அப்பு (ஜலம்) $\frac{1}{2}$, பிருதிவி $\frac{1}{8}$, தேஜஸ் $\frac{1}{8}$, வாயு $\frac{1}{8}$, ஆகாசம் $\frac{1}{8}$ அப்பு ஒன்று.

இப்படியே, தேஜஸ் வாயு, ஆகாசம் இவற்றிலும் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த ஐந்து பூதங்களிலும் ஒவ்வொன்றிலும் மற்ற பூதங்களின் அம்சம் $\frac{1}{8}$ பாகம் இருந்தாலும் எந்த பாகம் அதிகமாக ($\frac{1}{2}$யாக) இருக்கிறதோ அதுதான் அதற்குப் பெயர். இப்படி ஐந்தாக்கப்பட்ட பூதங்களால் பிரம்மாண்டம், அதில் உள்ள 14 உலகங்கள், அவைகளில் உள்ள அண்டஜம் (முட்டையிலிருந்து உற்பத்தியாகும் பக்ஷிகள் முதலியவை) ஜராயுஜம் (கர்ப்பாசயத்திலிருந்து உண்டாகும் மனிதன், மிருகம் முதலியவை, ஸ்வேதஜம் (புழுக்கத்தினால் உண்டாகும் புழு பூச்சி முதலியவை) உத்பிஜ்ஜம் (பூமியைப் பிளந்து மேலே வரும் தாவரம்) என்ற

நான்கு வகை ஸ்தூல சரீரங்கள், அன்னம் முதலிய போகப் பொருள்கள் உண்டாயின. இந்த ஸ்தூல சரீரத்தில் ஜீவன், ஈசுவரன் இவர்களின் இருத்தலே விழிப்பு எனப்படும் இந்த ஸ்தூலசரீரம் அன்னமயகோசம் என்பது. இப்படி ஸ்தூலத்தின் சிருஷ்டி ஏறபட்டது.

இந்த ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்கள் ஒவ்வொன்றும் வ்யஷ்டி (தனிப்பட்டது) ஸமஷ்டி (சேர்ந்தது) என்று இரு வகையானது. உதாஹரணம: வனம், கிராமம் என்றால் ஸமஷ்டி. மரம், வீடு என்றால் வியஷ்டி, இப்படியே ஒவ்வொரு சரீரமும் வியஷ்டி எல்லா சரீரங்களும் சேர்ந்து ஸமஷ்டி. வியஷ்டியில் தோன்றுவது ஜீவன ஸமஷ்டியில் உள்ளது ஈசுவரன். அதிலும் காரண சரீரத்தின் ஸமஷ்டியால் ஈசுவரன். காரண சரீரத்தின வியஷ்டியால பிராஜ்ஞன். சூக்ஷ்ம சரீரத்தின் ஸமஷ்டியால் ஹிரண்யகர்ப்பன. சூக்ஷ்ம சரீரத்தின் வியஷ்டியால் தைஜஸன். ஸ்தூல சரீரத்தின் ஸமஷ்டியால் வைசுவாநரன (விராட்புருஷன்). ஸ்தூல சரீரததின் வியஷ்டியால் விசுவன. இப்படி ஜீவனுக்கும ஈசுவரனுக்கும் ஒன்றாக கொன்று பேதம ஏற்படுகிறது.

இதே ஈசுவரன், ஸத்வம், ரஜஸ் தமஸ் என்ற குணங்களின் சம்பநதத்தால, பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் எனற மூன்று ரூபங்கள் கொண்டு முறையே ஜகததின் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவைகளை செய்கிறார். முன் சொல்லப்பட்ட விராட் புருஷனதான் ப்ரஹ்மா என்பது. ஹிரண்யகர்ப்பர்தான் விஷ்ணு. ஈசுவரர்தான் ருத்ரர். இப்படி பிரபஞ்சத்தின் உத்பததி கூறப்பட்டது. இதுதான் அத்யாரோபம் என்பது. இது விக்ஷேப சக்தியினால ஏறபட்ட கார்யம்.

ஆவ்ரண சக்தியினால் ஏற்பட்டது என்ன என்று பார்ப்போம். பஞ்சகோசங்களும் ஆத்மாவும் வெவ்வேறாக இருந்த போதிலும், இந்த வேறறுமையைத் தெரியவொட்டாதபடி இருள்போல் இந்த ஆவரண சக்தியானது மறைத்து விடுகிறது. ஆனால் ஈசுவரனுக்கும் ஆத்ம ஞானிகளுக்கும் மட்டும் மறைப்பதில்லை. இந்த ஆவரண சக்தி அஸத்வாவரணம் அபானாவரணம் என்று இரு விதமாகும். "வஸ்துவே இல்லை" என்று சொல்வதற்குக்காரணமாக இருப்பது, அஸத்வாவரணம். 'வஸ்துதெரியவில்லை' என்ற சொல்லுக்குகாரணமாக உள்ளது

அபானாவரணம். ஆவரண சக்தியின் கார்யமே ஸம்ஸார விருக்ஷத்துக்கு மூலகாரணம். இது விக்ஷேப சக்தியால் உண்டானது அல்ல இது மோக்ஷத்தை அடைவதற்கும் காரணமாகும். இந்த இரண்டு விதமான ஆவரணமும் தத்துவ ஞானத்தால் நீங்கும்

தத்துவஞானம் என்பது இருவகைப்படும் பரோக்ஷ ஞானம், அபரோக்ஷ ஞானம் என. குருமுகமாக உபநிஷத் மூலம் உண்டாகும் ஞானம் பரோக்ஷஞானமாகும். இதுவே சிரவணமாகும். இதனால் "வஸ்து கிடையாது" என்று முன் சொன்ன அஸத்வாவரணம் நீங்கும். அப்போது "வஸ்து இருக்கிறது" என்று சொல்லப்படும். குருவினிடம் சிரவணம் செய்வதால் சந்தேகங்கள் தெளிந்து மனனத்தால் ஒவ்வாது என்ற அஸம்பாவனையும் நிதித்யாஸனத்தால் (துடர்ந்து சிந்தனையால்) விபரீத பாவனையும் (மாறுதலான எண்ணம்) நீங்கி, தேஹமே ஆத்மா என்று முன் எண்ணியது மாதிரி, பிரம்மமே ஆத்மா என்று ஏற்படும் அறிவு அபரோக்ஷ ஞானம் எனப்படும் இதனால் "வஸ்து தெரியவில்லையே", என்ற சொல்லுக்குக் காரணமான அபானாவரணம் நாசமடைகிறது. இவ்வாறு பரோக்ஷ அபரோக்ஷ ஞானங்களால் "பிரம்மம் இல்லை" "பிரம்மம் தெரியவில்லை" என்ற இருவகை எண்ணங்களுக்குக் காரணமான இருவகை ஆவரணங்களும் நாசமடைகின்றன. அப்போது துன்பங்கள் நீங்கி ஆனந்தம் உண்டாகிறது. இவ்வாறு ஒரு ஜீவன் மோக்ஷமடைவதற்கு ஏழு அவஸ்தைகளுள்ளன. அவைகளாவன :—

1 மூல அக்ஞானம் (முக்குணங்களுள்ளது)

2. ஆவரணம் (உண்மையின் மறைவு)

3. விக்ஷேபம் (பொய்த்தோற்றம்)

4. பரோக்ஷஞானம் (கேள்வி ஞானம்)

5. அபரோக்ஷஞானம் (ஸாக்ஷாத்காரம்)

6. சோகநிவ்ருத்தி (துக்கம் விலகல்)

7. எல்லையற்ற ஆனந்தமடைதல்

இனி "அபவாதம்" என்பது பற்றி அறிவோம் காரணத்தைக்காட்டிலும் வேருக காரியம் இல்லை" என்ற அறிவினுல் கிளிஞ்சலில் வெள்ளி இல்லாதது போலும் பழுதையில் பாம்பு இல்லாததுபோலும் "பிரம்மத்தில் பிரபஞ்சம் என்பதும் இல்லை" என்று விலக்குவது அபவாதம் எனப்படும் எது இல்லையோ அது "மாயை" எது இருப்பதில்லையோ அது "அவித்யை" என்று மாயா, அவித்யா பதங்களின் பொருள் கிடைப்பதால் மாயை கல்பிதம் (பொய் உண்மையல்ல) என்பது தீர்மானமாகிறது. இவ்வாறு நன்கு விசாரித்து எவனொருவன் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேருக ஒரு பொருளும் இல்லை அந்த ப்ரஹ்மம் நான்தான் என்று தெரிந்துகொள்கிருனே அவன்தான் ஜீவன்முக்தன்.

॥ द्वितीयवर्णकम् ॥

अथ द्वितीयवर्णकेऽनुबन्धचतुष्टयमुच्यते । विषयः प्रयोजनं संबन्धोऽधिकारी चेत्यनुबन्धचतुष्टयम् । अस्य वेदान्तशास्त्रस्य ब्रह्मैव विषयः । मोक्ष एव प्रयोजनम् । प्रतिपाद्यप्रतिपादकभावो बोध्यबोधकभावो वा संबन्धः । साधनचतुष्टयसंपन्नोऽधिकारी । यथा बृहस्पतिसवने ब्राह्मण एव, राजसूये क्षत्रिय एव, तथा वेदान्तशास्त्रे साधनचतुष्टयसंपन्न एवाधिकारी । नित्यानित्यवस्तुविवेक इहामुत्रार्थफलभोगविरागः शमादिषट्कं मुमुक्षुत्वं चेति साधनचतुष्टयम् । 'ब्रह्मैव नित्यम्, जगदनित्यम्' इति श्रुतिस्मृतिपुराणादिना स्वयमेव जायमानं ज्ञानं नित्यानित्यवस्तुविवेकः । 'इह स्रक्चन्दनादिविषयभोगः अमुत्राप्सरःस्त्रीविषयादिभोगश्चेत्युभयमप्यनित्यम्' इति श्वान्ताशनमूत्रपुरीषादिवत्तत्र वैरस्यमिहामुत्रार्थफलभोगविरागः । शमदमोपरतितितिक्षासमाधानश्रद्धा इति शमादिषट्कम् । शमो नाम श्रवणादि-

बोधयति । अस्याधिकारिणः साधनचतुष्टयं च बहुजन्मार्जितपुण्यपुञ्जपरिपाकवशादीश्वरानुग्रहेण लब्धमिति वेदितव्यम् । एतत्तत्त्वज्ञानप्रदायक गुरुमीश्वरमेव विद्यात् । एवं यो गुरुमुखाज्जीवात्मपरमात्मनोरभेदं विचार्य जानाति स एव मुक्तिं गमिष्यतीति सिद्धम् ॥

इति द्वितीयवर्णकम् ॥

இரண்டாவது வர்ணகம்

— ❊ —

இப்போது நான்கு அனுபந்தங்கள் எவை என்பதுபற்றி விசாரிப்போம்.

ஒருவன் ஒரு புஸ்தகத்தை வாசிக்கவேண்டுமானுல் அது பற்றிய நான்கு விஷயங்கள் அவனுக்கு முன்னதாகத் தெரிய வேண்டும். அவை தெரிந்தால்தான் அதை வாசிக்க அவன் முனைவான். இல்லாவிடில் அதை வாசிக்கமுற்படமாட்டான். ஆகவே ஒவ்வொரு நூலிலும் முதலில் இந்நான்கையும் கூற வேண்டும். அவையாவன :—

1. இதில் சொல்லப்படும் விஷயம்.
2. இதைப் படிப்பதால் ஏற்படும் பிரயோஜனம்.
3. இந்த கிரந்தத்துக்கும் இதில் குறிக்கப்படும் விஷயத்துக்கும் உள்ள ஸம்பந்தம்.
4. இதைப் படிப்பதற்கு யார் தகுதி உள்ளவர் என்பது.

இதற்குத்தான் நான்கு அனுபந்தங்கள் (துடர்ச்சிகள்) எனப்பெயர். வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லப்படும் விஷயம் "பிரம்மம்" இதைப் படிப்பதனுல் அடையக்கூடிய பிரயோஜனம் மோக்ஷம். இதைத் தெளிவுபடுத்துவது ஸம்பந்தம் ஸாதன சதுஷ்டயம் உள்ளவர்கள் இதைப்படிக்க யோக்கியதை உடையவர்கள்.

பிருஹஸ்பதிஸவம் என்ற யக்ஞம் செய்வதற்கு பிராம்மணர் தான்யோக்கியதை (அதிகாரம்) உடையவர். ராஜஸூய யாகம்

செய்வதற்கு க்ஷத்திரியனுக்குத்தான் யோக்கியதை உண்டு. அதுபோல் வேதாந்த சாஸ்திரத்தை படித்து அறிவதற்கு நான்கு ஸாதனங்களை உடையவனே யோக்கியதை உள்ளவனாவான்.

நித்யாநித்ய வஸ்துவிவேகம் இஹாமுத்ரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்கம், முமுக்ஷுத்வம் இவைகளே இந்த நான்கு ஸாதனங்களாகும்,

1. நித்யா நித்ய வஸ்து விவேகம்' இது அழிவற்றது, இது அழிவுள்ளது என்ற அறிவு அதாவது பிரம்மம் ஒன்றே அழிவற்றது, ஸத்யம், ஜகத் (உலகம், சிருஷ்டியில் அடங்கியது எல்லாம்) அழிவுள்ளது பொய் என்று சுருதி (வேதம்) ஸ்ம்ருதி (தர்ம சாஸ்திரம்), புராணங்கள் இவைகள் மூலம் ஏற்படும் அறிவு.

2. இஹ அமுத்ர பல போக விராகம்: இந்த உலகத்திலும் பரலோகத்திலும் கிடைக்கக்கூடிய விஷயபோகங்களில் பற்றற்ற நிலைமை. அதாவது இந்த உலகத்தில் கிடைக்கும் ஸ்திரீ. சந்தனம், பூமாலை முதலிய விஷயங்களின் அனுபவம், மேலுலகங்களில் கிடைக்கும் அப்ஸரஸ் ஸ்திரீ முதலிய விஷய சுகானுபவம் இவை இரண்டும் அழிவுள்ளவை என்று தெரிந்து கொண்டு இவைகளில் வெறுப்பு அடைதல். இந்த வெறுப்பு எப்படி இருக்கவேண்டுமென்றால், நாய் கக்கிய அன்னம், மூத்திரம், மலம் இவைகளைக்கண்டால் ஒருவன் மனதில் எவ்வளவு அருவருப்புக் கொள்வானோ அதுபோல் மேலே சொன்ன இருவகை சுகங்களையும் பற்றி மனதில் வெறுப்புக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. சமம், தமம், உபரதி, திதிக்ஷா, ஸமாதானம், சிரத்தை ஆகிய ஆறு குணங்கள்:—

(i) சமம் என்பது மனதை வெளிவிஷயங்களில் செல்லவொட்டாமல் தடுப்பது

(ii) தமம் என்பது ஞானேந்திரியங்கள் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) கர்மேந்திரியங்கள் (கை, கால், வாக்கு பாயு, உபஸ்த்தம்) இவைகளை அடக்குதல்.

(iii) உபரதி என்பதுஸந்யாஸம் (ஸர்வகர்மபரித்யாகம்) அல்லது எவ்விதபலனையும் விரும்பாமல் கர்மாக்களை அனுஷ்டிப்பது, உலகவியவஹாரமொன்றிலும் ஈடுபடாமலிருப்பது.

(iv) திதிக்ஷா என்பது தனது பிராரப்தகர்மாவின் பலனாக ஏற்படும் சீதம், உஷ்ணம் முதலிய வேறுபாடுகளை ஸஹித்துக் கொள்ளுதல்.

(v ஸமாதானம் என்பது பிரம்மத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளும் விஷயங்களைக் கேட்பதில் மட்டும் மனதை ஈடுபடுத்தல்.

(vi) சிரத்தை என்பது குரு சொல்லும் வார்த்தையிலும் உபநிஷத் வாக்கியத்திலும் நம்பிக்கை வைத்தல்

இந்த ஆறும்தான் சமாதிஷட்கம் என்பது

4. முமுக்ஷா (மோக்ஷத்தில் ஆசை) என்பது எப்படி இருக்கவேண்டும் என்றால் ஒரு வீடு தீயினால் எரிந்துகொண்டிருக்கும்போது அந்த வீட்டிற்குள் உள்ளமனிதன் எப்படி தன் ஸம்ஸாரம், குழந்தைகள் சொத்து முதலியவைகளை உதறித் தள்ளிவிட்டு தனக்கு ஏற்பட்டிருக்கும் தீயின் வேகத்தை தணித்துக்கொள்வதிலே மட்டும் நோக்கம் கொண்டு வெளியில் ஓடிப்போய் தீயின் வேகத்தைக் குறைத்துக் கொள்ள ஆவல் கொள்வானோ அதுபோல் ஸம்ஸாரத்தில் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களினால் உண்டாகும் தாபத்தைத் தணித்துக்கொள்ள எல்லா ஆசைகளையும் அடியோடு உதறிவிட்டு பிரம்மத்துடன் ஒன்று சேர்வது என்னும் மோக்ஷம் அடைவதில் தீவிரமான ஆவல் முமுக்ஷை.

மேலேசொல்லப்பட்ட நான்கு ஸாதனங்கள் எல்லாம் ஒருவனுக்கு சேர்ந்து இருக்கவேண்டும். ஒன்றுமட்டில் இருந்தால் போதாது ஏனெனில் உலகில் சிலருக்கு "இது அழிவுள்ளது இது அழிவற்றது" என்ற அறிவு இருந்தாலும், வைராக்கியம் ஏற்படாததால் இவ்வுலகத்தில் உள்ள சுகானுபவத்திலும், பரலோகசுகங்களிலும் பற்றில்லா நிலைமை இருப்பதில்லை ஆகையால் இவ்விரண்டும் தேவை. இந்த இரண்டும் இருந்த போதிலும் சில ரிஷிகளுக்கு கோபம் தாபம் முதலியவை காணப்படுவதால் சமம் முதலிய மேலே சொன்ன 6 குணங்களும் இருக்கவேண்டும். இந்த மூன்று அம்சங்கள் மட்டும் இருந்தாலும், பக்தியினால் ஈசுவரஉபாசனையில் ஈடுபட்டுள்ள சிலருக்கு ஞானத்தைப்பெறுவதற்கு யோக்கியதை இருப்பதில்லை. ஆகவே நான்காவதான முமுக்ஷையும் (மோக்ஷம் அடைய தீவிர ஆவலும்) இருக்கவேண்டும்.

மேலே சொன்ன நான்கு ஸாதனங்களில் முதலாவது ஸாதனம் இருப்பவனுக்கு இரண்டாவது ஸாதனம் தானுக அடைய முடியும் அதுபோல் இரண்டாவது ஸாதனமுடைய வனுக்கு மூன்ருவதும், மூன்ருவது ஸாதனம் உடையவனுக்கு நான்காவதும் கிடைப்பது சுலபமாகும். ஆனுல் நான்காவது சாதனம் அடைந்தவனுக்கு முதல்மூன்று ஸாதனங்கள் தேவை இல்லை என்று அலக்ஷியம் செய்து அவைகளை விட்டுவிடக் கூடாது. முந்திய ஸாதனம் நழுவிவிட்டால் பிந்திய ஸாதனம் சாசுவதமாக நிலைக்காது. ஆகவே இந்த நான்கு ஸாதனங் களும் எப்போதும் ஒருவனிடத்தில் இருக்கவேணும். அவனே தகுந்த அதிகாரியாவான்.

இப்படிப்பட்ட யோக்கியதையை உடையவன் மரியாதை யுடன் மங்கள திரவியங்களுடன் ஸத்குருவைத்தேடி, அவரை வணங்கி அவரிடம் அடக்கத்தையும் நம்பிக்கையையும் காட்டி "ஹே ஸ்வாமி! குருவே" என்று சொல்லி "ஜீவன் என்பது யாது? ஈசுவரன் என்பது யாது? ஜகத் என்பது எப்பேற்பட்டது? இம்மூன்றும் எங்கிருந்து வந்தவை? இவை எப்படி முடிவாகும்" என்ற கேள்விகளைக் கேட்கவேண்டும். இதைத்தான் கீதையும் உபநிஷத்துக்களும் கூறுகின்றன

இப்படி சிஷ்யன் பிரார்த்திக்க, குரு பரம கருணையுடன் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் குணபேதங்களினுல் ஜீவன் ஈசுவரன் ஜகத் முதலியவை தோன்றுவதை விளக்கி ஆத்ம ஸ்வரூபத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் போதிப்பார் மேலே சொல்லப்பட்ட நான்கு சாதனங்களையும் உடைய அதிகாரியின் பெருமை யாதெனில் இவை பல ஜன்மாக்களில் செய்யப்பட்ட ஏராளமான புண்யங்களாலும் ஈசுவரனுடைய அனுக்கிரகத்தாலும் அடையப்பட்டதாகும் என்பதேயாம். இந்த பிரம்மதத்துவத்தை விளக்கும் குருவை ஈசுவரன் என்றே அறியவேணும். இப்படி எவன் குருவினிடமிருந்து உபதேசம் பெற்று ஜீவாத்மா பரமாத்மா இவ்விரண்டும் ஒன்றே என்று அறிகின்ருனே அவனே மோக்ஷம் அடைவான் என்பது தீர்மானமாகும்.

नास्ति व्यावहारिकोऽपि पारमार्थिकं विना नास्ति। तस्माद्यथा परमार्थत्वेन घटाकाशो महाकाश एव, एवं पारमार्थिकः कूटस्थः परमात्मैवेति सिद्धान्तः। एवम् यः 'नेति नेति' (बृ० २. ३.६.) इति वाक्येन देहादिपञ्चकोशेभ्यः पारमार्थिकं कूटस्थं पृथक्कृत्य तं पारमार्थिकं कूटस्थम् 'अहम्' इति जानन्मन् तम् 'अहं ब्रह्मास्मि' इति श्रुतिविचारेण युक्तिभिर्दृढनिश्चयेन च साक्षात्कृत्य तिष्ठति, स एष परिपूर्णब्रह्मस्वरूपः। तमेव पुण्यपापकर्माणि न स्पृशन्तीति सर्वा अप्युपनिषद् एकतात्पर्येण घुष्यन्ति ॥

इति तृतीयवर्णकम् ॥

மூன்ருவது வர்ணகம்

-x-

இந்த பிரபஞ்சம் எத்தனைவிதம்?

ஆத்மா, அநாத்மா என்று பிரபஞ்சம் இரண்டுவிதம்.

பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டதான ஆத்மாவை பிரபஞ்சததிறகுள் அடங்கினதாக எப்படிக்கூறமுடியும்?

சேதனம் அசேதனம் (ஜடம்) இரண்டும் சேர்ந்தததுதான் பிரபஞ்சம் என்பது. சேதனம் என்பது ஆத்மா. ஆத்மா இல்லாமல் பிரபஞ்சமில்லாததால் ஆத்மாவும் பிரபஞ்சத்தில் சேர்ந்ததுதான்.

சேதனம் எது? அசேதனம் எது?

உயிருள்ளது சேதனம். உயிரில்லாதது அசேதனம் ஜடம்

இவை ஒவ்வொன்றும் பலவிதமாகக் காணப்படுகிறதே இதை இரண்டேவிதம் என்று எப்படிச் சொல்வது என்ருல் சொல்லுவோம். ஆத்மஸ்வரூபம் அல்லாதது ஒன்றே. அது கார்யத்தின் வசமாகவே பல ரூபங்களாயிறறு. அதேபோல் ஆத்மாவும் ஒன்றேதான். இதுவே பல ரூபங்களான அநாத்ம

கார்யங்களென்ற [1] உபாதிகளால் அநேக ஜீவர்களாகவும் அநேக ஈசுவரர்களாகவும் தோன்றுகிறது.

ஜீவர்களைப்போல் ஒரே ஈசுவரன் எப்படிப் பலவாக ஆகிறான் ?

புண்ய க்ஷேத்திரங்களிலும் கிராமங்களிலும், வீடுகளிலும் சிவன் விஷ்ணு முதலான பலமூர்த்திகளாக இருப்பதினால்தான்.

மண், கல் முதலியவைகளால் செய்யப்பட்ட இந்த விக்கிரகங்களில் எவ்விதம் ஈசுவரத்தன்மை ஏற்படுகிறது ?

பலர் ஏராளமான பணத்தை செலவு செய்து இந்த மூர்த்திகளுக்கு அபிஷேகம் நைவேத்தியம் முதலியவைகளைச் செய்வதால் அவைகளில் ஈசுவரத்தன்மை உளது என்போம் எவர்களுக்கு சாஸ்திரங்களில் நம்பிக்கை கிடையாதோ அவர்கள் மிலேச்சர்களாவார்கள் அவர்களை இந்த மூர்த்தி பூஜைக்கு உதாஹரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சிரத்தை உள்ளவர்கள்தான் எல்லாவிஷயங்களிலும் உதாஹரணமாவார்கள். மேலும் மலம், மூத்திரம் முதலிய அசுத்தத்துடன் கூடிய இந்த சரீரத்தையே ஆத்மா என்று எண்ணும்பொழுது முற்றிலும் சுத்தமான மூர்த்திகளை ஈசுவரனாக எண்ணுவதில் என்ன தோஷம் ?

ஒரே அநாத்ம வஸ்து பல காரியங்கள் ரூபமாக அநேகமாக ஆவதற்கும், ஒரே ஆத்ம வஸ்து அந்த அநாத்ம கார்யங்கள் என்னும் பல உபாதிகளால் அநேகமாக ஆவதற்கும் திருஷ்டாந்தம் உண்டா ? ஆம் இருக்கிறது அதை காட்டுகிறோம். பிருதிவீ ஒன்றுதான். ஆனாலும் அது பலகாரியங்களாக மாறும்பொழுது ஒரே பிருதிவி, மலை, மரம், கோபுரம், சுவர், நெற்குதிர், வீடு, மடம், குடம், சட்டி இது முதலான பல ரூபங்களாக ஆகிவிடுகிறது. இதுபோலவே மூலப்ரக்ருதி என்ற அநாத்ம வஸ்து ஒன்றாக இருந்தபோதிலும் அது பிரபஞ்சமாக மாறும்பொழுது மூலப்ரக்ருதியின் கார்யமான பிரபஞ்சம் பலவாக இருப்பதால் மூலப்ரக்ருதியும் பலவாக ஆகிவிடுகிறது என்று சொல்கிறோம்.

1. ஒரு வஸ்து பலவாகத் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கும் வஸ்துவிற்கு உபாதி என்று பெயர். ஒரே சந்திரன் பல பாத்திரங்களிலுள்ள ஜலங்களில் பிரதிபிம்பிக்கும்பொழுது பலவாகக் காணப்படுகிறான். சந்திரனுக்கு ஜலம் உபாதியாகும் ஒரே ஆகாசம் கடாகாசம், மடாகாசம், கிருஹாகாசம் என்று பலவாக தோன்றுவதற்கு குடம் முதலியவை உபாதிகளாகும் இதுபோல ஆத்மா ஒன்றாக இருந்தாலும் அநாத்ம காரியங்கள் என்ற உபாதி பலவாக இருப்பதால் ஆத்மாவும் பலவாகக் காண்கிறது. உண்மையில் வஸ்து ஒன்றுதான். உபாதிகள்தான் அநேகம்,

இனி ஒரே ஆத்ம வஸ்து உபாதிகளால் அநேகமாக ஆவதற்கு திருஷ்டாந்தம் கூறுகிறோம். எங்கும் பரவியுள்ள ஆகாசம் ஒன்றாக இருந்தபோதிலும் பிருதிவியின் காரியங்களுடன் அது சேரும்பொழுது குடத்திற்குள் உள்ள ஆகாசம், மடத்திற்குள் உள்ள ஆகாசம், என்று பலவாகத் தோன்றுகிறது அதேபோல் ஆத்மா ஒன்றாகவே இருக்கிறது. ஆனாலும் இது பல சரீரங்களுள் புகுந்துகொண்டதுபோல் தோன்றும்பொழுது தேவன், மனுஷியன், ராமன், கிருஷ்ணன், பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், பசு, பக்ஷி, பூச்சி, புழு என்று பல வகையான தோற்றத்தை அளிக்கிறது. இது அவச்சின்ன பக்ஷத்திற்கு அதாவது ஆத்மா தொடர்ந்து எல்லா இடத்திலும் உள்ளது என்று சொல்லும் கக்ஷிக்கு உதாஹரணமாகும். ஜீவன் பிரதிபிம்பம் என்று சொல்லும் மற்றொரு கக்ஷி உள்ளது. இதற்கும் ஒரு உதாஹரணம் சொல்லலாம் ஒரே ஜலம் ஸமுத்ரம், தடாகம், கிணறு, குடத்து ஜலம் என்று பல இடங்களில் பலவாக ஆகிவிடுகிறது. அதுபோல் ஒரே அநாத்மாவும் பலவாக ஆகியிருக்கிறது. சூரியன் ஒருவனாக இருந்த போதிலும் எவ்விதம் ஸமுத்ரம் முதலியவைகளில் பலவாக பிரதிபிம்பம் காணப்படுகிறதோ அதுபோல் ஆத்மா ஒன்றாக இருந்தாலும் ஒவ்வொரு சரீரத்திலும் அந்தக்கரணத்தில் பிரதிபிம்பிக்கும் பொழுது அநேகமாகத்தோன்றுகிறது எனக்கூறலாம் ஆனாலும் ஜலத்தின் தன்மையான உஷ்ணம் குளிர்ச்சி, ஓட்டம் இவைகள் அந்த ஜலத்தில் தோன்றும் சூரியனுடைய பிரதிபிம்பத்திற்குச் சேருமே தவிர பிம்பமான சூரியனுக்கு எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணாது. அதுபோலவே, மனிதனுடைய அந்தக்காரணத்துக்கு ஸம்பந்தப்பட்ட சுக துக்கானுபவம் முதலிய மாறுதல்கள் அந்த அந்தக்கரணத்தில் பிரதிபிம்பித்த ஜீவனைச் சேருமே தவிர பிம்பரூபமான ஆத்மாவுக்கு இவை எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணாது ஆகையால் ஜீவாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே ஜீவாத்மா என்போம். அது எப்படியெனில், குடத்தில் உள் அடங்கி இருக்கும் ஆகாசமே

ஆக்குடத்துக்கு வெளியில் உள்ள ஆகாசம் வெளியில் உள்ள ஆகாசமே குடத்துக்குள்ளேயும் உள்ளது. என்பதுபோல் அறியவும்.

கேள்வி:—ஜீவாத்மா உண்டாக்கப்பட்டது (கல்பிதம்). எது உண்டாக்கப்பட்டதோ அது உண்மைப்பொருளல்ல பொய்யானது. அப்படி இருக்க உண்மையான பரமாத்மாவும் கல்பிதமான ஜீவாத்மாவும் ஒன்றுதான எனறு எப்படிச் சொல்லலாம்?

பதில:— ஜீ வ ன் மூவகைப்படும்.

(1) பாரமார்த்திகன் (முற்றிலும் உண்மையானது)

(2) வ்யாவஹாரிகன் (காரியகாலத்தில் இருப்பது)

(3) பிராதிபாஸிகன் (தோன்றும் காலத்தில் மட்(இருப்பது.)

இவை ஸுஷுப்தி (ஸ்வப்னமில்லாத நித்ரை) விழித்திருக்கும் காலம், ஸ்வப்னகாலம் இம்மூன்றிலும் முறையே சேர்ந்தவை. உதாஹரணமாக ஜலத்தில் அலை உண்டாகிறது அப்படி உண்டான அலையில் நுரை தோன்றுகிறது. இது போல் பாரமார்த்திக ஜீவனிடத்தில் வியாவஹாரிக ஜீவனும் வியாவஹாரிக ஜீவனிடததில் ப்ராதிபாஸிக ஜீவனும் கல்பிதம் வாஸ்தவததில் ஜலமேதான் அலையாகவும் நுரையாகவும் தோனறுகிறதே தவிற ஜலத்தைககாட்டிலும் வேருக அலை கிடையாது. அலையைக்காட்டிலும் வேருக நுரை கிடையாது இதுபோல பாரமார்ததிக ஜீவனைக்காட்டிலும் வேருக வியாவஹாரிக ஜீவனும் வியாவஹாரிக ஜீவனைக்காட்டிலும் வேருக ப்ராதிபாஸிக ஜீவனும் கிடையாது. பாரமார்த்திக ஜீவன்தான் மற்ற இரு ஜீவர்களாகவும் தோனறுகிறது. மேலும் இனிப்பு, குளிர்ச்சி, முதலியவை ஜலத்தைச்சேர்ந்தவைதான். அவை அலையிலும் அதன் மூலம் நுரையிலும் தோன்றுகிறது.

அதுபோலவே சுத்த ஜீவனைச்சேர்ந்த இருப்பு, ஞானம், ஆனந்தம் இவை விழிப்பு நிலையிலுள்ள ஜீவனிடமும் அதன் மூலம் ஸ்வப்பனத்தில் உள்ள ஜீவனிடமும் தோன்றுகிறது. ஆகையால் எப்படி குடத்திற்குள் உள்ள ஆகாசம் குடத்திற்கு வெளியில் உள்ள ஆகாசமேதான் என்கிருேமோ

அதுபோல் ஜீவபேதங்களில் தோற்றமளிக்கும் ஆத்மாவும் பரமாத்மாவேதான் என்று தீர்மானம் ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் பிரும்மம் என்பது எது என்ற கேள்விக்கு பதில் சொல்லுகையில் நேதி நேதி "இதுவல்ல இதுவல்ல" என்ற விலக்கிசொல்லும் வழியே கூறப்பட்டது அந்தவிதமாக அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞானமயம், ஆனந்தமயம் என்ற ஐந்து கோசங்களிலிருந்தும உண்மைப் பொருளான ஆத்மவஸ்துவைப்பிரித்து, அதையே "நான்" என்று அறிந்துகொண்டு பிறகு வேதாந்த விசாரங்களாலும் யுக்திகளைக்கொண்டு மனனம் செய்வதாலும் "சுத்தாத்மாவே ப்ரஹ்மம் அதுவே நான்" என்று உறுதியாகத்தெரிந்து கொண்டு நேரில் காண்கிறவன் பூர்ணப்ரஹ்மமாக ஆகி விடுகிருன். புண்யமோ, பாபமோ ஒன்றும் அவனைபாதிக்காது என்று எல்லா உபநிஷத்துக்களும் ஒரே அபிப்ராயமாக முறையிடுகின்றன.

॥ चतुर्थवर्णकम् ॥

—※—

इदानीमस्य जीवस्य दुःखं च जन्म च कर्म च रागद्वेषादि चाभिमानश्चाविवेकश्चाज्ञानं चेत्येतेषु पूर्वंपूर्वं प्रति उत्तरोत्तरं हेतुः; तत्र दुःखादिचतुष्टयं चतुर्थपञ्चमवर्णकयोर्विचार्यते ॥

जीवात्मनो दुःखं स्वाभाविकं वा आगन्तुकं वेति चेत्, आगन्तुकमिति ज्ञेयम्। स्वाभाविकमिति चेदनेकदोषाः सन्ति। तत्कथमिति चेत्। अस्य जीवात्मनो दुःखं स्वाभाविकं चेद्दुःखनिवृत्तिः कदाचिदपि न स्यात्; सुखमपि कस्यापि न स्यात्। दुःखनिवृत्त्यै सुखप्राप्त्यै च कस्यापि कर्म न स्यात्; सत्कर्मयोगध्यानोपासनेषु कस्यापि प्रयत्नो न स्यात्; वेदशास्त्रपुराणानि च व्यर्थानि स्युरिति जानीहि। ननु दुःखं स्वाभाविकमस्तु तन्निवृत्त्यै च प्रयत्नं

जन्माभावे दुःखाभावः । दुःखाभावे आनन्दाविर्भाव इत्ययमेव सिद्धान्तः ॥

इति चतुर्थवर्णकम् ॥

நான்காவது வர்ணகம்

—×—

ஜீவனுக்கு ஏழுவிதமான பந்தங்கள் ஏற்படுகின்றன. அவையாவன :— 1. துக்கம், 2. பிறவி, 3. கர்மா, 4. ராகம் (ஆசை) துவேஷம், (வெறுப்பு) முதலான தோஷங்கள், 5. அதிகமான பற்றுதல், 6. அவிவேகம், 7. அக்ஞானம், என்பவை. இவைகளில் முந்தியதற்குப் பிந்தியது காரணமாகிறது. இவை ஒவ்வொன்றும் எத்தகையது என்பதையும் அது எப்படி அடுத்ததற்குக்காரணமாக ஆகிறது என்பதையும் கீழே காண்போம். இந்த 4வது வர்ணகத்தில் மேலே சொன்னவற்றில் முதல் இரண்டும், 5வது வர்ணகத்தில் 3, 4ம் 6வது வர்ணகத்தில் 5, 6, 7ம் விவரிக்கப்படும்.

ஜீவாத்மாவுக்கு ஏற்படும் துக்கம் அதற்கு சுபாவமானதா (இயற்கையானதா) அல்லது செயற்கையா (பின்னால் வந்து அடைந்ததா) என்று கேட்டால் அது செயற்கையே தவிர அதற்கு அது சுவபாவமானது அல்ல என்று அறியவேண்டும். துக்கம் அதற்கு சுவபாவமானதே என்று ஏற்றுக்கொண்டால் அதில் பல தோஷங்கள் வருகின்றன. துக்கம் சுவபாவமாக உள்ளது எனில் அந்த துக்கத்தைக் கடக்கவோ மாற்றவோ முடியாததாகும். யாருக்கும் சுகம் என்பதே கிட்டாது, என்று ஏற்படும். துக்கத்தை நிவர்த்திக்கவும், சுகத்தை அடையவும் எவ்வித பிரயத்னமும் இருக்காது. நல்லகாரியங்களை செய்தல், யோகம், தியானம் தெய்வத்தை உபாஸித்தல் இவைகளில் யாருக்கும் முயற்சி இருக்காது. வேதம், சாஸ்திரம் புராணம், இதிஹாஸம் முதலியவையும் பயனற்றதாக ஆகிவிடும்.

துக்கம் இயற்கையாயுள்ளதாகவே இருக்கட்டுமே. அதைத் தீர்க்க பிரயத்னமும் செய்யட்டுமே என்றால் அது ஒருக்காலும் பொருந்தாது. ஏனெனில் இயற்கை என்பது

தன் ஸ்வரூபமானதால் அப்படிப்பட்ட இயற்கையை அழிக்க யார் தான் யத்தனம் செய்வார்கள்? இயற்கையான ரூபமே அழிந்து விட்டால் பலனை அடைவது யார்?

இயற்கையாக உள்ளதுதான் அதன் ஸ்வரூபம் என்பது எப்படி எனில் சொல்லுவோம். வெல்லத்துக்கு தித்திப்பு என்பது இயற்கையான குணம். அந்த தித்திப்பை ஒழித்து விட்டால் வெல்லம் என்ற வஸ்துவுக்கே கேடு ஏற்படுமல்லவா? அதுபோல் ஜீவனுக்கு துக்கம் இயற்கையானது என்று ஒப்புக்கொண்டால் அந்த துக்கம் நாசமடையும்போது அந்த ஆத்ம ஸ்வருபத்துக்கே நாசம் ஏற்பட்டுவிடுமல்லவா? ஆனால் ஆத்மா என்பது அழிவில்லாதது. இதைப்பற்றி உள்ள வேத வாக்கியங்களே இதற்கு ஆதாரமாகும். ஆகையால் ஆத்மாவுக்கு துக்கம் இயற்கையானதல்ல. செயற்கையேதான் என்று அறியவும்.

கேள்வி :— இயற்கையான ஸ்வபாவம் மட்(நாசமாகி ஸ்வருபம் மிஞ்சமுடியாதோ?

பதில் :— அது முடியாது.

கேள்வி:— ஏன்? உதாஹரணமிருக்கிறதே. அக்னிக்கு உஷ்ணம் இயற்கையாக உள்ளது. மந்திரத்தினாலும் ரத்னத்தாலும் ஜாலவித்யையினாலும் இந்த உஷ்ணம் இல்லாமல் ஏற்படுகிறதலலவா. அக்னியின ஸ்வருபம் போய்விடுவதில்லை அதுமாத்திரமல்ல. குளிர்ச்சியையும் அடைகிறது. அதுபோல், ஆத்மாவுக்கு துக்கம எனபது இயற்கையாகவே இருககட்டுமே. அது விசேஷமான கர்மாவினாலும், யோகம் உபாஸனை, இவைகளின் சக்தியினாலும் நீக்கப்படட்டுமே சுகமும் ஏற்படட்டுமே?

பதில் :— மேலே சொன்ன நீக்கப்பட்ட
மானது சிறிது காலம் மட்டும் உள்ளது. நிரந்தரமாக இருப்பது அல்ல, எப்படி எனில், கர்மாவினால் ஏற்படும் எதுவும் அந்தக் கர்மா போனால் உண்டாக்கப்பட்ட வஸ்துவும் போய்விடும். மேலே சொன்ன கேள்வியில் காட்டிய அகனி உதாஹரணத்தில் மணி, மந்திரம் இவைகளினால் உஷ்ணம நீங்கி குளிர்ச்சி ஏற்பட்டாலும் அந்த மணி மந்திரம் இவைகள் போய்விட்டால் மாறுதலும் மறைந்து

போகும். அக்னிக்கு குளிர்ச்சி விலகி, மறுபடியும் இயற்கையான உஷ்ணத்தன்மை ஏற்பட்டுவிடும். அதேபோல், நல்ல கர்மாவினாலும் உபாஸனையினாலும் ஏற்படும் சுகரூபமான மாறுதலும் அந்தக் கர்ம உபாஸன யோகங்கள் முடியும்போது மறைந்துபோய் இயற்கையான துக்க ரூபமே மிஞ்சும். ஆகவே எல்லா ஜீவர்களுக்கும் தாத்காலிகமாக (சிறிது காலம் வரை) சுகம் தோன்றுமே தவிர சாசுவதமான மறுஜன்மமற்ற சுகமாகிய மோக்ஷம் கிட்டாது.

மேலும், மோக்ஷ சுகம் என்பது, உத்பத்தியாகக் கூடியது என்று ஏற்படுமாகில் அது அநித்யமாகும். வேதத்தில் न च पुनरावर्तते (மறு பிறப்பு அடைவதில்லை மோக்ஷம் என்பது சாசுவதமானது) என்றும். अखण्डमानन्दमरूपमद्भुत (இது பூர்ணமாக உளது. ஆனந்த ரூபமானது இதற்கு ரூபம் கிடையாது இது ஆச்சரியமானது) என்றும் சொல்லப்பட்ட வாக்கியங்களின தாத்பரியத்துக்கு பாதகம் ஏற்படும்,

தவிர, ஆத்மாவுக்கு துக்கம் இயற்கை என்று சொன்னால், நன்றாகத் தூங்கும்போதும் (ஸுஷுப்தியில்) சும்மா இருக்கும் போதும், யோகிகள் ஸமாதியில் இருக்கும்போதும் துக்கமே தோன்றும். வாஸ்தவததில் அமமாதிரி இல்லை. ஆனால் மேலே சொனன நிலைகளிலிருந்து நீங்கி வெளியில் வந்த ஒவ்வொருவரும் "இதுவரை நான் சுகமாகவே இருந்தேன்" எனறு தம் அனுபவத்தைப்பற்றி சொல்கிறார்கள். ஆகையால் ஆதமாவுக்கு ஸுகம் எனபதுதான் இயற்கையானது. துக்கம் எனபது செயற்கைதான் என்பது தீர்மானம்.

இந்த துக்கம் ஸுகஸ்வரூபனான ஆத்மாவுக்கு எப்படி உண்டாயிற்று என்று கேட்டால் சரீரத்தை அடைதலால் என்று பதில் சொல்வோம். எங்கு எங்கு எல்லாம் சரீரத்தைப் பெருகிறதோ அங்கு அங்கெல்லாம் துக்கம் ஏற்படுகிறது என்பதை உலகில் காணலாம்.[1]

கேள்வி:— அப்படியானால் அரசர் முதலியவர்களுக்கும் சரீரத்தால் துக்கமுண்டாகிறதா ?

---

1. எங்கு எலலாம புகை காணபபடுகிறதோ அங்கு எலலாம நெருப்பு இருக்கிறது. இதற்கு வியாபதி எனறு பெயா நெருபபு இலலாமல புகை ஏறபடுவதிலலை இநத வியாபதியைககொணடு புகைககு நெருபபுககாரணமெனறு தீாமானிககிறோம் இதுபோல சரீரமுள்ள இடங்களில எலலாம துககம ஏறபடுவதாலும சரீரமிலலாமல துக்கம ஏற்படாததாலும துக்கததிற்கு சரீரம காரணம என்று தீர்மானிக்கலாம.

பதில்:— ஆம் அவர்களுக்கும் சத்துருக்களினால் கெடுதல், அரசாங்க நிர்வாகம், விளைச்சல் இல்லாமை, பணம் இல்லாமை, அவர்களுடைய மனைவி மக்கள் இறப்பது தனக்கு வரும் மூப்பு, மரணம் இவைகள் அரசர்களுக்கு துக்கத்தை உண்டுபண்ணுகிறதல்லவா. உலகில் "சிலர் சுகமாக இருக்கிறார்கள்" என்று சொல்லப்படும் வார்த்தை அறியாமையால் ஏற்பட்டது. ஏனெனில் மூட்டையை தூக்கிக் கொண்டு போகிறவன காரியத்தின் அவசியத்துக்காக வெகு தூரம் வேகமாக ஓடுகிறான். அது போலவே எப்போதும் சிலர் உழவு, பயிரிடுதல் முதலிய வேலையில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் எல்லோருமே அவரவர்களின் காரியங்களில் துக்கம் ஏற்பட்டிருந்தும் அறிவின்மையினால் (தனனையே ஏமாற்றிக் கொண்டு) அவ்வப்போது செய்யப்படும் காரியங்கள் கஷ்டமானவையாயினும் அதை சுகமாகவே எண்ணிக்கொண்டு சநதோஷததுடன், உத்ஸாகத்தை வெளிப்படுத்தும் பாட்டு பாடிககொண்டிருக்கிறார்கள். ஆகவே அறிவின்மையினால், துக்கம சுகம போல தோற்றத்தை அளிக்கிறது என்று அறிய வேண்டும.

அப்படியானால் விவேகிகளுக்கும் (பகுத்தறிவு உள்ளவர்கள்) சரீரம் அடைவதால் துககம் உண்டோவெனில், இருக்கிறது என்று தான சொல்லவேணும், அவர்களுக்கும், பசி, தாகம், சீதம, உஷ்ணம, வியாதி, பாம்பு, தேள், புலி முதலியவைகளினால் துககம் உண்டாகிறதல்லவா ?

அப்போது, விவேகிக்கும், அக்ஞானிக்கும் என்ன வித்யாஸம எனில், அவர்களுள் வெளிவிஷயங்களில் வித்யாசம் காணப்படாதபோதிலும் மனத்தில் ஏறபடும் எண்ணத்தில் வித்யாசம் உண்டு. விவேகியான மகான் "இந்த துக்கங்கள் எல்லாம் அந்தக்கரணத்துக்கு சம்பந்தமானவையே தவிர, ஆத்மாவுக்கு சம்பந்தமில்லை. ஆத்மா என்பது நித்யமானது, ஞானமயமானது, ஆனந்த ரூபமானது; இதற்கும் அந்தக் கரணத்தை பாதிக்கும், பொய் அறிவின்மை துக்கம் முதலிய அனுபவங்களுக்கும எவ்வித சம்பந்தமும் இல்லை" என்று வேதவாக்கியம், யுக்தி, அனுபவங்களால், விசாரம் செய்து அறிந்துகொள்வான்.

[மனஸ், புத்தி, சித்தம், அஹங்காரம் இந்த நான்கும் சேர்ந்தது அந்தக்கரணம் எனப்படும். ஒரு விஷயத்தைப்

பற்றி யோசிக்கும்போது சந்தேகம் ஏற்படுவது மனதின் காரியம் அது இன்னது என்று நிச்சயம் செய்வது புத்தியின் காரியம். இதை முன்னமேயே தெரிந்து நினைப்பது சித்தத்தின் வேலை. இது எனனுடையது என்று கர்வம் ஏற்படுவது அகங்காரத்தின வேலை. உலகில் சாமான்யமாக இந்த காரியங்கள் எல்லாமே மனதின வேலை என்று சொல்லி விடுகிறோம. ஒரு வஸ்துவினால் மனிதனுக்கு ஏற்படும் சுக துக்க அனுபவங்கள் மேலே சொனன நால்வகைப்பட்ட அந்தக்கரணத்தைத்தான் பாதிக்கும் அதற்கு அப்பால் உள்ள ஆத்மாவை பாதிக்காது என்பது விளக்கம்]

இந்த முடிவுக்கு வருவதற்கு ஆதாரங்களாவன —

(1) வேதவாக்கியம் असङ्गो ह्ययं पुरुषः (बृ. 4-3-15)ஆத்மா எதிலும் சம்பந்தமற்றவன்.

(11) யுக்தி : ஆத்மா சாசுவதமானது அழிவில்லாதது, இதற்கு அவயவம் இல்லை. ஆகவே இதை சுக துக்கங்கள் அணுகாது.

(111) அனுபவம் : சுஷுப்தி (ஸ்வப்னமில்லாத தூக்கம்), வேலை இல்லாமல் மனது இருத்தல், ஞானியின் ஸமாதிநிலை ஆகிய மூனறு காலங்களிலும் ஏற்படும் அனுபவம்.

விவேகமில்லாத துஷ்டன் ஆத்மஸ்வரூபத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யாமல் தேஹம் இந்திரியம் முதலியவற்றையே ஆத்மா என்று விபரீதமாக எண்ணிக்கொண்டு தேஹாதிகளிலுள்ள தர்மங்களை ஆத்மாவிலும் ஆத்மாவில் உள்ள ஸச்சிதானந்த தர்மங்களை தேஹாதிகளிலும் ஏற்றி ஒன்றை மற்றொன்றுடன் தப்பாக கலந்துகொண்டு ‘நான் தேவன்’ ‘நான் மனிதன்’ ‘நான் ஆந்திரன்’ ‘நான் தமிழன்’ ‘நான் பிராஹ்மணன்’ ‘நான் க்ஷத்திரியன்’ ‘நான் வைசியன்’ ‘நான் சூத்திரன்’ ‘நான் பிரம்மசாரி’ ‘நான் கிருஹஸ்தன்’ ‘நான் வானப்ரஸ்தன்’ ‘நான் சந்நியாசி’ என்ற பிரகாரமாக ஜாதிவர்ணாசிரம எண்ணங்களுடன் கூடியவனாக ஆகிறான். இம்மாதிரி விவேகிக்கும் அவிவேகிக்கும் பற்பல வித்யாஸங்கள் உண்டு. இன்னும் யோசித்துப் பார்த்தால் இவர்களின் வெளிவிவகாரங்களிலேயே பல வித்யாஸங்கள் உண்டு, எனத்தெரியும் எப்படியெனில், விவேகியானவன்

இந்த உலகம் நாசமுள்ளது. பொய்யானது என்று தெரிந்து கொண்டு இப்போது பிராரப்த கர்மாவால் அனுபவிக்கப்பட்டு வரும் ஸுகதுக்கபோகங்களை ஸ்வப்னத்தில் ஏற்படும் போகத்திற்கு சமானமாக எண்ணுகிறான். இதனால் இவன் வருந்துவதில்லை அவிவேகியோ என்றால், உலகம் உண்மையானது, தனக்கு ஏற்படும், சுகதுக்க அனுபவங்களும், வாஸ்தவமானவை என்று கருதி வருந்துகிறான். ஆகவே விவேகிகளுக்கும் சரீரத்தை அடைவதால் துக்கம் உண்டாகிறது என்பது திண்ணம்.

தேவதைகளின் விஷயத்தில் இது எப்படியாகிறது என்று கவனிப்போம். வேதத்தில் இந்திரனுக்கு “வஜ்ராயுதம் உடையவன்” என்ற பெயர் உண்டு. இவனுக்கும் சரீரம் பெற்றதால் துக்கம் உண்டு. எவ்விதமெனில், அசுரர்கள், ராக்ஷஸர்கள், இவர்களால் ஏற்படும் கேடுகளை நிவர்த்திக்கும் பொருட்டு யுத்தம் செய்வதாலும் கோபம், சாபம் முதலியவைகளாலும், புண்ய கர்மாவின் பலனுக்கு முடிவு உண்டாகும் போது இந்திர பதவியிலிருந்து கீழே தள்ளப்படப்போவதை எண்ணி பயத்தினாலும் துக்கம் உண்டாகிறது. இதிலிருந்து ஒரு கேள்விவரும் இப்படி துக்கத்தை அடையக்கூடிய தேவதைகளை ஏன் மனிதர்கள் உபாசிக்கிறார்கள். அவர்களால் எப்படி ஸுகத்தைக் கொடுக்க முடிகிறது எனக் கேட்கலாம். இந்த உலகிலும் அரசர்கள் தங்களுக்கு பல கஷ்டங்கள் வரக்கூடிய நிலைமையில் இருந்தும், அவர்களை அண்டியவர்களை எப்படி காப்பாற்றுகிறார்களோ அதுபோல் ஆகும். வேதத்தில் ஒரு வாக்கியம் உண்டு.

देवलोके देवा आनन्दरूपास्तिष्ठन्ति ।

என்று. இதற்கு தேவலோகத்தில் தேவர்கள் ஆனந்தமாக இருக்கிறார்கள் எனப்பொருள். இதன் சரியான அர்த்தம் யாதெனில், “தேவலோகத்தில் உள்ளவர்கள், துக்கமானது அந்தக்கரணத்தை ஒட்டியதே தவிர ஆத்மாவை பாதிக்கக் கூடியதல்லவென்று தீர்மானித்து எப்போதும் ஆனந்த அனுபவம் உள்ளவர்களாக இருக்கிறார்கள்” என்பதே. ஐதரேய உபநிஷத்தில்

ता एता देवताः सृष्टा अस्मिन् महत्यर्णवे प्रापतन् । (2-1)

'இந்த தேவர்களும் சிருஷ்டிக்கப்பட்டபின் இந்தப் பெரிய சமுத்ரத்தில் தள்ளப்பட்டார்கள்' என்று இதன் பொருள். ஆகையால் சரீரத்தை அடைவதனால் தேவர்களுக்கும் துக்கம் தான் உண்டாகிறது. இதிலிருந்து ஏற்படும் முடிவு என்னவெனில், நாம் விதேகமுக்தி (தேகசம்பந்தமற்ற மோக்ஷம்) அடைவதற்கே, பிரயத்னம் செய்யவேண்டும் என்பது.

சரீரமில்லாத நிலையில் மோக்ஷம் (விதேகமுக்தி) தான் சரியானது என்று சொன்னால் ஆகாயத்தில் நக்ஷத்திர ரூபமான சரீரத்தையுடையவர்களாகக் காணப்படும் சில தேவர்களை முக்தியடைந்தவர்கள் என்று மனிதர்கள் எப்படி சொல்லுகிறார்கள் என்று கேட்டால் சொல்லுவோம். மோக்ஷம் என்பது 1. ஸாலோக்யம், 2. ஸாமீப்யம், 3. ஸாரூப்யம், 4. ஸாயுஜ்யம், என நால்வகைப்படும். அப்படியுள்ள மோக்ஷத்தை அடைவதற்கு முறையே 1. சரியை, 2. க்ரியை, 3. யோகம், 4 ஞானம் என்று நான்கு ஸாதனங்கள் உண்டு, இவைகளை விளக்குவோம்.

சரியை என்பது பகவானுக்கு கைங்கரியம் செய்து கொண்டு தாஸன் என்ற நிலைமையை கொள்ளுதல்.

க்ரியை என்பது சிவன், விஷ்ணு முதலிய தேவதைகளைப் பூஜித்தல்.

யோகம் என்பது, யமம் நியமம் முதலிய எட்டு அங்கங்கள் கொண்டது.

ஞானம் என்பது ஜீவனுக்கும் பிரம்மத்துக்கும் பேதமில்லை என்ற ஐக்கிய புத்தி.

ஆனால் முதல் மூன்றும் (ஸாலோக்யம் ஸாமீப்யம் ஸாரூப்யம்) பூர்ணமான மோக்ஷம ஆகமாட்டா. ஏனெனில் அந்த நிலைமையை அடைந்தவர்களுக்கு மறுபிறவி ஏற் படலாம் என்ற காரணத்தால். சாயுஜ்யம்தான் பூர்ணமுக்தி அதிலிருந்து மறு ஜனனம் இல்லை என்பதுதான் காரணம்.

योगेन सायुज्यं (யோகத்தினால் ஸாயுஜ்யம்) என்ற சாஸ்திர வாக்கியத்தில் யோகம் என்ற சொல்லுக்கு நிர்குண பிரம்ம ஞானம் எனப்பொருள் கொள்ளவேண்டும்.

சரீரத்துடன் மோக்ஷம் பெற்றவர்களைப்போல் சரீரமில்லாத மோக்ஷம் பெற்றவர்கள், எங்கேயும் எக்காலத்திலும் யாராலும். எந்த ரூபத்திலும் காணப்படாததால் விதேகமுக்தி என்பதே இல்லை என்று எண்ணிக்கொள்ளக்கூடாது. விதேக முக்தர்களுக்கு சரீரம் மட்டும் கிடையாதே தவிர, ஸ்வரூப ஸுகம் உண்டு. ஸ்வரூப ஸுகம் என்பது ஸுஷுப்தியில் (ஸ்வப்னமில்லாத தூக்கம்) ஏற்படும் சுகம்போல் தானாகவே அறியக்கூடியது. பிறவற்றால் அறியக்கூடியது அல்ல. ஆனால் ஸுஷுப்தி சுகம் முக்தி ஸுகத்துக்கு சமானமானது என்ற காரணத்தால் அதுவும் மோக்ஷம்தான் என்று சொல்லிவிடக் கூடாது. சுகத்தை அனுபவிக்கும் அம்சத்தில் மட்டும் சமானம் என்று சொல்லலாமே தவிற, ஸுஷுப்தியில் அக்ஞானம் இருக்கிறது, நித்திரையை விட்டவுடன் எழுந்திருக்கும் தன்மையும் இருக்கிறது. பூர்ண மோக்ஷத்தில் (விதேக முக்தியில்) இவ்விரண்டும் கிடையாது. ஆகையால் ஸுஷுப்தியில் மோக்ஷம் ஏற்படுவதில்லை.

இதே காரணத்தால் ப்ரளயமும் முக்தியல்ல. ஸுஷுப்தியில் ஏற்படும் சுகம்போல முக்தி ஸுகமும் தன் அனுபவத்தில் தெரிவதால் இந்த ஸுகம் பிரத்யக்ஷமானது. சரீரத்துடன் கூடிய முக்திபோல சரீரமில்லாத முக்தியும் ப்ரத்யக்ஷமாக இருக்குமானால் இரண்டிற்கும் என்ன வித்யாஸம் என்று கேட்டால் விதேகமுக்தியடைந்தவர்களுக்கு அக்ஞானம் கிடையாது. மறு பிறப்பும் இல்லை இதுதான் வித்யாஸம். ஆகவே, வேதம், யுக்தி இவை மூலம் விதேக முக்தியே பரம சுகமானது. சரீரம் பெற்ற காரணத்தாலே துக்கம் ஏற்படுகிறது என்று முடிவாயிற்று. இனி அனுபவத்தைக்கொண்டும் இதே முடிவு ஏற்படுகிறது என்பதை கவனிப்போம்.

பிரதிதினமும் ஸுஷுப்தியில் சரீரசம்பந்தம் இல்லாததால் துக்கமின்மையும், விழிப்பிலும் ஸ்வப்னத்திலும் சரீரசம்பந்தம் உள்ளதால் துக்கத்தின் இருப்பையும் நாம் தெரிந்து கொள்ளலாம் எங்கெங்கு சரீரம் உளதோ அங்கங்கு துக்கம் உண்டு என்று சொன்னோம். ஆனந்தமயமான ஆத்மாவுக்கு சரீரம் ஏற்பட்டதனால்தான் துக்கம் உண்டாகிறது ஸ்வயமாக துக்கம் கிடையாது என்று விளங்குகிறது.

இந்த சரீரம் வந்ததற்கு எது காரணம் எனில், பூர்வ கர்மாக்களுடன்கூடிய பஞ்ச பூதங்கள்தான் காரணம். வெறும்

பஞ்சபூதங்கள் மட்டும் காரணம் என்று சொன்னால் எல்லா இடங்களிலும் பஞ்சபூதங்கள் இருக்கின்றனவே அங்கு எல்லாம் சரீரம் உண்டாகட்டுமே என்ற கேள்விவரும் அதனால் தான் பூர்வகர்மாக்களுடன் சேர்ந்த பஞ்சபூதங்கள்தான் காரணம் என்று சொல்கிறோம். புருஷன், ஸ்திரீ இவர்களின் சுக்ல, சோணித சேர்க்கையினால்தான் சரீரம் (குழந்தை) ஏற்படுகிறது என்றல்லவா கேள்விப்படுகிறோம். ஆகையால் அவைதானே காரணமாகும் என்றால், எல்லா ஸ்திரீ-புருஷ ஸங்கமத்திலும் சரீரம் (குழந்தை) பிறப்பதில்லை என்பதே பதிலாகும். ஆகையால் கர்மாவுடன் கலந்த பஞ்சபூதங்களே சரீரத்துக்கு காரணமாகும்.

மேலும் பஞ்சபூதங்கள், காலம், இடம் இவை எல்லா சரீரங்களுக்கும் பொதுவானவை. இதில் வித்யாஸமில்லை. ஆனால் சரீரங்களுள் பல வித்யாஸம் ஏற்படுவதற்கு காரணம் அவரவர்களின் விசித்திரமான கர்மாக்கள்தான். மண் என்பது பொதுவாக உள்ளபோதிலும் குயவனுடைய பலவிதமான விசித்ர செய்கைகள்தான் பலவித பிரிவுகளுள்ள குடம் முதலான காரியங்கள் உண்டாவதற்குக் காரணமாகிறது.

இந்த உதாஹரணத்தில் இரண்டு காரணங்கள் இருப்பதைக் காணலாம். 1. மண், 2. குயவன். இதுபோலவே சரீரம் உண்டாவதிலும், 1. பஞ்சபூதம், 2. பூர்வகர்மா என்று காரணம் இருவகையாகும் முதல் வகை காரணத்தை உபாதான காரணம் என்றும், இரண்டாவதை நிமித்த காரணம் என்றும் சொல்வார்கள். ஆகையால் அனுபவத்தைப் பலனாகக் கொடுக்கும் பூர்வகர்மாக்கள் இருக்கும் வரை சரீரம் உண்டாகும். எப்படி ஸ்வப்னாவஸ்தையிலும் விழிப்பிலும், கர்மா இருப்பதால் சரீரசம்பந்தம் உண்டோ அதுபோலவே. கர்மா இல்லாவிடில் சரீரம் உண்டாகாது ஸுஷுப்தியில் கர்மா இல்லாததால் சரீரம் ஏற்படுவதில்லையல்லவா. மண் இருந்தாலும் குயவனின் வேலை ஏற்படாவிடில் குடம் உண்டாகாது. அதுபோல் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட பஞ்ச பூதங்கள் இருந்தபோதிலும் ஆத்ம ஞானத்தால் கர்மாவுக்கு நாசம் ஏற்பட்ட பின்பு அந்த ஞானிக்கு சரீரம் உண்டாவதில்லை.

கேள்வி :— கர்மாவைப்பற்றிச் சொல்லுமிடத்தில் சாஸ்திரம் சொல்லுகிறது. 'ஒருவன் செய்த கர்மா நன்மையாயினும்

தீயதாயினும் அதன் பலனை அவன் அனுபவித்தே தீரவேணும். அனுபவிக்கப்படாமல் கலபகோடி வருஷங்களானாலும் அந்தக் கர்மா நாசத்தை அடையாது' என்று. ஞானத்தை உபதேசிக்கையில் சாஸ்திரம் சொல்வதாவது. 'ஞானாக்னியில் எல்லா கர்மாக்களும் சாம்பலாக்கப்படுகின்றன' என்று. இவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றனவே. இதை எப்படி முடிவு செய்வது ?

பதில: –சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட வாக்கியங்களில் பலம் அதிகமாக உள்ளவை, பலம் குறைவாக உள்ளவை என்ற பிரிவுகள் உண்டு அதிக பலமானது தீர்மானத்தைக் காட்டும். துர்பலமானது ஆக்ஷேபணைக்குட்பட்டதாகும். துர்பலமான வாக்கியத்தை அதிக பலமுள்ளது அடக்கிவிடும் அது எதுபோல் உள்ளது என்றால "அஹிம்ஸை எல்லாவற்றிலும் சிரேஷ்டமான கடமை" என்ற வாக்யம் பலமுள்ளதுதான். ஆனாலும் மற்றொரு வாக்கியம் "யாகத்தில் பசுவதை செய்யப்படவேண்டும்" என்று உள்ளது. இது முன்சொன்னதைவிட அதிக பலமுள்ளது. முன் சொன்ன வாக்கியத்தை இது அடக்கிவிடும், "கர்மா அவசியம் அனுபவித்தே தீரும்" என்ற வசனம் "தபஸினால் பாபத்தை போக்கடிக்கிறான்" என்ற, அதைவிட அதிகபலமுள்ள வாக்கியத்தினால் தடுக்கப்படும். ஆகையால் பூர்வ ஜன்மாவில் செய்த கர்மா கூட்டமாக இருந்தபோதிலும் ஆத்ம ஞானத்தை அடைவதனால் அவை நாசத்தை அடையும். கர்மா இல்லாவிடில் ஜனனமில்லை. ஜன்மா இல்லாவிடில் துக்கம் ஏற்படாது. துக்கமில்லாவிடில் ஆனந்த அனுபவம் உண்டு. இதுதான் தீர்மானமான விஷயம்.

वाक्यैः सहितं यत्प्रतिपादयत्यतोऽखण्डैकरसत्वेनैव महावाक्यस्यार्थो वक्तव्य इति षड्विधलिङ्गैः श्रुतितात्पर्यावधारणं श्रवणमित्युक्तम् ॥

इदानीं किं प्रकृतमिति चेत् । मयोक्तप्रकारेण विचार्य 'रागद्वेषादिना प्रेरितं सत्त्रिविधकरणं त्रिविधकर्म करोति, प्रधानप्रेरित-सेनया संपादितं जयं राजा अहं जितवानित्यात्मन्यारोपयति एवमात्मा च रागद्वेषादिनिष्ठं प्रेरकत्वमज्ञानादात्मन्यभिमन्यते । एवमात्मनः कर्तृत्वं कारयितृत्वं च नास्ति' इति यो दृढं निश्चिनोति स एव जीवन्मुक्तः ॥

इति पञ्चमवर्णकम् ॥

ஐந்தாவது வர்ணகம்

கேள்வி:— ஆத்மாவுக்கு ஏற்படும் துக்கம் சரீரத்தைப் பெறுவதால் என்றும், சரீரம் ஏற்படுவதற்கு கர்மா காரணம் என்றும் சொல்லப்பட்டது. இந்தக் கர்மா எத்தனை வகைப் பட்டது?

பதில்:— கர்மா மூன்று வகைப்படும். 1. புண்யம் 2. பாபம் 3. இரண்டும் கலந்தது. புண்ணிய பலத்தால் அடைவது தேவ சரீரம், பாப பலத்தால் ஏற்படுவது பக்ஷி முதலியன. இரண்டும் கலந்ததனால் உண்டாவது மனுஷிய சரீரம். இம்மூன்றுவித கர்மாக்களிலும் உயர்ந்தது மத்தியமம் ஸாமான்யம என மூன்று பிரிவுகள் உண்டு. இப்பேர்ப்பட்ட விதவிதமான கர்மாக்களால் அநேக ரூபமான ஜன்மாக்களும் ஏற்படுகின்றன.

ஹிரண்யகர்ப்பனின் சரீரம் உயர்ந்த புண்ய கர்மாவினால் ஏற்படுகிறது. மத்தியமமான புண்ணிய கர்மாவினால் உண்டானது இந்திரன் முதலியவர்களின் சரீரம். ராக்ஷஸன், யக்ஷன், பிசாசு முதலிய சரீரங்கள் ஸாமான்ய புண்ய கர்மாவால் ஏற்பட்டவை.

பிறருக்குத் தாபத்தை உண்படுண்ணும் முள்மரம், விஷவிருக்ஷம், புலி, பாம்பு, தேள், ஆந்தை, கொசு, அட்டை ஆகியவைகளின் சரீரம் எல்லாம் மேலான பாபகர்மாவின் பலன் பலா, மா, வாழை தென்னை முதலிய பழம் புஷ்பங்களைக் கொடுக்கும் செடி கொடிகளும், கிராமத்தில் வசிக்கும் பன்றி எருமை, கழுதை, ஒட்டகம் முதலியவைகளின் சரீரமும் மத்தியமமான பாபகர்மாவின் பலன். அரசமரம், துளசி, பில்வம், பசு, குதிரை, முதலியவைகளின் சரீரம் சாமான்ய மான பாபகர்மத்தால் ஏற்பட்டவை.

இந்த மனுஷ்ய லோகத்தில் நிஷ்காம கர்மானுஷ்டானம், ஸாதன சதுஷ்டயம், ஸத்குருவை அடைதல், சிரவணம், மனனம் முதலியவைகளின் உதவியால் க்ரமமாக ஆத்மஞான மடைந்து அதன் மூலமாக ஜீவன்முக்தியையும் விதேஹ முக்தியையும் அடைவதற்கு யோக்கியமாக உள்ள மனுஷ்ய சரீரம் சிரேஷ்ட மிச்ரகர்மாவின் (இரண்டும் கலந்ததின்) பலன். தன்னுடைய வர்ணாசிரம தர்மங்களையும் காம்ய கர்மாக்களையும் செய்வதற்கு யோக்கியமான சரீரம் மத்தியம மான மிச்ரகர்மாவின் பலனாகும். சண்டாளன், புல்கஸன், வேடன், மிலேச்சன் முதலிய சரீரங்கள் சாமான்ய மிச்ர கர்மாவின் பலனாகும்.

ஆகையால் புத்திசாலியான மனிதன் மேலே சொன்ன கர்மாவின் பல பேதங்களை நன்கு விசாரித்து இப்பூமியில் மனுஷிய ஜன்மாவில் உத்கிருஷ்டமான மிச்ர கர்மாவின் பயனான பிறவி கிடைக்கும்படியாக தன் வர்ணாச்ரமங்களுக்கு உசிதமான கர்மாக்களை பலத்தில் ஆசை கொள்ளாமல் ஈசுவரார்பணபுத்தியுடன் செய்து ஆத்ம விசாரத்தின் மூலமாக மோக்ஷத்தையடைவதற்கு பிரயத்னம் செய்யவேண்டும் என்பது தீர்மானம்.

மேலே சொல்லப்பட்ட மூன்று விதமான கர்மாவும் எதனால் செய்யப்படுகிறது என்றால், மனம், வாக்கு, சரீரம், (காயம்) என்ற மூன்றுவித கரணங்களினால் என்று சொல்ல வேண்டும்.

கேள்வி:—உலகில் "நான் செய்கிறேன்" "நான் செய்கிறேன்" என்று சொல்லும் ஒவ்வொருவருடைய அனுபவமும் யாதெனில் இந்த சரீரத்தை ஒட்டிய எந்த ஆத்மா இருக்கிறதோ அதன் காரியம்தான் என்றே. அதை விட்டுவிட்டு செய்யப்படும் கர்மாவுக்கு மூன்று கரணங்கள்தான் காரணம் என்று எப்படிச்சொல்லமுடியும்?

பதில்:—ஆத்மாவானது விகாரமற்றது (மாறுதல் இல்லாதது) கிரியை இல்லாதது, தன்னுள் எவ்வித பேதமும் அற்றது. ஆகவே ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் (செய்பவன் என்ற நிலைமை) எப்படி வரும்?

கேள்வி:— கர்த்தா (செய்பவன்) என்ற நிலைமை தன்னிடம் அதாவது ஆத்மாவிடம் இருப்பதாகவல்லவா தெரிகிறது. அவனைத் தவிர வேறு கர்த்தா (செய்பவன்) இருப்பதாகத் தெரியவில்லையே?

பதில்:— ஆத்மாவிடத்தில் தோன்றுகிற கர்த்ருத்வம் (செய்பவன் என்ற தன்மை) அதில் கற்பிக்கப்பட்டதே தவிர அதன் ஸ்வபாவம் (இயற்கை) அல்ல அது இயற்கையாகில் ஒவ்வொருவரும் “ நான் வேதாந்த விசாரம் செய்து என்னுள் தோன்றும் கர்த்ருத்வ புத்தியை (செய்பவன் என்ற எண்ணம்) ஒழிக்கவேண்டும். அது ஒழிந்தாலன்றி ஸம்ஸாரபந்தம் நீங்காது ” என்று எண்ணிக்கொண்டு செய்யும் பிரயத்னம் வீணாகவல்லவா ஆகும்.

கேள்வி:— ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் இயற்கையாகவே இருக்கட்டுமே. பிரயத்னம் செய்வதால் அந்த நிலைமை நாசமடையட்டுமே?

பதில்:— இயற்கை என்பது தன் ஸ்வரூபமாகும் தன் ஸ்வரூபத்தை ஒழிப்பதற்கு யார் பிரயத்னம் செய்வார்கள். ஸ்வரூபமே போய்விடுகிறது என்றால் யார் புருஷார்த்தத்தை அடைவது மேலும் கர்த்தா வல்லாத ஜீவன்முக்தனே இல்லை என்றால் குரு சிஷ்யர்களும் பரம்பரையாக வேதாந்த தத்வ உபதேசமும் இல்லாமல் போய்விடும். “ஆத்மா, அவயவமற்றது, செய்கையற்றது, சாந்தன், குற்றமில்லாதவன் களங்கமற்றவன். குணமற்றவன் ஜீவன் செய்யும் வேலையை பார்த்துக்கொண்டிருக்கும் சாக்ஷி ரூபமானவன்” என்று ஆத்மா கர்த்தாவல்ல என்று சொல்லும் வாக்கியங்கள் பாதிக்கப்படுமே. ஸுஷுப்தியில் (ஸ்வப்னமில்லாத தூக்கத்தில்) ஆத்மா இருந்தபோதிலும் கர்த்ருத்வம் காணவில்லை. அக்னியில் உஷ்ணம் இயற்கையாக உள்ளதுபோல் ஆத்மாவில் கர்த்ருத்வம் இயற்கையாக இருக்குமேயாகில், ஸுஷுப்தியில் இது காணப்படவேண்டுமல்லவா. அப்படி இல்லையே ஆகையால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் (காரியத்தை செய்பவன் என்ற தன்மை) இயற்கையானதல்ல,

கேள்வி:- ஸுஷுப்தியில் கர்த்ருத்வம் ஆத்மாவில் தோன்றாததற்குக் காரணம் வேலை செய்யும் கரணம் (மனம்) இல்லாததுதான். தச்சன் தச்சுவேலை செய்யும் சக்தி உடையவனாயிருந்தும் கையில் கருவிகளை எடுத்துக்கொண்டு தச்சுவேலை செய்யாமல் அவன் ஸ்நானம், போஜனம் முதலியவை செய்யும்போது அவன் தச்சுவேலை செய்பவனாக நமக்குத் தோன்றுவதில்லை. ஆனாலும் அவன் தச்சன்தான். இதுபோல் ஸுஷுப்தியில் மனமில்லாத காரணத்தால் ஆத்மாவில் கர்த்ருத்வம் தோன்றாதபோதிலும் ஆத்மா கர்த்தாதான்.

பதில்:—ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருக்கும்போது அந்தக்கரணத்துடன் சேர்ந்து இருந்தபோதிலும் ஆத்மாவிடம் கர்த்ருத்வம் தோன்றாததால் அதற்கு கர்த்ருத்வம் (காரியம் செய்யும் தன்மை) இயற்கையானதல்ல. இது அந்த ஆத்மாவின்பேரில் சுமத்தப்பட்டதேயாம் (அத்யாஸம்).

அத்யாஸம் என்றால் ஓரிடத்தில் இருக்கும் ஸ்வபாவத்தை மற்றொன்றின் பேரில் சுமத்துவது. உதாஹரணமாக ஒருவன் படகில் போய்க்கொண்டிருக்கிறான் படகு போகிறது. கரையில் உள்ள மரங்கள் போகாமல் நிலைத்து நிற்கின்றன. ஆனால், இவன் கண்ணுக்கு மரங்கள் போவதுபோலவும் படகு அசையாமல் நிற்பது போலவும் தெரிகிறது. படகிலுள்ள போகும் தன்மையை மரத்திலும், மரத்திலுள்ள போகாமலிருக்கும் தன்மையை படகிலும் ஏற்றுகிறான். இதுதான் அத்யாஸம் என்று சொல்லப்படுவது. இதேபோல் மூன்றுவிதமான கரணங்களின் குணமான கர்த்ருத்வத்தை (காரியம் செய்யும் தன்மையை) ஆத்மாவிலும், ஆத்மாவிலுள்ள காரியம் செய்யாத் தன்மையை மூவித கரணங்களிலும் காண்கிறான். இதற்குக் காரணம் அக்ஞானம். ஆகையால் ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் ஸ்வபாவமாகக் கிடையாது. அத்யாஸத்தால் ஏற்பட்டது.

கேள்வி:— மூன்று கரணங்கள் என்பது ஜடப்பொருள், அசேதனமானது. இதற்கு எவ்விதம் செய்கை என்ற குணமேற்படும்? மேலும் உலகில் கர்த்தாவானவன் கரணங்களால் தான் காரியம் செய்கிறான். இங்கு மூவித கரணங்களையே கர்த்தாவாகச் சொல்லிவிட்டால் இதற்கு வேறு கரணங்களிருக்கவேண்டுமே, அது எது?

பதில் :— உலகில் பெருங்காற்று மரங்களை வேருடன் பிடுங்கி வெகு தூரத்தில் கொண்டுபோய்விடுகிறது. வாயு அசேதனமாக ஜடமாக இருந்தபோதிலும், வேறு கருவி இல்லாதபோதிலும் இந்தக் காரியத்தில் வாயு கர்த்தாவாக ஆகிறது. இதுபோலவே ஜலபிரவாஹம் ஜடமாக இருந்தாலும் வேறு கருவி இல்லாவிட்டாலும் தான் கர்த்தாவாக இருந்து கொண்டு மரங்களை வேருடன் பிடுங்கி வேறு இடத்திற்குக் கொண்டுபோய் விடுகிறது. இதுபோல மூன்று கரணங்கள் அசேதனமாக இருந்தாலும் வேறு கருவி இல்லாவிட்டாலும் கர்த்தாவாக ஆகலாம்.

இம்மூன்று கரணங்களால் செய்யப்படும் காரியங்கள் யாதெனில்,

1. மானஸிக (மனதினால் செய்யப்படும்) புண்யகர்மா, பாபகர்மா, இரண்டும் கலந்த கர்மா.

2 வாக்கினால் செய்யப்படும் புண்ய கர்மா, பாப கர்மா, இரண்டும் கலந்த கர்மா.

3. சரீரத்தால் செய்யப்படும் புண்ய கர்மா, பாப கர்மா, இரண்டும் கலந்த கர்மா. இவைகளை சற்று விவரிப்போம் :— ஸகுணோபாஸனம், நிர்குணோபாஸனம், பக்தி, ஞானம், வைராக்கியம் இவைகளை ஒட்டிய எண்ணம், பரலோகத்தைப் பற்றிய எண்ணம் இவைகள் மனதினால் செய்யப்படும் (மானஸிக) புண்ணிய கர்மாக்கள். விஷயபோகம் பற்றிய எண்ணம், பிறருக்கு கெடுதல் செய்யும் எண்ணம், வேதம் சாஸ்திரம் முதலியவை நம்பத்தகுந்ததல்லவென்ற எண்ணம், தர்மம் அதர்மம் முதலியவை கிடையாது என்ற எண்ணம், ஆகியவை புத்தியினால் தீர்மானிக்கப்படுவதால் மானஸிக பாப கர்மாக்கள். மேலே சொன்ன இருவகையான எண்ணங்களும் கலந்து நடததுவது மானஸிக மிச்ரகர்மாக்கள்.

வேதாத்யயனம், சாஸ்திரம் வாசித்தல், கீதா பாராயணம், ஸஹஸ்ரநாம ஜபம் பஞ்சாக்ஷரம் முதலிய மந்திர ஜபம் பகவந்நாம கீர்த்தனம், பரோபகாரம் செய்வதற்கான வார்த்தைகள், உண்மைப் பேச்சு, மென்மையான பேச்சு, பிறர் கேட்பதற்கு முன்பு அவருடைய எண்ணம் தெரிந்து அனுகூலமாக பேசுதல் இவை வாக்கினால் செய்யப்படும் புண்யகர்மா. வேத சாஸ்திரங்

களை தூஷித்தல், தேவதையை நிந்தனை செய்தல், பொய், கோட்சொல்லல், கடுமையான பேச்சு, பிறரை ஏளனம் செய்தல், இவைகள் வாக்கினால் செய்யும் பாபகர்மாக்கள், வேதாத்யயனம், அல்லது பூஜை முதலிய புண்ணிய வார்த்தைகளின் இடையில் பிறரை நிந்தனை செய்தல், பொய், பரிஹாஸ வார்த்தை லோகசம்பந்தமான வார்த்தை பேசுதல் இவைகள் வாக்கினால் செய்யப்படும் மிச்ரகர்மா.

புண்ய தீர்த்த ஸ்னானம், குரு தேவதை இவர்களை வணங்குதல், தேவதா பூஜை, நமஸ்காரம் ஸாதுக்களை தரிசித்தல், தியாகம் உலகத்தின் நன்மைக்காக சஞ்சரித்தல் இவைகள் காயிகமான (சரீரத்தால் செய்த) புண்ணிய கர்மா. பிறரை ஹிம்சித்தல், பரஸ்திரீ சங்கம், திருட்டு, துஷ்ட ஸகவாசம் முதலியவை காயிகமான (சரீரத்தால் செய்யப்படும்) பாப கர்மாக்கள். பிராம்மண போஜனம் செய்விப்பதற்காக பிறருக்கு உபத்திரவம் ஏற்படுத்தல், கோவில் கட்டுவதற்காக, பிறருடைய சொத்தை அபகரித்தல், தண்ணீர் பந்தல் ஏற்படுத்தி வேலை செய்தவனுக்குக் கூலிகொடுக்காமலிருப்பது ஆகியவை புண்ணியமும் பாபமும் கலந்ததால் காயிக மிச்ரகர்மாக்கள்.

இந்த வகையான கர்மாக்களைப்பற்றி விவரமாக விசாரணை செய்யவேணும். அப்படி விசாரணை செய்தலால் யாது பயன் என்றால், பயன் இருவகைப்படும். 1. முக்கிய பலன், 2. இடையில் ஏற்படுவது, மேலே சொல்லப்பட்ட மூவகை கர்மாக்களும் மனோ, வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களால் செய்யப்பட்டவை. ஆத்மாவோவெனில், ஆகாசம் போல் பற்றற்றது, பிரிவற்றது, பூர்ணமானது, சைதன்யரூபமானது (அறிவுமயமானது) ஆகையால் எந்தக்காரியத்துக்கும் இது கர்த்தா (செய்பவனாக) ஆகமாட்டாது. ஆத்மா என்ற சொல்லுக்கு இவ்வாறு பொருள் கூறப்பட்டுள்ளது 'எல்லாவற்றையும் அடைகிறது. அதாவது வியாபகம், எல்லாவற்றையும் கிரஹிக்கிறது. எல்லா விஷயங்களையும் அனுபவிக்கிறது. தொடர்ந்து எப்போதும் உள்ளது' இவ்விதமாக ஆத்மா இருப்பதால் எந்த கர்மாவும் ஞானமயமான ஆத்மாவைத் தொடுவதில்லை என்று தெரிந்துகொண்டு சந்தேகம் தெளிந்து திடமான அனுபவத்துடன் இருப்பது முக்கிய பலன். பிரம்ம ஞானம் இருந்தபோதிலும் 'மனோவாக்கு காயங்களால்

புண்ணிய கர்மாவையே செய்துவரவேண்டும். இது முடியா விட்டால் புண்யம் பாபம் இரண்டும் கலந்த மிச்ர கர்மாவைச் செய்துவரவேண்டும் ஒருபொழுதும் பாப கர்மாவைச் செய்யக் கூடாது’ என்று உணர்ந்து அவ்விதமே நடந்துவருவது இடையில் ஏற்பட்ட பலன். எப்படி வாழை மரத்தை வளர்ப் பவனுக்கு வாழைப்பழம் முக்கிய பலன், வாழைப்பூ, வாழை இலை இவைகளை அடைவது இடையில் ஏற்படும் பலனோ அது போல மனது, வாக்கு, காயம் இவைகளால் செய்யப்படும் கர்மாக்களை விசாரித்து அறிந்துகொள்பவனுக்கு மேலே சொன்ன இருவகை பலன்களும் ஏற்படும்.

கேள்வி :— தாமரை இலையின்மேல் இருக்கும் ஜலம் தாமரையுடன் ஒட்டாததுபோல கர்மாவுடன் ஞானிக்கு எவ்வித சம்பந்தமும் உண்டாவதில்லை. அவனுக்கு இது செய்யவேண்டும் இது செய்யக்கூடாது என்ற நிபந்தனை கிடையாது. அவன் கர்மாவற்றவன். நடக்கும் காரியத்தை சாக்ஷியாக பார்த்துக்கொண்டிருப்பவன், அவன் செய்ய வேண்டியது எல்லாம் செய்தாய்விட்டது என்று தீர்மானம் சொல்லப்பட்டுளது அப்படியானால் அவனும் அக்ஞானியைப் போல் புண்யகர்மாவையே அனுஷ்டிக்கவேண்டும் என்ற நியமம் எதற்காக சொல்லப்பட்டிருக்கிறது ?.

பதில :— ஞானிக்குச் செய்யவேண்டியது ஏதும் பாக்கி இல்லைதான். அவன் செயலுடையவனுமல்ல. அதில் சந்தேகமே கிடையாது. ஆனாலும் ஞானிகளில் நான்கு வகைகள் உண்டு. 1. பிரம்மவித்து 2. பிரம்மவித்வரன் 3. பிரம்மவித்வரீயான். 4. பிரம்மவித்வரிஷ்டன் இந்தப்பிரிவில் பின் வருபவர்கள் முன் வருபவர்களை விட மேன்மைப்பட்டவர். இவர்களுள் பிரம்மவித்வரிஷ்டன்தான் விதேக முக்தன். இவனுடைய மனது வேலையே செய்வதில்லை.

இந்திரியங்கள் ஒவ்வொன்றுடனும சேர்ந்த மனதில் ஏற்படும் அறிவுக்கு விருத்தி எனப்பெயர் மனமானது இந்திரியம் மூலமாக விஷயத்துடன் ஸம்பந்தப்பட்டு அந்த விஷய உருவை அடைந்ததும் அதில் சைதன்யம் பிரதிபலிக் கிறது. அப்பொழுது நமக்கு அறிவு ஏற்படுகிறது. இதைத் தான் விருத்தி ஞானம் என்று சொல்லுவார்கள். ராக த்வேஷாதிகளுடன் கூடி மனதை அடக்காதவர்களுக்குத் தான் மனதில் விருத்திகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

ஸுஷுப்தியில் மனம் அடங்கிவிட்டபடியால் விருத்திகள் ஏற்படுவதில்லை இதுபோலவே வரிஷ்டனுக்கும் மனம் அடங்கிவிட்டபடியால் விருத்தி ஏற்படுவதில்லை இவனுக்கு விதியோ நிஷேதமோ கிடையாதுதான். ஆனால் முதலில் சொன்ன மூவர்களுடைய நிலை இப்படிப்பட்டதல்ல. இவர் களும் ஞானிகள்தான். இவர்களை செய்யவேண்டும் என்றோ, செய்யக்கூடாது என்றோ யாரும் கட்டுப்படுத்தமுடியாது. ஆனாலும் இவர்களுக்கு மனோநாசம் ஏற்படாததால் மனோ விருத்தியற்ற நிலை இல்லை இவர்கள் லோக வியவஹாரத்தில் ஈடுபடும்போது விருத்திகள் ஏற்படத்தான் செய்கின்றன. ஆகவே மற்றவர்களுக்கு வழிகாட்டுவதற்காக இவர்கள் ஸதா சாரசீலர்களாக இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது.

கர்மாவில் ஈடுபட்டுள்ளவர்களின் மத்தியில் இம்மூன்று வகையினர் இருக்கும்போது அவர்களைப்போலவே கர்மாவைச் செய்யவேணும். ஞானத்தை அடைய விரும்புபவர்களின் மத்தியில் இவர்கள் இருக்குமபோது கர்மாவை விட்டுவிட்டு “பிரம்மம்தான் உண்மையானது, சாசுவதமானது, மற்ற தெல்லாம அழிவுள்ளது, பொய்” என்று ஞானத்தையே உபதேசிக்க வேண்டும். இதன்மூலம் மனது, வாக்கு, காயம் இம்மூன்று கரணங்களுக்குத்தான் கர்த்ருத்துவம் ஆத்மாவுக்கு இல்லை என்பது தீர்மானமாகிறது.

மனது, வாக்கு, காயம் (சரீரம்) இம்மூன்று கரணங்களும் தானாக காரியத்தைச் செய்கின்றனவா அல்லது வேறு ஒன்றி னால் பிரேரணை செய்யப்பட்டு செய்கின்றனவா என்றால், ராகம் (ஆசை) துவேஷம் (வெறுப்பு) முதலியவைகளினால் தூண்டப் பட்டுச் செய்கின்றனவேயல்லாமல் தானாகச்செய்பவை அல்ல. ராகத்வேஷங்கள் இருந்தால் மூன்று கரணங்களும் வேலை செய்கின்றன. இல்லாவிடில் வேலை செய்வதில்லை. ஆகவே ராகத்வேஷங்களே கரணங்களை தூண்டிவிட்டு வேலை செய் கின்றன என்பது அனுபவத்தில் தெரிகிறது.

[அன்வயம் வியதிரேகம் இவ்விரண்டினால்தான் ஒன்றை மற்றொன்றுக்குக் காரணமாகத் தீர்மானிப்பது சாஸ்திர முறை. ‘எது இருந்தால் எது இருக்கிறதோ’ இது அன்வயம். ‘எது இல்லாவிட்டால் எது இல்லையோ’ இது வியதிரேகம். ‘நெருப்பு இருந்தால் புகை ஏற்படுகிறது’ இது அன்வயம். ‘நெருப்பு இல்லாவிட்டால் புகை இல்லை’ இது வியதிரேகம்.]

கேள்வி :— ''நான் கோவிலைக் கட்டுவிக்கிறேன்'' ''நான் குளத்தை வெட்டுவிக்கிறேன்'' என்று வியவஹாரங்கள் செய்வதனுல் ஆத்மா கர்த்தாவாக (செய்பவனுக) இல்லாவிட்டாலும் காரியத்தை செய்விப்பவனுக இருக்கட்டுமே.

பதில் :— இல்லை. ஆத்மா செய்கையற்றதாலும் மாறுதல் இல்லாததாலும் செய்விக்கும் தன்மையும் அதற்குக் கிடையாது. ஆத்மாவிடத்தில் செய்விக்கும் தன்மை தோன்றுகிறதே எனில், ஜபாகுஸும நியாயம்போல்தான் உள்ளது. ஜபாகுஸும நியாயம் என்பது :— ஒரு வெண்மையான ஸ்படிக லிங்கத்தை வைத்து அதற்கு அருகில் சிவப்பு வர்ணத்தையுடைய செம்பரத்த புஷ்பத்தை வைத்துப்பார்த்தால் புஷ்பத்தின் சிவப்பு வர்ணம் ஸ்படிகத்தில்பட்டு, ஸ்படிகமும் சிவப்பு நிறமாகத் தோன்றும். ஆனுல் ஸ்படிகம் சிவப்பு வர்ணமற்றது என்பது நமக்குத் தெரியும். இதுபோல், ராகத்வேஷங்களில் உள்ள செய்விக்கும் தன்மை அறிவின்மை மயக்கத்தால் ஆத்மாவில் உள்ளதுபோல் அதன்பேரில் சுமத்தப்பட்டதேயாகும். அது ஆத்மாவுக்கு இயற்கையானது எனில் அதை நாசம் செய்வதற்கு யாரும் யத்தனம் செய்யமாட்டான். இயற்கை என்பது அதன் ஸ்வரூபமானதால் ஸ்வபாவம் அழிந்தால் ஸ்வரூபமே அழிந்துவிடும். மேலும் ஆத்மாவுக்கு செய்விக்கும் தன்மை உண்டு என்று சொல்லுவோமானுல், ''ஆத்மா பற்றற்றது, செய்கையற்றது, செய்விக்கும் தன்மையுமற்றது'' என்ற கருத்தைக்காட்டும வேதவாக்யங்கள் பொய்யாகிவிடும். செய்விக்கும் தன்மை என்பது ஆத்மாவில் முன்னுல் இல்லாமல் புதிதாக உண்டானதாகச் சொன்னுல் அதனுல் ஏற்படும் முக்தியும் புதிதாக ஏற்பட்டதாக ஆகிவிடும். உண்டாகும் வஸ்து அழியக்கூடியபடியால் முக்தியும் ஒருகாலத்தில் போய்விடும். ஆத்மாவில் செய்விக்கும் தன்மை இருந்தால் அது ஸுஷுப்தியில் ஏன் தெரியவில்லை? ஆகையால் செய்விக்கும் தன்மை ஆத்மாவுக்கு இயற்கையாக உள்ளதல்ல. ராகத்வேஷங்களில் உள்ளதை ப்ராந்தியால் ஆத்மாவில் இருப்பதாக எண்ணுகிருர்கள்.

கேள்வி :— ஸுஷுப்தியில் ஆத்மாவுக்கு செய்விக்கும் தன்மை தெரிவதில்லை ஆகையால் ஆத்மாவுக்கு செய்விக்கும் தன்மை கிடையாது என்று சொல்வது சரியல்ல. ஏனெனில் ஒரு உதாஹரணம் பார்க்கலாம். உபாத்தியாயருக்கு சொல்

லிக்கொடுக்கும் சக்தி இருந்தும் படிக்கும் சிஷ்யர்கள் எதிரில் இல்லாமலிருக்கும்போது அந்த சக்தி வெளியில் தெரிவதில்லை. அதுபோல் ஸுஷுப்தியிலும் மனது, வாக்கு, காயம் இவைகளின் சேர்க்கையில்லாததால் ஆத்மாவில் செய்விக்கும் தன்மை இருந்தும் அது காணப்படுவதில்லை. விழிப்பு, ஸ்வப்னுவஸ்தை இவைகளில் இக்கரணங்களின் சேர்க்கை இருப்பதால் இந்த சக்தி வெளிப்படத் தெரிகின்றது. இப்படி சொல்லலாமல்லவா!

பதில :— அப்படியானுல் விழிப்பிலேயே ஒரு வேலையும் செய்யாமல் சும்மாயிருககும் ஸந்தர்ப்பத்தில் கரணங்களின் ஸம்பந்தமிருப்பதால் அப்போதும் ஆத்மாவிலுள்ள செய்விக்கும் தன்மை தெரியவேணுமே. அப்படிக் காணப்படுவதில்லையே. ஆகையால் செய்விக்கும் தன்மை என்பதும் ஆத்மாவுக்கு இயற்கையானதல்ல. ஒரு உதாஹரணம் சொல்லலாம். கொல்லன் உலையில் நெருப்பில் இரும்பை போட்டு பழுக்கக்காய்ச்சுகிருன். அங்கு நெருப்பும் இரும்பும் நெருங்கி இருப்பதால் இரும்பில் உள்ள நீளத்தன்மை குட்டைதன்மை நெருப்பிலும், நெருப்பில் உள்ள உஷ்ணத்தன்மை, பிரகாசிக்கும் தன்மை, முதலியவை இரும்பிலும் இருப்பதுபோல் தோன்றுகிறது அதுபோல் அக்ஞானத்தால் ராகம் துவேஷம் இவைகளில் உள்ள செய்விக்கும் தன்மை ஆத்மாவில் உள்ளதுபோலும், ஆத்மாவில் உள்ள செய்கையற்ற நிலை ராகதுவேஷங்களில் உள்ளது போலும் தோன்றுகிறது.

சேள்வி:— ராகத்வேஷங்கள் அசேதனங்கள் ஜடமானவை அசேதனத்துக்கு எப்படி செய்விக்கும் தன்மை வரும்? ஒரு குடம் மற்ருெரு குடத்தை செய்விக்காதல்லவா?

பதில:— ஆம் அதற்கு வேண்டிய யோக்கியதை சில இடங்களில் இருப்பதால் தூண்டுதல் செய்கிறது. சில இடங்களில் அந்த யோக்கியதை இல்லாததால் தூண்டுதல் செய்வதில்லை. எப்படி யெனில், அக்னி ஜடமானது தான். ஆனுலும் இது கந்தகத்துடன் கூடிய கரிப்பொடியுடன் (வெடிமருந்துடன்) சேர்ந்து ஜடமாயிருந்தபோதிலும் பெரிய இரும்புக்குழாயில் (பீரங்கியில்) இருக்கும் பெரிய கற்களை (குண்டுகளை) ஏவி வெகுதூரத்தில் விழச்செய்து சதுரங்க ஸேனைகளையும் ஒழித்துவிடுகிறது. மேலும் மரணத்தை

அடைந்த ஒருவனுடைய ப்ரேத சரீரம் ஜடமாயிருந்தும் ஞாதிகளால் செய்யப்படும் உத்தரகிரியை விஷயத்தில் தான் காரயிதாவாக (செய்விக்கும் தன்மை கொண்டதாக) ஆகிறது இதுபோலவே ராகதுவேஷங்கள் அசேதனமாக இருந்த போதிலும் செய்விக்கும் தன்மை கொண்டவை. அப்படியானால் ‘ஆத்மா இந்திரியங்களை அடக்கியாள்பவன் எல்லாவற்றிலும் உள்புகுந்து நியமனம் செய்பவன்’ என்ற வேத வாக்கியத்துக்கு என்ன அர்த்தம் எனில், சூரியனைப்போல் அருகில் இருப்பதனாலேயே எல்லா காரியங்களும் நடப்பதற்கு அனுகூலனாகிறான் என்று பொருள்.

கேள்வி :— ஆத்மா அருகில் இருப்பதால் எல்லா பிராணிகளும் காரியங்களை செய்கிறார்கள் என்று ஒத்துக்கொண்டால் அப்படி நடத்தப்படும் புண்ணிய, பாபகர்மாக்களுக்கும் அதன் பலனுக்கும் ஆத்மா பாத்யப்பட்டதாகுமே.

பதில்:— அப்படி இல்லை.

சூரியன் தன் வெளிச்சத்தைக்கொடுத்து தனது ஸந்நிதி மாத்ரத்தால் எல்லா ஜனங்களும் புண்யத்தையோ, பாபத்தையோ செய்வதற்குக்காரணமாகிறான். ஆனாலும் அவர்கள் செய்யும் புண்யமோ, பாபமோ அதன் பலன்களோ சூரியனிடம் ஒட்டுவதில்லை. இது போலவேதான் ஆத்மா விஷயத்திலும் பார்த்துக்கொள்ளவேண்டும். மற்றும் ஓர் உதாஹரணம். காந்தமானது தான் ஒரு செய்கையும் செய்யாமல் ஸந்நிதிமாத்ரத்தால் இரும்பைத்தன் அருகில் இழுக்கிறது. இரும்பு அசைந்து அருகில் வருவதற்கு காந்த ஸந்நிதி காரணமானாலும் காந்தத்தில் அசைவு ஒன்றும் ஏற்படுவதில்லை. இதுபோல் பிராணிகளின் கர்மா ஒன்றும் ஆத்மாவில் ஒட்டுவதில்லை ஆகையால் ஆத்மாவில் உள்ள குற்றமற்ற தனமை மாறுபாடில்லாத்தன்மை ஆகியவை ராகதுவேஷங்களினால் பாதிக்கப்படமாட்டாது.

இப்படி ப்ரஸித்தமான ஆத்மாவின் ஸ்வரூபம் குருவினால் உபதேசிக்கப்பட்டபோதிலும் பிரதிபந்தகங்களால் நிச்சயம் ஏற்படுவதில்லை. பிரதிபந்தகம் மூன்று வகைப்படும். 1) சந்தேகம் தோன்றுவது 2) இது எப்படி இருக்கமுடியும் என்ற அவநம்பிக்கை, (3) விபரீதமான எண்ணம் தோன்றுவது.

முதலாவது ருக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் ஆகியவைகளின் பற்பல சாகைகளில் சொல்லப்பட்ட உபநயனம் முதலிய கர்மாக்கள் அநேக ப்ரகாரங்களாக இருப்பது போல் அதே பற்பல சாகைகளில் உபதேசிக்கப்பட்ட ஆத்மதத்துவமும் பலவகைப்பட்டதா அல்லது ஒரே விதம் தானா என்று எண்ணுவது ஸம்சயபாவனை மேலே சொன்ன சந்தேகம் வேதாந்த சிரவணத்தால் விலகிவிடுகிறது. எல்லா உபநிஷத்துக்களுக்கும் அத்வைதமான ப்ரஹ்மத்தில் தான் தாத்பர்யம். அதாவது ஒரே கருத்துடன் அத்வைதத்தையே உபதேசிக்கின்றன என்ற நிச்சயம்தான் சிரவணமென்பது. இந்த சிரவணத்தால் ப்ரமாண விஷயமான ஸந்தேஹம் நீங்கியபோதிலும் ஒன்றுக்கொன்று வெவ்வேறான ஜீவன், ஈசுவரன், உலகம் இவை உண்மைப்பொருள் என்று தோன்றிக்கொண்டிருக்கும்பொழுது இந்த அத்வைதம் எவ்விதம் ஸம்பவிக்கும் என்று ஏற்படும் எண்ணம் அஸம்பாவனையாகும். இது மனனத்தால் தீரும் அதாவது ஸ்வப்ன த்ருஷ்டாந்தம் முதலான யுக்திகளால் சிந்தித்து அத்வைதம் பொருந்தும் என்று தீர்மானிப்பது மனனமாகும். இப்படி சிரவணம், மனனம் இவைகளால் சந்தேகம் நிவர்த்திக்கப்பட்டும் அநாதிகாலமாக வந்த அவித்யையால் ஏற்பட்ட வாஸனையால் ஜகத் வாஸ்தவமானது என்ற நம்பிக்கை கொண்டிருப்பது விபரீதபாவனை எனப்படும். இது நிதித்யாஸனத்தால்தான் தீரும் ஆத்மாவின் ஸ்வரூபத்தைப் பற்றி அறிந்ததை அடிக்கடி நினைத்து அதையே இடைவிடாமல், எண்ணை நிறைந்த பாத்திரத்தை மெதுவாக சாய்த்து வந்தால் எப்படி எண்ணை தொடர்ந்து விழுமோ அப்படி சிந்தனையில் வைப்பது நிதித்யாஸனம் எனப்படும்.

இப்படி நிதித்யாஸனம் செய்வதினால் மேலே சொன்ன மூன்றாவதான விபரீத பாவனையும் நிவர்த்தியாகிறது. இவ்விதம் மூன்று பிரதிபந்தகங்களையும் (தடைகளையும்) ஒழிக்க முடியாவிடில், எல்லாவற்றையும் எரிக்கும் சக்தியையுடைய அக்னி எப்படி மணி, மந்திரம் இவைகளினால் தடைசெய்யப்பட்டு ஒரு துரும்பையும் எரிக்க சக்தியற்றதாகுமோ அப்படி ஞானமாகிய அக்னியும் தடைகளால் தடுக்கப்பட்டு அக்ஞானத்தையும் அதன் விளைவுகளையும் கொஞ்சமும் நாசம் செய்ய முடியாததாகிறது. முன் சொல்லப்பட்ட வழியில்

மேலேசொன்ன மூன்று தடைகளும் நீக்கப்பட்டால், உடனடியாக துரும்பை தடைநீங்கிய அக்னி எரிப்பதுபோல் அவித்யையையும் அதன் விளைவுகளையும் ஞானம் நாசமடையச்செய்யும்.

மேலும் ஒரு அபிப்ராயத்தைத் தீர்மானம் செய்வதில் ஆறு லிங்கங்கள் (அடையாளங்கள்) உண்டு. அவைகளாவன :—

1. உபக்ரமம் — உபஸம்ஹாரம். ஆரம்பமும் முடிவும் ஒரே விஷயத்தை சொல்வது.
2. அப்யாஸம் — திருப்பித் திருப்பிச் சொல்வது.
3. அபூர்வதா — வேறு வழியில் தெரியமுடியாது என்பது.
4. பலம் — இதன் உபயோகம்.
5. உபபத்தி — காரணங்களால் நம்பும்படி செய்தல்.
6. அர்த்தவாதம் — உண்மையைப் புகழ்ந்து நம்பச்செய்தல்.

இந்த ஆறும் எந்த விஷயத்திற்கு ஒற்றுமையாக உள்ளதோ அதில்தான் அதற்குத் தாத்பர்யம் என்பதைத் தீர்மானம் செய்யலாம். சாந்தோக்ய உபநிஷத்தில் இதைப் பார்ப்போம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் 6-வது அத்யாயத்தில் "ஸத் ஒன்றுதான் முதலில் இருந்தது" என்று ஆரம்பித்து முடிவிலும் "எல்லாம் இந்த ஸத்ஸ்வரூபம்தான் இதுவே ஸத்யம்" என்று கூறப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரே விஷயத்தைப்பற்றி பேசியிருப்பதால் இந்த உபநிஷத்துக்கே அகண்ட ப்ரஹ்மத்தில் தாத்பர்யம் என்று தெரியவருகிறது. இதுதான் முதலாவதான உபக்ரமோபஸம்ஹாரங்கள்.

तत्त्वमसि என்ற உபதேசத்தை (ஜா - 6 - 8 - 7) ஒன்பது தடவை திருப்பித்திருப்பி விளக்கியிருப்பது அப்யாஸம் என்ற இரண்டாவது அடையாளம்.

பிரத்யக்ஷம், அனுமானம், முதலிய பிரமாணங்களைக் கொண்டு பிரம்மத்தை அறியமுடியாது. அனுபவத்தால்தான் அறியமுடியும் என்பது "அபூர்வதா" என்ற மூன்றுவது அடையாளம்.

அகண்டமான பிரம்மத்தை அறிந்தவன் பிராரப்தம் முடிந்தபின் விதேஹ கைவல்யம் அடைவதாகக் கூறியிருப்பது நான்காவது அடையாளம்.

அர்த்தவாதம் (புகழ்ந்துபேசுது) என்பது ஐந்தாவது.

எப்படி ஒரு மண்கட்டியின் ரூபத்தை அறிந்துகொண்டால் மண்ணால் செய்யப்பட்ட எல்லாக் காரியங்களும் அறிந்ததாகுமோ என்று உதாஹரணங்களினால் பிரம்மத்தை அறிய முடியும் என்று ருஜு செய்வது 'உபபத்தி' என்ற ஆருவது அடையாளம்.

மேலே ஐந்தாவதாகச் சொன்ன அர்த்தவாதம் என்ற ருஜு ஏழு வகைப்படும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ப்ரளயம், பிரவேசம், ஸம்யமனம், சோதனம், பலன்.

1—3 ஸ்ருஷ்டி—ஸ்திதி—பிரளயம்:—தைத்திரீய உபநிஷத்தில் பிரபஞ்சம் பிரஹ்மத்திலிருந்தே உண்டானது அதிலேயே இருக்கிறது, அதிலேயே அழிகிறது என்று கூறப்பட்டிருக்கிறது மண்ணிலிருந்து உண்டாகி அதிலேயே இருந்து அதிலேயே மறைந்து போகும் குடம் முதலிய கார்யங்கள் காரணமான மண்ணைக்காட்டிலும் வேருக இல்லை இதுபோலவே ப்ரஹ்மத்திலிருந்து உண்டாகி அதிலேயே இருந்து அதிலேயே மறைந்து போகும் ஸகலபிரபஞ்சமும் பிரஹ்மஸ்வரூபம்தான் வேறு அல்ல என்று தீர்மானிக்கலாம். இதுதான் ஸ்ருஷ்டி, ஸ்திதி, பிரளயம் என்ற மூன்றுவித அர்த்த வாதங்கள்.

4. பிரவேசம் —'தலை உச்சியில் துவாரம் செய்துகொண்டு இந்த வழியாக உள்ளே பிரவேசித்தது' 'பிரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து உள்ளே பிரவேசித்தது.' 'இந்த ஜீவாத்மரூபமாக உள்ளே நுழைந்து நாமரூபங்களை விளங்கச் செய்வேன்' இந்த வாக்யங்கள் பிரம்மமே ஜீவஸ்வரூபமாக உள்ளே நுழைந்திருப்பதாக கூறுகின்றன வெளியில் உள்ள மனிதன் வீட்டிற்குள் நுழைந்த போதிலும் அவன் எப்படி வேறு மனிதன் இல்லையோ இதுபோலவே ப்ரஹ்மமும் ஜீவனும் ஒன்றுதான் என்று தெரியவருகிறது

5. ஸம்யமனம்:— "பூமியில் அதற்குள் இருந்துகொண்டு அதனுல் அறிந்து கொள்ளப்படாமல் அதையே சரீரமாகக்

கொண்டு நியமனம் செய்கிறான்'' இது முதலான சுருதிகள் இருவரும் ஒன்று என்பதைக் காட்டுகின்றன.

6. பதார்த்த சோதனம்:— தத்பதார்த்தமான ஈசுவர ஸ்வரூபத்தையும் த்வம்பதார்த்தமான ஜீவஸ்வரூபத்தையும் சோதித்துக்காட்டும் சுருதி வாக்யங்கள் அவைகளில் உள்ள விருத்த தர்மங்களை நீக்குவதன்மூலம் இரண்டு ஸ்வரூபமும் ஒன்றுதான் என்பதைக் காட்டுகின்றன.

7. பலன்:—''ப்ரஹ்மத்தை அறிந்தவன் எல்லையற்ற நிரதிசய பலனையடைகிறான்''. 'அவன் அமிருதனாக (அழிவற்றவனாக) ஆய்விட்டான்.' இம்மாதிரி வாக்யங்கள் ஜீவப்ரஹ்மைக்ய ஞானத்திற்கு மோக்ஷ பலனைக் கூறுவதன்மூலம் அதில் தாத்பர்யத்தைக் காட்டுகிறது.

ஏழுவிதமான அர்த்தவாத வாக்யங்களுடன் கூடி அவாந்தர வாக்யங்கள் அகண்டமான ஜீவப்ரஹ்மைக்யத்தை கருத்துடன் தெரிவிப்பதால் முன் சொல்லப்பட்ட ஆறுவித அடையாளங்களைக் கொண்டு மஹா வாக்யங்களுக்கும் ஜீவப்ரஹ்மைக்யத்தில்தான் தாத்பர்யம் என்பதை தீர்மானிக்க வேண்டும். இவ்விதமான தீர்மானம் ஏற்படுவதுதான் சிரவணமென்பது.

உலகில் ஸேநாதிபதியால் ஏவப்பட்டு ஸைன்யம் யுத்தம் செய்து ஜயத்தையடைகிறது. ஆனால் ராஜா தான் ஒரு காரியமும் செய்யாதபோதிலும் ''நான் ஜயித்தேன்'' என்று சொல்லிக்கொள்கிறான் இதுபோலவே ராகத்வேஷங்களால் தூண்டப்பட்டு மனம், வாக்கு, சரீரம் என்ற மூன்று கரணங்களும் புண்யம், பாபம், மிச்ரம் என்னும் மூன்றுவிதமான கர்மாக்களைச் செய்கின்றன. இதில் ஆத்மாவுக்கு ஒருவித ஸம்பந்தமும் இல்லை. ஆனாலும் அக்ஞானத்தால் ராகத்வேஷங்களிலுள்ள செய்விக்கும் தன்மையையும் கரணங்களிலுள்ள செய்யும் தன்மையையும் தன்னிடத்தில் ஏற்றிக் கொண்டு ''நான் செய்கிறேன், நான் செய்விக்கிறேன்'' என்று அபிமானம் கொள்கிறான். உண்மையில் ஆத்மாவுக்கு செய்யும் தன்மையோ, செய்விக்கும் தன்மையோ, கிடையாது என்று தீர்மானமாக அறிந்துகொள்பவன்தான் ஜீவன்முக்தன்.

ஐந்தாவது வர்ணகம் முற்றும்.

कर्तुमशक्यम् । उपासना योगश्च पुरुषतन्त्रत्वात्कर्तुमकर्तुमन्यथा कर्तुं शक्यौ । ताभ्यां चित्तैकाग्र्यमणिमाद्यष्टैश्वर्यं च साध्यते, न तु ज्ञानम् । उपासनायोगौ मनोव्यापाररूपत्वात्क्रियात्मकौ न वस्तुतन्त्रौ । तस्माद्वस्तुतन्त्रं ज्ञानं कर्मणा नायाति, किं तु विचारेणैव साध्यम् । सालिग्रामो रत्नं सुवर्णमित्यादिवस्तुनिर्णयो लक्षणपरीक्षाभ्यां निघर्षणेन च कर्तव्यः, न तु स्नानसंध्यावन्दनप्राणायामादिना कस्यापि साध्य इति निर्णयः । एवमात्मज्ञानमप्यात्मानात्मविचारं विनोपासनादिभिः साधयितुं न शक्यते । तस्मान्मुमुक्षुरितरव्यापारं विहाय श्रवणमननाभ्यां सदा आत्मानात्मविचारमेव कुर्यात् । य एवं तदेकपरः सोऽस्मिन्नेव जन्मनि संसारबन्धाद्विमुक्तः सन् जीवन्मुक्तिं विदेहमुक्तिं च प्राप्नोतीति सकलवेदान्ता घोषयन्ति । एवं मयोक्तं हे पुत्र, त्वं विश्वासेन गृहीत्वा चिन्मात्रेण तिष्ठ, न तु कदाचिदपि कर्तृत्वादिरूपेण तिष्ठ ॥

इति षष्ठवर्णकम् ॥

ஆறாவது வர்ணகம்

நான்காவது வர்ணகத்தின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட துக்கம் முதலான ஏழுபதார்த்தங்களில் துக்கம், சரீரம், கர்ம, ராகத்வேஷங்கள் இந்நான்கும் ஒன்றுக்கொன்று காரணமாகிறது. அதாவது துக்கத்திற்குக் காரணம் சரீரம். சரீரத்திற்குக் காரணம் கர்மா, கர்மாவுக்குக் காரணம் ராகத்வேஷங்கள் இந்நான்கும் 4வது 5வது வர்ணகங்களில் விவரிக்கப்பட்டன. இந்த 6-வது வர்ணகத்தில் ராகம் துவேஷம் முதலிய அந்தக்கரணத்தினுடைய விருத்தி பேதங்களும் அபிமானம் (பற்றுதல்), அவிவேகம், அஞானம் இவைகளும் விளக்கப்படும். ராகதுவேஷாதி விருத்திகள் 16 அவையாவன:—

1. ராகம், 2. துவேஷம், 3. காமம், 4. கோபம், 5. லோபம், (ஈயாத்தனம்) 6. மோஹம், 7. மதம்,

8. மாத்ஸர்யம் 9. ஈர்ஷ்யை, 10. அசூயை, 11. டம்பம், 12. தர்ப்பம், 13. அஹங்காரம், 14. இச்சை, 15. பக்தி 16 சிரத்தை.

இவைகளின் விளக்கமாவது:—

1. ஸ்திரீ விஷயமாக விஷயசுகத்தில் உண்டாகும் எண்ணம் ராகம் என்பது.
2. தனக்குக் கெடுதல் செய்தவனுக்கு மறு கெடுதல் செய்யும் எண்ணம் துவேஷம்.
3. வீடு, வயல் முதலியவைகளை சம்பாதிக்கும் எண்ணம் காமம்.
4. மேலே சொன்ன சொத்தை அடைவதில் தடை செய்பவர்களிடம் காட்டும் வெறுப்புணர்ச்சி கோபம்.
5. தான் சம்பாதித்த சொத்தில் கொஞ்சமும் நல்லவர்களுக்குக்கொடுக்கக்கூடாது என்ற எண்ணம் லோபம்.
6. தனக்கு ஐசுவரியம் இருக்கிறது என்ற கர்வத்தால் எதை செய்யவேணும் எதைச்செய்யக்கூடாது என்று யோசிக்காமல் சுமமா இருப்பது மோஹம்.
7. எனக்கு சொத்து இருக்கிறது. எதுதான் என்றால் செய்யமுடியாது என்ற எண்ணம் மதம்.
8. தனக்கு ஸமானமான சொத்துள்ள இதரர்களைக் கண்டால் ஸகிக்காமல் இருப்பது மாத்ஸர்யம்.
9. இந்தக்கஷ்டம் அவனைப்பீடிக்காமல் என்னை ஏன் பீடிக்கிறது என்று எண்ணுவது ஈர்ஷ்யை.
10. இந்த சுகம் எனக்குத்தான் உரிமையானது. இது எப்படி அவனுக்கும் கிடைத்தது என்று எண்ணுவது அசூயை.
11. இந்த தர்மத்தை நான் செய்வதினால் எனக்குக் கீர்த்தி ஏற்படும் என்று எண்ணுவது டம்பம்.
12. எனக்கு சமானமானவன் உலகில் யாரும் இல்லை என்ற எண்ணம் தர்ப்பம்.

13. எல்லாவற்றிலும் பிடிவாதம் அஹங்காரமாகும்.
14. யாராலும் விலக்கமுடியாததான உண்பது மலஜலம் விடுவது முதலிய காரியங்களை செய்யும் எண்ணம் இச்சையாகும்.
15. குருவிடமும், நல்லவர்களிடமும், தேவதையிடத்திலும் அதிகப்ரீதிவைப்பது பக்தி.
16. வேதாந்த வாக்கியத்திலும், யாகம் முதலிய காரியங்களிலும், குருவின் உபதேசத்திலும் நம்பிக்கை கொள்வது சிரத்தை.

கேள்வி:—ஆத்மாவைப்பற்றி விசாரிக்கும் போது மனதின் எண்ணங்களைப்பற்றி ஏன் விசாரிக்கவேண்டும்?

பதில்:— எல்லா ஜீவர்களுக்கும் பந்தம், மோக்ஷம் என்பது மனதின் மூலமாகத்தான் ஏற்படுகிறது. எப்படியெனில் ஸ்வபாவமாகவே நிர்மலமாக உள்ள மனதுக்கு அசுத்தமான எண்ணத்துடன் சேர்க்கையே பந்தமாகும் இதுவே அசுத்தம் நீங்கி இருக்கும் தன்மை மோக்ஷமாகும். மேலே சொன்ன ராகம் துவேஷம் முதலான 16 வகைகளில் முதல் 14 வகைகள் அசுத்தமான எண்ணங்கள் பக்தி, சிரத்தை இரண்டும் சுத்தமான எண்ணங்கள். முதல் 13 வகைகளும் எல்லோருக்கும் பிரயத்னமில்லாமலேயே மறுபடியும் மறுபடியும் வந்துகொண்டிருக்கும் இவை மனிதர்களை பாபம் செய்வதிலேயே தூண்டும். இந்த எண்ணங்கள் உடையவர்களுக்கு முற்றிலும் கேடான நிலைமைதான் கிடைக்குமே தவிற மேலே போகும் நிலைமையே ஏற்படாது. ராகதுவேஷங்களை நீக்கி, பக்தி, சிரத்தை இவைகளுடன் கர்மாக்களை செய்வதனால் காலகிரமத்தில் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை பெறும் நிலைமை ஏற்படும். ஆகையால் மனிதன் தன்னுடைய மனதை நன்கு தூய்மை உள்ளதாகச்செய்து அசுத்தத்தைக்கொடுக்கும் ராகம் முதலானவைகளை விலக்கி சுத்தியைக்கொடுக்கும் பக்தி சிரத்தைகளிலேயே மனதை நிலை நிறுத்தவேண்டும் பசி தாகங்களைப்போக்குவதும், மூத்ரபுரீஷங்களை விடுவதும் தன் இச்சையினால் செய்யக்கூடியது. இவைகளை நிறுத்தமுடியாது நிறுத்தினாலும் கிலேசம்தான் உண்டாகும். சாப்பிடுவதாலும் மலஜல விஸர்ஜனம் செய்வதாலும் நன்மையான ஸ்வர்க்கமோ தீமையான நரகமோ இரண்டும் ஏற்படுவதில்லை.

ஆகையால் தன் இச்சையாக சாப்பாட்டையும் மலமூத்ர விஸர்ஜனத்தையும் செய்யத்தான் வேண்டும்.

இவ்விதம் விழிப்பு, ஸ்வப்னம் இரண்டிலும் ராகதுவேஷங்கள் இருக்கும்போது கர்மா ஏற்படுகிறது. ஸுஷுப்தி, மூர்ச்சை, ஸமாதி, சும்மா இருத்தல் ஆகிய நிலைகளில் ராக துவேஷாதிகள் இல்லை ஆகையால் கர்மாவும் அப்போது இல்லை. அதனுல் ராகதுவேஷங்கள்தான் கர்மாவுக்குக் காரணம் என்று தீர்மானமாகத்தெரிகிறது.

இந்த ராகதுவேஷங்கள், எதனுல் உண்டாகிறது என்று கேட்டால், அபிமானம் (பற்றுதல்) என்பதால் என்று பதில், உதாஹரணமாக, ஒரு ஸ்திரீக்கு தான் 'ஸ்திரீ' என்ற அபிமானம் எதுவரையில் இருக்குமோ அதுவரையில், அனுராகத்துடன் புருஷனுக்கு பணிவிடை செய்தல், வீட்டை கவனிப்பது, சமையல் செய்வது, இவைகளில் ஈடுபாடு உண்டாகிறது. புருஷனுக்கும் "நான் புருஷன்" என்ற அபிமானம் எதுவரையில் இருக்கிறதோ அதுவரையில் ஆசையுடன் மனைவி குழந்தைகள ஆகியவர்களை ரக்ஷிக்கிருன், வியாபாரம், விவசாயம் முதலிய காரியங்களை நடத்துகிருன். இப்படியே எல்லா ஜனங்களும் வர்ணம் ஆசிரமம் முதலிய பற்றுதலால் அவரவர்களின காரியங்களை ஆசையுடன் செய்வதில் முயல்கிருர்கள். ஆகையால் ராகதுவேஷங்களுக்கு அபிமானம் (பற்றுதல்)தான் காரணமாகிறது.

இதைப் பரிசீலனை செய்வதினுல் என்ன பிரயோஜனம்? மோக்ஷத்தை அடைய விரும்பும் மனிதன், ஜாதி, வர்ணம், ஆசிரமம், வயது, அவஸ்தை முதலியவைகளில் பற்றுதலை விட்டுவிடவேண்டும். அப்படி விட்டால் பந்தம் விட்டுப் போகும். பற்றுதல் இருக்கும் வரையில் ராக துவேஷங்கள் இருக்கும். பற்றுதல் இல்லாவிடில் ராக துவேஷங்களும் இல்லை. மற்றெரு வழியில் இதைப் பார்ப்போம். விழிப்பு, ஸ்வப்னம் முதலிய நிலைகளில் வர்ணம், ஆசிரமம் முதலியவைகளில் பற்றுதல் இருப்பதால் ராக துவேஷங்கள் மூலமாக காரியத்தில் பிரவிருத்தி ஏற்படுகிறது. ஸுஷுப்தியிலும், சும்மா இருக்கும் நிலையிலும் வர்ணுசிரம பேத பற்றுதல் இல்லாததால் ராகத்வேஷாதி மூலமாக கர்மாவில் பிரவிருத்தி ஏற்படுகிறதில்லை.

அப்படியானுல் இந்தப் பற்றுதல் எதனுல் ஏற்படுகிறது? அவிவேகத்தால் ஏற்படுகிறது. எப்படியெனில், ஜீவன் தேகத்தை விட வேருக இருந்தும் விவேகமின்மையால் "நான் பிராம்மணன்" "நான் க்ஷத்திரியன்" "நான் வைசியன்" "நான் சூத்திரன்" "நான் பிரம்மசாரி" "நான் கிருஹஸ்தன்" "நான் வான பிரஸ்தன்" "நான் ஸந்நியாஸி" "நான் புருஷன்" "நான் ஸ்திரீ" என்ற அபிமானம் ஏற்படுகிறது. ஆகையால் அபிமானத்திற்கு அவிவேகம்தான் காரணம். வேறு காரணமில்லை அபிமானத்திற்கு சரீரம் காரணமாக இருக்கமுடியாது. எல்லோருக்கும் சரீரம் இருப்பதால் க்ஷத்திரியனுக்கு "நான் பிராஹ்மணன்" என்றும், பெண்ணுக்கு "நான் புருஷன்" என்றும், ப்ரஹ்மசாரிக்கு "நான் கிருஹஸ்தன்" என்றும் அபிமானம் ஏற்படட்டுமே! இவ்விதம் ஏற்படுகிறதில்லையே! அதனுல் சரீரத்தை மட்டும் காரணமாகக் கொண்டு அபிமானம் ஏற்படுகிறதில்லை. அவிவேகத்தால்தான் ஏற்படுகிறது

குடுமி, பூணூல் இதைக்கொண்டு பிராஹ்மணன் என்றும், காஷாயம், கமண்டலு இவைகளைக் கொண்டு சந்நியாசி என்றும் பற்றுதல் வரலாமே என்ருல் அது சரியல்ல, குடுமி, பூணூல் வைசியர்களுக்கும் குயவர்களுக்கும் கூட உண்டு. அவர்களுக்கு "நான் பிராஹ்மணன" என்ற அபிமானம் ஏற்படுகிறதில்லை காஷாயம், கமண்டலு இவை சில தபஸ்விகளான சூத்திரர்களுக்கும் உண்டு. இப்பேற்பட்டவர்களுக்கு "நான் ஸந்நியாஸி" என்ற எண்ணம் வருவதில்லை.

ஸ்திரீ புருஷன் என்ற வித்யாஸமும் பற்றும் அவயவங்களை ஒட்டி ஏற்படுவதுபோல் இங்கும் அவயவங்களினுல் "நான் பிராஹ்மணன்" என்பது முதலான பற்றுதல் வரட்டுமே என்ருல் அதுவும் சரியல்ல. எல்லோருக்கும் அவயவங்கள் ஒன்றுபோல் இருப்பதால் இதனுலே பற்றுதல் உண்டாகிறது என்று சொல்லமுடியாது. குறிப்பிட்ட தாய் தகப்பன் இவர்களிடமிருந்துண்டான அவயவ விசேஷம் பற்றுதலுக்குக் காரணம் என்ருல் அதுவும் சரியல்ல. பிராஹ்மணனுடைய மயிர், நகம், பல், மலஜலம், முதலியவைகளிடத்திலும் "பிராஹ்மணன்" முதலான வியவஹாரம் ஏற்படும். அப்படி ஏற்படுவதில்லை. ஆகையால் பற்றுதலுக்கு அவிவேகம்தான்

காரணம் வேறு ஏதாவது காரணமாகும் என்று யாரும் சொல்ல முடியாது.

ஆகவே "நான் பிராமணன்" இது முதலான பற்றுதல் எதனுல் ஏற்படுகிறது? என்று நன்கு விசாரித்துப்பார்த்தால் உலகத்தில் "உத்ஸவம்" "கல்யாணம்" "ஸபா" "சேனை" என்று அநேக வஸ்துக்களின் கூட்டத்துக்கு ஒவ்வொரு பெயரைக்கொடுத்து அந்தந்தப் பெயரைக்கொண்டு வியவஹாரம் நடக்கிறது. அதேபோல மாயாமயமானதும், வாக்கினுல் இது என்று விவரிக்க முடியாததுமான தேகம், இந்திரியம் முதலியவைகளின் கூட்டத்தையே உலகில் 'பிராமணன்' 'க்ஷத்திரியன்' 'வைசியன்' 'சூத்ரன்' 'ஸ்திரீ' 'புருஷன்' 'அலி' 'குஜராத்தியர்' 'மகாராஷ்டிரர்' 'ஆந்திரர், 'கர்னுடகர்' 'திராவிடர்' 'சாஸ்திரிகள்' 'தீக்ஷிதர்' 'பௌராணிகர்' அவதானிகள்' 'கங்கையில் ஸ்நானம் செய்பவன்' 'சைவன்' 'பாகவதர்' 'சேவகன்' 'யுத்ததலைவர்' 'ராஜா' 'மந்திரி' 'குரு' 'சிஷ்யன்' என்ற பதங்களால் பலவகைப் பட்டனவாகப்பேசுகிருேம். இறந்த காலம், நிகழ்காலம் வருங்காலம் இம்மூன்றிலும் ஆத்மாவுக்கு பெயர் உருவம் என்பது கிடையாது மேலே சொன்னமாதிரி சிந்தனை செய்யாததுதான் அவிவேகம் இந்த அவிவேகத்தினுல் தான் எல்லாருக்கும் ஆத்மாவிடத்தில் வர்ணம், ஆசிரமம் முதலிய தோற்றமும் பற்றுதலும் வருகிறது.

இந்த அவிவேகம் எதனுல் வருகிறது? அநாதிகாலமாக தன்னுடைய வாஸ்தவமான ஞான ஸ்வரூபமான ஆத்மவஸ்துவை மறைத்துக்கொண்டிருப்பதும் ஆத்மஞானத்தினுல் மட்டும் போக்கடிக்கக்கூடியதுமான, ஆதிஇல்லாத அஞானம் என்பதுதான் காரணம். "என்னை நான் அறிந்துகொள்ளவில்லை" என்பதால் இந்த அக்ஞானம்தான் குறிப்பிடப் படுகிறது உலகில் பயித்தியம் ஒருவனைத்தவிற தன்னை அறியாதவர் வேறுயார் இருக்கிருர் எனில் உலகில் உள்ளவர்கள் எல்லாரும் பயித்தியக்காரர்கள்தான் ஏனெனில், "நான் பிராமணன்" "நான் க்ஷத்திரியன்" "நான் வைசியன்" "நான் பிரம்மசாரி" "நான் கிருஹஸ்தன்" என்றெல்லாம் பொய்யான இந்த உடலையேதான் எல்லாரும் அறிகிருர்கள். சரீரத்தைக்காட்டிலும் வேருன ஆத்மாவை யாரும் உணர்வதில்லை, ஆகையால் எல்லாருமே பயித்தியக்காரர்கள்தான்,

உலகத்தில் சில சாஸ்திரம் படித்தவர்களும், புராணம் சொல்பவர்களும், தேகம் ஆத்மா அல்ல, இது குடம் சுவர் போன்றது என்று எண்ணிக்கொண்டு இந்த தேகத்தைவிட வேருன ஆத்மாவை அறிந்திருக்கிருர்களே! ஆதலால் ஒருவரும் ஆத்மாவை அறியவில்லை என்று நீங்கள் சொல்லியிருப்பது சரியல்ல எனில், அவர்களும் உண்மையான ஆத்மாவை உணரவில்லை ஆனுல் அவர்கள் காரியத்தை செய்கிறதும் பலத்தை அனுபவிக்கிறதும் ஒரு கட்டுப்பாட்டுக்குட்பட்டதும் புண்யலோகங்களுக்கு செல்லக்கூடியதும் சைதன்யத்தின் ஆபாஸரூபமுமான வியாவஹாரிக ஜீவாத்மாவையே ஆத்மா என்று எண்ணுகிருர்கள். இவரைக்காட்டிலும் வேருனதும் காரியங்கள் செய்யாததும், கட்டுப்பாட்டுக்கு உட்படாததும், அசைவற்றதும், சுத்தஞானரூபமானதுமான உண்மையான ஆத்மஸ்வரூபத்தை இவர்களும் அறிவதில்லை.

கேள்வி: இந்த அக்ஞானம் எதனுல் ஏற்பட்டது?

பதில்:— இதற்கு உத்பத்தி இல்லை என்று வேதத்திலும், சாஸ்திரத்திலும் பிரசித்தமாக சொல்லப்பட்டிருப்பதால் இதற்குக்காரணம் சொல்லமுடியாது.

கேள்வி:— அப்படியானுல் இந்த அஞானத்துக்கு ஆரம்பம் இல்லை எனில் முடிவும் இல்லை என்று நிச்சயமாகச்சொல்லலாம் ஆதி இல்லாத வஸ்துவுக்கு அந்தமும் கிடையாதல்லவா! ஆகவே அக்ஞானம் நசிக்காததால் ஜீவனுக்கு முக்தியும் ஏற்படாது?

பதில்:—இந்த அஞானத்துக்கு ஆரம்பம் கிடையாதெனினும் முடிவு உண்டு. உலகில் சில வஸ்துக்களுக்கு உத்பத்தி இல்லாவிட்டாலும் முடிவு ஏற்படுகிறது. சிலவற்றிற்கு முடிவு இல்லாமல் இருந்தும் உத்பத்தி இருக்கிறது. அதாவது ப்ராகபாவத்திற்கு உத்பத்தி இல்லை. ஆனுல் முடிவு உண்டு. ப்ரத்வம்ஸாபாவத்திற்கு முடிவு இல்லை ஆனுல் உத்பத்தி உண்டு.

(ஒரு குடம் உண்டாவதற்கு முன் அக்குடம் இல்லாமலிருந்தது. இதற்கு ப்ராகபாவம் என்று பெயர். இப்பொழுது இக்குடம் உண்டாகும் வரை இதன் ப்ராகபாவம் அநாதிகாலமாக இருந்துகொண்டிருக்கிறது. இக்குடம் இதற்குமுன் ஒரு

பொழுதும் இல்லாதபடியால் இந்த ப்ராகபாவம் ஒருகாலத்தில் ஏற்பட்டதல்ல. ப்ராகபாவம் ஒருகாலத்தில் உண்டாயிருக்குமானால் அதற்கு முன்னால் இதே குடம் இருந்திருக்கவேண்டும். இப்பொழுது உண்டாகும் குடம் இதற்குமுன்னால் ஒருக்காலும் இல்லை. ஆகையால் ப்ராகபாவம் அநாதி. இது அநாதியானாலும் குடம் உண்டானவுடன் இந்த ப்ராகபாவம் மறைந்துவிடுகிறது. ஆகவே அநாதிக்கும் நாசம் உண்டு என்று தெரிகிறது.

குடம் அழிந்தவுடன் குடம் இல்லாமல் போய்விடுகிறது. இதற்கு ப்ரத்வம்ஸாபாவம் என்று பெயர். குடம் இருக்கும் பொழுது ப்ரத்வம்ஸாபாவம் இல்லாதபடியாலும் குடம் அழிந்த பிறகே ப்ரத்வம்ஸாபாவம் ஏற்படுகிறபடியாலும் இந்த ப்ரத்வம்ஸாபாவத்திற்கு ஆதி உண்டு. ஆனாலும் இதே குடம் மறுபடியும் உண்டாகாதபடியால் ப்ரத்வம்ஸாபாவத்திற்கு முடிவு இல்லை.

மேலும் வாதம், பித்தம், சிலேஷ்மம் முதலியவைகளினால் ஏற்பட்ட ஜ்வரம் முதலிய வியாதிகளுக்கு மூலம் எது என்று தெரியாவிட்டாலும் வைத்தியசாஸ்திரத்தில் கண்ட மருந்துகளால் நிவ்ருத்தி அடைவதாகத்தெரிகிறது. அதுபோல் அக்ஞானத்தின் மூல காரணம் தெரியாவிட்டாலும் வேதாந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட மஹாவாக்கியங்களினால் ஏற்பட்ட ஞானத்தினால் அதற்கு நாசம் உண்டு என்று தீர்மானம்.

இந்த அக்ஞானத்தினுடைய ஸ்வரூப லக்ஷணம் என்ன என்றால் அது சொல்வதற்கு கடினமானது. இந்த அஞானத்தை இருப்பதாகச் சொல்லமுடியாது இல்லாததாகவும் சொல்ல முடியாது. இருந்தும் இல்லாதது என்றும் சொல்லமுடியாது. இதற்கு அவயவம் உண்டு என்று சொல்லமுடியாது இல்லை என்றும் சொல்ல முடியாது. இரண்டும் கலந்தது என்றும் சொல்லமுடியாது ஆத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதாகவோ வேறுபடாததாகவோ இரண்டும் கலந்ததாகவோ சொல்லமுடியாது. ஆகவே அக்ஞானம் இன்னவிதம் என்று வாக்கினால் சொல்லமுடியாது. இதைச்சற்று விளக்குவோம்.

தத்வஞானத்தால் இந்த அக்ஞானம் நசித்துப்போவதால் இது எப்போதும் இருக்கும் தன்மையை உடையதல்ல, “ நான்

அக்ஞன் (அக்ஞானமுள்ளவன் அறிவற்றவன்) என்று எல்லோராலும் அக்ஞானம் அனுபவிக்கப்படுவதால் முயல் கொம்பு, மனிதன் கொம்பு, ஆகாயத்தாமரைபோல் முற்றிலும் இல்லை என்றும் சொல்லமுடியாது. ஒன்றுக்கொன்று விரோதமுள்ளதால் இருப்பது இல்லாதது என்ற இரண்டும் கலந்தது என்றும் சொல்லமுடியாது.

ஸ்தூலமாயுள்ள (பஞ்சீக்ருத) ஆகாசம் மற்றப்பொருள்களைவிட ஸூக்ஷ்மமானது. இதைவிட ஸூக்ஷ்மமானது அபஞ்சீக்ருத ஆகாசம். அதைவிட சூக்ஷ்மமானது ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற குணங்கள். அவைகளைவிட சூக்ஷ்மமானது அஞானம். ஸூக்ஷ்மத்திற்கும் மூலகாரணமாயுள்ள அஞானம் அவயவங்களை உடையது என்று சொல்லமுடியாது. ஸ்தூலபதார்த்தங்களாகிய பிரபஞ்சமாக அஞானம் மாறுதல் அடைவதால் அவயவமில்லாதது என்றும் சொல்லமுடியாது ஒன்றுக்கொன்று விரோதமானதால் இரண்டும் கலந்தது என்றும் சொல்லமுடியாது.

அத்வைதத்தில் கருத்துள்ள சுருதிகளுடன் விரோதமேற்படுவதால் அக்ஞானம் ஆத்மாவைக்காட்டிலும் வேறு என்று சொல்லமுடியாது மேலும் ஆத்மா ஒன்றில்தான் ஸத்தை உள்ளது. ஆத்மாவில் உள்ள ஸத்தையைக்காட்டிலும் வேறாக ஒரு இடத்திலும் ஸத்தை கிடையாது. ஆகையால் ஆத்மாவைக்காட்டிலும் வேறாக இருக்கும் பொருளாக அக்ஞானத்தைக் கூறமுடியாது. அக்ஞானம் ஆத்மாவைக் காட்டிலும் வேறு அல்ல. ஆத்மாவேதான் என்று கூறினால் அக்ஞானத்தை ஆத்மாவின் சக்தியாகக் கூறமுடியாமல் போய்விடும். “ இந்த ஆத்மாவின் மேலான சக்தி பலவாறாகக் கேட்கப்படுகிறது ” என்ற சுருதிக்கு விரோதம் வரும். மேலும் ஆத்மாவும் அக்ஞானமும் ஒன்றானால் ஆத்மா ஜடமாகவும் அக்ஞானம் சேதனமாகவும் ஆகிவிடும். அவித்யை முதலான பெயர்கள் ஆத்மாவுக்கும் ஏற்படும். ஸச்சிதானந்த ஸ்வரூபமான ஆத்மாவுக்கு பொய், ஜாட்யம், துக்கம் இத்தன்மைகளும் ஏற்பட்டுவிடும். ஆகையால் அக்ஞானம் வேறு அல்ல என்று சொல்லமுடியாது. ஒன்றுக்கொன்று விரோதமானதால் ஒரே அக்ஞானம் ஆத்மாவைக்காட்டிலும் வேறாகவும் வேறு அல்லாததாகவும் இருக்கமுடியாது. ஆகவே ஒருவிதத்திலும் அக்ஞானத்தை விவரித்துக்கூற முடியாதபடியால் அது அநிர்வசனீயம்.

இப்பேற்பட்ட ஆதியில்லாத அஞானத்தினால் அவிவேகம் அதனால் பற்றுதல், அதனால் ராகதுவேஷங்கள், அதனால் கர்மா, கர்மாவினால் சரீரம், சரீரத்தால் துக்கம் ஆகவே ஆத்மாக்ஞானத்தால்தான் பரம்பரையாக ஸம்ஸாரதுக்கம் ஏற்படுகிறது என்று அறியவேணும். இந்த துக்கம் எப்போது நீங்கும் என்றால், சரீரம் போனால் துக்கம் போகும் சரீரம் இருக்கும்போது துக்கம் இருக்கிறது கர்மா ஒழிந்தால் சரீரம் போகும், ராகதுவேஷங்கள் போனால் கர்மா போய் விடும் பற்றுதல்போனால் ராகதுவேஷங்கள் நாசமாகும் அவிவேகம் போனால் பற்றுதல் நீங்கும் அஞானம் போனால் அவிவேகம் ஒழியும் அத்துவைதசாஸ்திர பயிற்சியால் "நானே பிரும்மம்" என்ற தீர்மானமான நிச்சயபுத்தி ஏற்பட்டால் இந்த அஞானம் நீங்காது.

கேள்வி:— பிரும்மஹத்தி முதலிய பெரிய பாபகர்மாக்களும் பிராயச்சித்தரூபமான நல்ல கர்மாக்களால் நிவர்த்திக்கப் படுகின்றன. அப்படி இருக்க, இந்த அல்பமான, பொய்யான அஞானத்தை அந்த ஸத்கர்மாக்களால் போக்கடிக்க முடியாதா?

பதில்:— முடியாது கர்மாவுக்கும் அஞானத்துக்கும் விரோதம் இல்லை கர்மா அக்ஞானத்தை விருத்தி செய்கிறதே தவிர ஒழிப்பதில்லை. அமாவாஸையன்று இரவில் தோன்றும் இருட்டை மேகத்தின் மறைவு பெரிதாகக்காட்டுகிறது போல கர்மாவானது அக்ஞானத்தை விருத்தி செய்யுமே தவிர ஒழிக்காது. ஆனால் அந்த இருளை ஸூர்யன் போக்கடித்து விடுகிறான். அதுபோல ஞானம்தான் அக்ஞானத்தைப் போக்கடிக்கும், கர்மா போக்கடிக்காது.

கேள்வி:—மனம், வாக்கு, காயம் இந்த மூன்று கரணங்களால் ஏற்படுவதுதான் கர்மா என்பது. அந்தக்கரணத்தில் உண்டாகும் விருத்திதான் ஞானமாகும். ஆகவே ஞானமும் மானஸ கர்மாவானபடியால் அது எப்படி அக்ஞானத்தை நிவர்த்திக்கமுடியும்?

பதில்:—வாஸ்தவம் அந்தக்கரண விருத்தி என்பது மானஸக்ரியை தான். ஆனால் இந்த விருத்தி நேரிடையாக அக்ஞானத்தைப் போக்குவதில்லை. நித்யமான ஞானம்தான் அக்ஞானத்தைப் போக்குகிறது. இதற்கு விருத்தியானது

உபாதியாக இருக்கிறது. ஸூக்ஷ்மமான சக்ஷுரிந்திரியம் ரூபத்தை கிரஹித்த போதிலும் அதற்கு அநுகூலமாகவும் ஆச்ரயமாகவும் இருந்துகொண்டு ஸ்தூலமான நேத்ரம் உபாதியாகிறது. இதுபோலவே நித்யஞானமும் விருத்தியுடன் சேர்ந்துகொண்டே அக்ஞானத்தை அழிப்பதால் விருத்தியும் உபாதியாகிறது. (தன்னிடம் கார்யம் நடைபெறும் சக்தி இருந்தும் அதை வெளிப்படுத்தி காரியம் நடைபெறுவதற்கு அனுகூலமாக அதனுடன் சேர்ந்துள்ள வஸ்துவிற்கு உபாதி என்று பெயர்)

இந்த ஞானம் இருவகைப்படும் (1) ஸ்வரூபஞானம் (2) விருத்திஞானம் ஸுஷுப்தியில் (ஸ்வப்னமற்ற நித்திரையில்) அக்ஞானத்தை பிரகாசப்படுத்தும் ஞானம் ஸ்வரூப ஞானமாகும். விழிப்பிலும் ஸ்வப்னத்திலும் விஷயங்களை பிரகாசப்படுத்தும் ஞானம் விருத்தி ஞானம் எனப்படும். பகல் வேளையில் சூரியபிரகாசத்தால் சுவர் விளங்குகிறது. அச்சமயம் அநேகம் கண்ணாடிகளை சூரியனுக்கு நேராகக் காட்டினால் சூரியப்ரகாசம் கண்ணாடி மூலம் சுவற்றில் விழும். ஒரு கண்ணாடிக்கும் மற்றொரு கண்ணாடிக்கும் நடுவில் ஆகாசத்திலுள்ள சூரியனின் பிரகாசம் விழுவதுபோல்தான் ஸுஷுப்தியில் ஸ்வரூபஞானமென்பது. கண்ணாடி மூலமாக சுவற்றில் சூரியபிரகாசம் விழுவது போன்றது ஜாக்ரத் ஸ்வப்னங்களில் விருத்தி ஞானமென்பது

அப்படியானால் விழிப்பு, ஸ்வப்னம் இந்த இரண்டு நிலைகளில் ஸ்வரூபஞானமே கிடையாதா என்றால் ஸ்வரூபஞானம் என்பது எல்லா சமயத்திலும் எப்போதும் இருந்துகொண்டு தான் இருக்கிறது. ஸுஷுப்தியில் மனம் இல்லாததால் மனத்தின் பரிணாமமான விருத்திகள் கிடையாது. ஞானம் என்பது ஆத்மஸ்வரூபமானது. இந்த ஞானம் விருத்திகளில் புகுந்துகொண்டு அஞானத்தைப் போக்குகிறது. விருத்திகள் தாங்களாகவே அக்ஞானத்தைப் போக்கடிக்க சக்தியற்றவை. ஆகையால் ஆத்மாவை ஒட்டிய அஞானமும் ஆத்மாகாரமான மனோவிருத்தியில் பிரவேசித்த ஸ்வரூப ஞானத்தினால் நாசமடையுமே தவிர புத்தியின் விருத்தியினால் நாசம் அடையாது. கோடிக்கணக்கான கர்மாக்களைச் செய்தாலும் இந்த அஞானம் அழியாது. எப்படி ஸத்கர்மாதான் பாபகர்மாவைப் போக்கடிக்குமோ அப்படியே விருத்தியில்

பிரவேசித்த மேலே சொன்ன ஞானமே அஞானத்தை அழிக்கும். மாணிக்கம் கல்தான் ஆனாலும் பிரகாசிக்கும் தன்மை இதற்குள்ளதால் 'ரத்ன தீபம்' என்று இதைச் சொல்லுகிறார்கள். அதேமாதிரி விருத்தி என்பது மனதின் பரிணாமமாக இருந்தாலும் அதற்குள் ஸ்வரூபஞானமிருப்பதால் விருத்திக்கும் ஞானம் என்ற பெயர் கௌணமாக ஏற்பட்டுள்ளது. இந்தக்காரணத்தால் விருத்தியைக் கர்மா என்று சொல்வதற்கில்லை.

ஸுஷுப்தியில் ஸ்வரூப ஞானத்தால் அக்ஞானம் பிரகாசிக்கப்படுமானால் அவை இரண்டுக்கும் விரோதமில்லையே! அப்பொழுது ஞானம் அகஞானத்தை எப்படி அழிக்கும்? ஸ்வரூபஞானத்துக்கும் அக்ஞானத்துக்கும் விரோதம் இல்லாமல் போனாலும் விருத்தி ஞானததுக்கும் அஞானத்துக்கும் விரோதம இருக்கிறது எப்படியெனில் உலகில் சூரியனுடைய பிரகாசத்தால் துரும்பு புல் முதலியவை இருப்பதாக காட்டப்படுகின்றது. அதனால், சூரியப்பிரகாசத்துக்கும் அவற்றிற்கும் விரோதமில்லை ஆனால் அதே சூரிய வெளிச்சம் சூரியகாநதக்கல்லின மூலம் வநதால் அந்த துருமபு புல், முதலியவைகளை எரித்து விடுகிறது அதுபோல் ஸ்வரூப ஞானத்துக்கும் அஞானத்துககும் விரோதமில்லாமல் இருந்த போதிலும் விருததியுடன அது கலக்குமபோது அதறகும் அஞானத்துககும் விரோதம் ஏற்படுகிறது. மேலே சொன்னபடி விருத்தி ஞானத்தினால் அஞானமும் அதன் காரியங்களும் நாசமடைந்தாலும விருத்தியும் அதனுள் புகுந்த ஞானமும் மிஞ்சி இருப்பதால் இரண்டற்றது எனற தன்மை எவ்விதம் ஏற்படும் எனறால் தேததாங்கொட்டையை அழுக்குள்ள ஜலததில் தேய்ததால், எப்படி அழுக்குப் போவதுடன் தேத்தாங்கொட்டையும் போய்விடுமோ அது போல் மேற்படி விருத்தி ஞானமும அஞானத்தையும் அதன காரியங்களையும் அழித்து தானும நாசத்தையடையும். விருத்தி ஒழிநதால் அதில தோன்றிய பிரதிபிம்பமாகிய ஞானமும பிம்பத்துடன (ஸ்வரூபஞானத்துடன்) போய்சேர்நதுவிடும். ஆகவே இரண்டற்ற ஆதமஸ்வரூபமே மீதமாகும். இப்படித் தான் ஞானத்தினால் அஞானம் அழியும் என அறியவும.

இப்படிப்பட்ட ஞானம், ஆத்மாவைப்பற்றி விசாரணை செய்வதனால் தான் ஏற்படுமே தவிற கர்மா, யோகம்,

உபாசனை இவைகளால் ஏற்படாது ஞானம் என்பது வஸ்துவை ஒட்டி ஏற்படக்கூடியது. அதாவது எப்படி வஸ்து உள்ளதோ அவ்விதமாக ஞானம் ஏற்படும் ஞானத்தைச் செய்யவோ, செய்யாமலிருக்கவோ வேறுவிதமாகச் செய்யவோ முடியாது யோகமும் உபாஸனையும் புருஷனையொட்டி ஏற்படக்கூடியது அவற்றைச் செய்யவோ செய்யாமலிருக்கவோ வேறு விதமாகச்செய்யவோ முடியும் மேலும் இந்த உபாசனை யோகம் முதலியவைகளினால் மனதின் ஒன்றுபட்ட நிலை, அணிமா, மஹிமா முதலிய
இவைகள் கிடைக்கும். ஆனால் ஞானம்
உபாஸனை முதலியவை மனதின வியாபாரமானதால் கிரியா ரூபமாக உள்ளது அது வஸ்துவை ஒட்டி ஏற்படக்கூடியதல்ல ஆகையால் வஸ்துவை ஒட்டின ஞானம் கர்மாவினால் வராது. விசாரணையினால்தான் ஏற்படும். உதாஹரணமாக, ஸாலிக்ராமம், ரத்னம். தங்கம் இவைகளின் மதிப்பை லக்ஷணத்தாலும் பரீக்ஷையாலும் மாத்து உரைத்துப்பார்ப்பதாலும் தீர்மானிக்கவேண்டுமே தவிற ஸ்நானம், ஸந்தியாவந்தனம், பிராணாயாமம் செய்தால் அதை தீர்மானம் செய்யமுடியாது. அதுபோல் ஆத்மஞானமும் ஆத்ம அனாத்மவிசாரம் செய்யாமல் உபாஸனை முதலியவைகளினால் ஏற்படாது ஆகவே மோக்ஷம் அடைய விரும்புபவன் இதர காரியங்களை விட்டு விட்டு சிரவணம் அதை சிந்தித்தல் முதலிய வழிகளில் ஈடுபட்டு எப்போதும் ஆத்மானாதம விசாரத்தையே செய்ய வேணும். (இது அடுதத அததியாயத்தில் விவரிக்கப் படுகிறது) எவன் ஒருவன் இந்த வழியில் இருப்பானோ அவன் இதே ஜன்மாவில் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவனாகி ஜீவன் முக்தி நிலையையும் விதேஹ முக்தி நிலையையும் அடைவான் என்று எல்லா வேதாந்தங்களும் சொல்லுகின்றன

ஆறாவது வர்ணகம் முற்றும்

चैतन्यस्य कूटस्थचैतन्यस्य चैकत्वाद्ब्रह्मकूटस्थौ लक्षयित्वाऽखण्डार्थस्तयोरैक्यमेव महावाक्येन बोध्यते । यथा पुत्रपौत्रोपाधिद्वयपरित्यागे पितृपितामहत्वाभावेनैको देवदत्त एवावशिष्यते, महातटाकघटोपाधिपरित्यागे शैत्यद्रवमधुरस्वभावं जलमेकमेवावशिष्यते, महावर्त्यल्पवर्तिपरित्यागे लोहितोष्णप्रकाशस्वभावो वह्निरेक एवावशिष्यते, तथा मायाऽविद्योपाधिपरित्यागे सच्चिदानन्दस्वभावमेकमात्मवस्त्वेवावशिष्यते ॥

एवं विचार्य 'परिपूर्णस्वभावः प्रत्यगात्मैव मम स्वरूपम्, अहं ब्रह्मास्मि, ब्रह्मैवाहमस्मि' इत्यनुभवो यस्य महानुभावस्यागच्छति स एव मुक्तः स एव कृतकृत्यः स एव ब्राह्मण इति सर्वे वेदान्ता भेरीवाद्यवदुद्घोषयन्ति ॥

इति सप्तमवर्णकम् ॥

ஏழாவது வர்ணகம்

இந்த வர்ணகத்தில் ஆத்ம அநாத்ம விவேகம் என்னவென்றும் அதனால் அடையும் ஆத்ம ஞானமும் அதனால் பெறும் பிரம்ம கைவல்யம் என்பது என்ன என்றும் உணர்த்தப்

முந்திய வர்ணகத்தில் ஆத்ம அநாத்ம விவேகத்தால் ஞானம் உண்டாகிறது என்று சொன்னோம். அந்த ஆத்மா என்பது எது? இது ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று சரீரங்களைக் காட்டிலும் விலக்ஷணமானது. இது விழிப்பு, ஸ்வப்னம், நல்ல தூக்கம் (ஸுஷுப்தி) இம்மூன்று நிலைகளிலும் நடக்கும் வியவகாரங்களை ஸாக்ஷியாக சம்பந்தப் பட்டுக்கொள்ளாமல் பார்க்கிறது. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம் ஆகிய ஐந்து கோசங்களுக்கும் வேறானது. இதன் லக்ஷணம், ஸத் சித்து ஆனந்தம்.

மூவகை சரீரங்களும் அநாத்மா அதன் லக்ஷணம் என்னவெனில், பொய், ஜடம், துக்கம் இவையே. இம்மூன்று வகை சரீரமும் வியஷ்டி, ஸமஷ்டி என இருவகைப்படும். வியஷ்டி ஸமஷ்டி லக்ஷணம் முதலாவது வர்ணகத்தில் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் மறுபடியும் இங்கும் கூறுகிறோம். காடு ஸமஷ்டி, மரம் என்பது வ்யஷ்டி. எல்லாம் கூடியது ஸமஷ்டி என்பது. தனித்தனியாக உள்ளது வ்யஷ்டி. ஸ்தூலம் சூக்ஷ்மம் காரணம் என்ற மூவகை சரீரங்களிலும் இந்த ஸமஷ்டி வியஷ்டி பேதம் உள்ளது எப்படியெனில், ஸமஷ்டி ஸ்தூல சரீரம், ஸமஷ்டி சூக்ஷ்ம சரீரம், ஸமஷ்டி காரண சரீரம் அதேமாதிரி வியஷ்டி (தனியான) ஸ்தூல சரீரம், வியஷ்டி சூக்ஷ்ம சரீரம், வியஷ்டி காரண சரீரம் இப்படி ஆறு வகையாய்ப் பிரிக்கலாம்.

மாயையையும் ஸமஷ்டி ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களையும் உபாதியாகக்கொண்ட ஆத்ம சைதன்யம் ஈசுவரன். அவித்யையையும் வ்யஷ்டி ஸ்தூல ஸூக்ஷ்மகாரண சரீரங்களையும் உபாதியாகக்கொண்ட ஆத்மசைதன்யம்
வாஸ்தவத்தில் ஆத்மசைதன்யம் ஒன்றுதான்.
வாஸ்தவமானது உபாதிகள் வாஸ்தவமல்ல. ஆனாலும் பலவான இந்த உபாதிகள் ஆத்ம சைதன்யத்தையும் பலவாக காட்டுகின்றன. ஒரே வஸ்துவைப் பலவாகத் தோன்றும்படி செய்வதுதான் உபாதி என்பது. இவை வாஸ்தவமானவை என்று எதுவரையில் ஒருவன் எண்ணுவானோ அதுவரை அவனுக்கு (உலக) பந்தத்திலிருந்து விடுதலை கிடையாது. "மாயையாகவும் அவித்யையாகவும் தானே ஆய்க்கொண்டு (அதில் ஆத்ம சைதன்யம் பிரதிபிம்பிப்பதால்) ஜீவனையும் ஈசுவரனையும் வெவ்வேறாகக் காட்டுகிறது" என்று வேதமாதா உபதேசிக்கிறாள்.

ஈசுவரனுக்கு மேலே சொன்ன காரண சரீரத்தின் ஸமஷ்டியில் பற்றுதல் கிடையாது. ஏனெனில் ஸுஷுப்தியில் அகங்காரம் என்பது மறைந்து போய்விடுவதால் பற்றுதலுக்கு காரணமே போய்விடுகிறது. இந்த காரண சரீர சமஷ்டியில் தோன்றும் ஈசுவரனை அவ்யாக்ருதன் என்றும் அந்தர்யாமி என்றும் சொல்வார்கள். இந்த ஈசுவர ஸ்வரூபம் உத்தம பக்தர்களால் உபாசிக்கப்படுகிறது. இந்த உபாசனை செய்ய சக்தியில்லாதவர்களுக்கு வேதம் சூக்ஷ்ம சரீர சமஷ்டியில்

தோன்றும் ஈசுவரனை உபாசிக்கும்படி உபதேசிக்கிறது. அந்த நிலையில் அதற்கு ஹிரண்யகர்ப்பன், ஸூத்ராத்மா, மஹாப்ராணன் என்ற பெயர்கள் உண்டு. இந்த ஹிரண்ய கர்ப்பனுக்கும் ஸூக்ஷ்ம சரீரத்தில் பற்றுதல் கிடையாது. பற்றுதலுக்குக்காரணமான அஹங்காரம் இருந்தபோதிலும் அப்பொழுது ஸ்வப்னவஸ்தையாகையாலும் அபிமானத்திற்கு ஆச்ரயமான ஸ்தூல சரீரத்தில் ப்ரவேசம் அப்பொழுது இல்லாததாலும் ஈசுவரனுக்கு சூக்ஷ்ம சரீரத்திலும் பற்றுதல் கிடையாது.

இந்த ஸமஷ்டி ஸூக்ஷ்ம சரீரத்தை உபாதியாகக் கொண்ட ஈசுவரனை உபாசிப்பதற்கு சக்தி இல்லாத ஜீவர்களைக்குறித்து சமஷ்டி ஸ்தூல சரீரத்தை உபாதியாகக் கொண்ட ஈசுவரனை உபாசிக்கும்படி வேதம் உபதேசிக்கிறது. அந்த ஈசுவரனுக்கு விராட், வைராஜன், வைசுவாநரன் என்ற பெயர்கள் உண்டு. இந்த ஈசுவரனுக்கும் ஸ்தூல சரீரத்தில் பற்றுதல் இருக்கிறதா எனில், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் பற்றுதலும் மற்றவை களில் பற்றுதல் இல்லாமலும் இருந்தால்தான் அபிமானம் கொள்கிறான் என்று கூறமுடியும். எல்லா ஜீவர்களுடைய சரீரங்களும் சேர்ந்துதான் (ஸமஷ்டி) ஈசுவரனுக்கு உபாதி யாகிறது. ஆகவே " நான் " என்ற அபிமானத்தால் விலக்கத் தக்க சரீரம் வேறு ஒன்றுமே இல்லாததால் அபிமானம் என்பதே பொருந்தாது.

இம்மூன்று வகையான ஈசுவரனையும் உபாசிக்க சக்தி யில்லாத ஜீவர்களுக்கும் வேதம் ஒரு வழி காட்டியிருக்கிறது. இதுதான் மும்மூர்த்திகளை உபாசிப்பது என்பது. ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற காரியங்களைச் செய்பவரும் ராஜஸமூர்த்தி, ஸாத்விகமூர்த்தி, தாமஸமூர்த்தி இவைகளுடன் கூடியவரும் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற பெயர்கள் கொண்டவரும், துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலன காரியங் களுக்காக மத்ஸ்ய, கூர்ம, வராஹ, வாமனாதி அவதாரங்கள் எடுப்பவருமான ஈசுவரனை உபாஸித்தல்.

இப்படி மும்மூர்த்திகளில் தோன்றும் ஈசுவரனுக்கு அந்தந்த மூர்த்தியில் பற்றுதல் இருக்கிறதா இல்லையா என்றால் இருக்கிறது என்றுதான் சொல்லவேணும். இல்லாவிடில்

அந்தந்த மூர்த்திகளால் சிருஷ்டி முதலிய காரியங்கள் செய்ய முடியாதல்லவா? ஆகையால் பற்றுதல் உண்டு. ஜீவனைப் போல் ஈசுவரனுக்கும் பற்றுதல் இருந்தால் ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் என்ன வித்யாசம் எனில் வித்யாஸம் உண்டு. ஒவ்வொரு ஜீவனுக்கும் தன்னுடைய தனிப்பட்ட தேகத்தில் நான், என்னுடையது என்ற அஹங்கார மமகாரங்கள் எப்போதும் இருக்கிறது. ஈசுவரனுக்கோ எனில், கருணையால் உலகத்தைக் காப்பாற்றுவதற்காக அந்தந்த காரியங்களைச் செய்யும்போது மட்டும் அவையவைகளில் பற்றுதல் உண்டாக்கப்படுகிறது. எப்படி நாடக மேடையில் நடிப்பவன் தான் எடுத்துக்கொண்ட வேஷத்தில் எவ்வித அபிமானம் கொள்கிறானோ அதுபோலவேதான். ஆகையால் ஜீவனுக்குள்ள பற்றுதலுக்கும் ஈசுவரனுக்குள்ள பற்றுதலுக்கும் மிகுந்த வித்யாஸம் உண்டு.

இப்படிப்பட்ட மூர்த்திகளையும் உபாசிக்கமுடியாத ஜீவர் களுக்கும் வேதம் ஒரு வழி காட்டியிருக்கிறது. அதாவது தாம்ரம் முதலிய உலோகங்களால் செய்யப்பட்ட விக்ரஹங் களை ஆராதிப்பது. ஆகையால்தான் இந்தப்பிரதிமைகளை சிலர் ஈசுவரன் என்று உபாசிக்கிறார்கள் ப்ரஹ்மா முதலான மூர்த்திகளிலும் அவரவர்களின் பிரதிமைகளிலும் ஒரே பரமேச்வரனே அந்தர்யாமியாக இருந்துகொண்டு அந்தந்த உபாசகர்களுக்கு அனுக்கிரஹத்தைச் செய்கிறார் ஈசுவரன் ஸர்வ வியாபி. (எங்கும் உள்ளவன்) என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்ளாத மூடர்கள் ஆங்காங்கு வெவ்வேறாக தனித்தனியான அநேகம் ஈசுவரர்கள் இருக்கிறதாக எண்ணிக் கொண்டு ஒருவருக்கொருவர் கலகம் செய்கிறார்கள். இவை எல்லாவற்றிற்குள்ளும் ஒரே ஈசுவரன்தான் இருக்கிறான் என்று அறியவேண்டும் எங்கும் ஒரே ஈசுவரனே இருக்கிறதானால் சாஸ்திரங்கள் பற்பல மூர்த்திகளைக் குறித்து ஏன் பேசுகின்றன. ஏன் வித்தியாசமான உபாசனைகளையும் சொல்லுகின்றன? வெளியிலேயே மனதைச் செலுத்தும் பாமர ஜனங்களையும் மெள்ள மெள்ள உள்நோக்கு உடையவர்களாகச் செய்து "பரமாத்மா ஒருவர்தான். அவரேதான் ஜீவன். அவரைக் காட்டிலும் வேறு ஒன்றும் கிடையாது" என்ற ஞானத்தைக் கொடுத்து முக்தியடையச் செய்வதற்காகத்தான் அநாதி காலமாக வந்துள்ள வேற்றுமையை ஒப்புக்கொண்டு அவர்

களின் மனப்போக்கை யனுசரித்து வேற்றுமையுடன் உபாசனத்தை விதிக்கிறது. ஆனாலும் இதில் சுருதிக்கு தாத்பர்யமில்லை. இவ்வாறு ஒரே ஆத்மசைதன்யம் மூன்றுவித ஸமஷ்டி சரீரங்களை உபாதியாகக்கொண்டு ஈசுவரனாக ஆகும் விதம் கூறப்பட்டது.

இனி ஒரே பரமாத்ம சைதன்யத்துக்கு மூன்றுவித வ்யஷ்டி சரீரங்களாகிற உபாதிகளால் ஜீவத்வநிலை ஏற்பட்டவிதம் சொல்லப்படுகிறது.

வியஷ்டியில் காரணசரீரத்துடன் சேர்ந்த பரமாத்மாவுக்கு "ப்ராஜ்ஞன்" "பாரமார்த்திகன்" "அவித்யையுடன் கூடியவன்" என்று பெயர்கள். வியஷ்டியில் ஸூக்ஷ்ம சரீரத்துடன் இருக்கும் பரமாத்மாவுக்கு "தைஜஸன்" "ஸ்வப்னத்தில் தோன்றுபவன்" "ப்ராதிபாஸிகன்" எனப் பெயர். வியஷ்டியில் ஸ்தூல சரீரத்தில் தோன்றும் பரமாத்மாவுக்கு "விசுவன்" "வ்யாவஹாரிகன்" "சிதாபாஸன்" என்று பெயர்கள் உண்டு.

இந்த ஜீவனுக்கு ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் ஆகிய மூன்று சரீரங்கள் எதற்காக என்றால் பிரயோஜனம் இருக்கிறது. ஜீவன் என்பது அந்தக்கரணத்தில் தோன்றும் பரமாத்மாவின் பிரதிபிம்பம். ஆகையால் ஜீவனுக்கு ஸூக்ஷ்ம சரீரம் அவசியமானது. ஸ்தூல சரீரம் இல்லாவிடில் ஸூக்ஷ்ம சரீரத்தால் மட்டும் எவ்வித காரியமும் செய்யமுடியாதாகையால் ஸ்தூல சரீரமும் அவசியம். இவ்விரண்டும் காரண சரீரமில்லாமல் இருக்கமுடியாதாகையால் அதுவும் அவசியமாகும். ஆகையால் ஜீவனுக்கு மூன்றுவித வியஷ்டி (தனிப்பட்ட) சரீரங்களும் அவசியமாகும்.

இப்படிப்பட்ட மூன்றுவிதமான வியஷ்டி சரீரத்தில் ஜீவனுக்குப்பற்றுதல் உண்டோ இல்லையோ என்றால், உண்டு என்றுதான் சொல்லவேண்டும். எப்படியெனில், ஜீவனுக்கு காரியத்தை செய்யும் தன்மை இருக்கிறது. சரீரத்தில் பற்றுதல் இல்லாவிடில் காரியத்தை செய்யும் நிலையே ஜீவனுக்கு ஏற்படுவதில்லை. கர்மாவைச் செய்யாவிடில் சரீரம் ஏற்படாது. சரீரம் இல்லாவிடில் ஜீவனே இல்லை. ஆகையால் ஜீவனுக்கு பற்றுதல் உண்டு எனக்கொள்ளவேண்டும். இவ்விதம்

பரமாத்மா ஒருவரே வியஷ்டி, ஸமஷ்டி, உபாதிகளால் ஜீவனாகவும் ஈசுவரனாகவும் ஆகிறான். உதாஹரணம்: ஒரு மனிதனுக்குப் பிள்ளை பிறந்துவிட்டால் தந்தையாக ஆகிறான். பேரன் பிறந்தால் பிதாமஹனாகிறான். பிள்ளையும் பேரனும் இல்லாவிட்டால் தந்தையாகவோ, பிதாமஹனாகவோ ஆவதில்லை. இதுபோல் அவித்யையால் ஜீவனாகவும் மாயையால் ஈசுவரனாகவும் ஒரே பரமாத்ம சைதன்யம் ஆகிறது. அவித்யையும் மாயையும் நீங்கிவிட்டால் ஜீவ நிலையும் ஈசுவர நிலையும் நீங்கி ஒரே பரமாத்ம சைதன்யம் தான் மிஞ்சுகிறது.

இந்த உதாஹரணத்தின் மூலம் ஒரே ஆத்மாவுக்கு வெவ்வேறு உபாதிகளால் ஜீவன், ஈசுவரன் என்று இரண்டு பெயர்கள் ஏற்பட்டது பொருத்தமாக இருக்கலாம். ஆனால் ஜீவன் சிற்றறிவுடையது. ஈசுவரன் பேரறிவுடையது. இந்த வித்யாஸத்துக்கு என்ன திருஷ்டாந்தம் எனில் இதற்கும் திருஷ்டாந்தம் இருக்கிறது. ஜலம் ஒன்றாக இருந்த போதிலும் பெரிய தடாகத்தில் இருக்கும் போது ஒரு கிராமததையே காப்பாற்றும் பெருத்த சக்திவாய்ந்ததாக இருக்கிறது. இதே ஜலம் குடத்தில் இருந்தால் ஒரு வீட்டுக்கு மட்டும் உபயோகமாகும் சிறு சக்திவாய்ந்ததாகிறது. அக்னியும் அப்படியேதான் பருமனான பெரிய திரியுடன் கூடியதாகில் வெகுதூரத்தில் பிரகாசிக்கும் பெரிய சக்தி உள்ளதாயும் சிறிய திரியுடன் கலந்தால் வீட்டுக்குள் மட்டும் பிரகாசிக்கும் சிறு சக்தி உள்ளதாயும் காண்கிறோம். ஆத்மாவும் அதுபோலவேதான் எல்லாவற்றிற்கும் காரணமான பெரிய மாயையுடன் சம்பந்தப்பட்டிருக்கும்போது ஸர்வக்ஞமாயும் (எல்லாம் அறிந்தநிலை), காரியபூதமான சிறிய அவித்யையுடன் கூடிய போது சிற்றறிவுடையதாயும் தோன்றுகிறது ஆகையால் ஸர்வக்ஞனான (பேரறிவுடைய) ஆத்மா, கிஞ்சிக்ஞனான (சிற்றறிவுடைய) ஆத்மா என இரண்டு ஆத்மாக்கள் கிடையாது. அதனால்தான் வேதாந்த சாஸ்திரம் तत् (அது) என்பதற்கும் त्व (நீ) என்பதற்கும் மூன்றுவித ஸம்பந்தம் மூலம் பிரிவு அற்ற ஒரே ஆத்மவஸ்துவை போதிக்கிறது.

மூன்று ஸம்பந்தங்களாவன:—

1. இருபதங்களுக்குள் ஸாமானாதிகரண்ய ஸம்பந்தம்

2. இருபதங்களின் பொருள்களுக்கு விசேஷண விசேஷ்ய பாவ ஸம்பந்தம்.

3. பதங்களுடனே அல்லது பதங்களின் அர்த்தங்களுடனே பிரத்யகாத்மாவிற்கு லக்ஷிய லக்ஷண பாவ சம்பந்தம். இவைகளுக்கு திருஷ்டாந்தங்களாவன:—

"அந்த தேவதத்தன் இவன் (सोऽयं देवदत्तः) என்றதில் மூன்று ஸம்பந்தங்களும் உண்டு. "அவன்" (सः) இவன் (अयं) என்ற இரு பதங்களுக்கும் தேவதத்தன் என்பவனே ஆச்ரயமாகிருன். ஆகையால் இரு சொற்களுக்கும் ஸாமானுதிகரண்ய ஸம்பந்தம்.

அந்தக்காலம் அந்த இடம் இவற்றுடன்கூடிய தேவதத்தனைக் குறிக்கும் सः என்ற சொல்லின் பொருளுக்கும், இந்தக்காலம், இந்த தேசம் இவற்றுடன்கூடிய தேவதத்தனைக் குறிக்கும் अयं என்ற சப்தத்தின் பொருளுக்கும் ஒன்றுக்கொன்று வேற்றுமையை விலக்குவதால் இருபதங்களுக்கும் விசேஷண விசேஷ்யபாவ ஸம்பந்தம் உள்ளது.

सः अयं என்ற இரு சொற்களோ அல்லது அவைகளின் பொருள்களோ அகண்டார்த்தமான (பிரிவற்ற வஸ்துவான) தேவதத்த வ்யக்தியை மட்டும் குறிக்கும் விஷயத்தில் விருத்தமான அம்சங்களை விட்டு விரோதமில்லாத அம்சமான தேவதத்தனை மட்டும் குறிப்பிடுவதால் லக்ஷ்யலக்ஷண பாவ ஸம்பந்தமும் உள்ளது.

இந்த மூன்று ஸம்பந்தங்களும் तत् त्वं असि (நீ அதாக இருக்கிருய்) என்ற வாக்யத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்பதை பார்ப்போம்.

'தத்' பதத்திற்கும் 'த்வம்' பதத்திற்கும் ஒரே சைதன்யம் ஆச்ரயமாக இருப்பதால் இருபதங்களுக்கு ஸாமானுதிகரண்ய ஸம்பந்தம் உள்ளது.

ஸர்வக்ஞத்வம் (எல்லாம் அறியும் தன்மை) பரோக்ஷத்வம் (இந்திரியங்களுக்கு புலப்படாத்தன்மை) முதலியவைகளுடன்கூடிய சைதனயத்தைச் சொல்கிற 'தத்' பதத்தின் பொருளுக்கும் கிஞ்சிஜ்ஞத்வம் (ஸ்வல்பமான ஞானம்) முதலியவைகளுடன் கூடிய சைதன்யத்தைச் சொல்கிற 'த்வம்'

பதத்தின் பொருளுக்கும் ஒன்றுக்கொன்று வேற்றுமையை விலக்குவதால் ஒன்றுக்கொன்று விசேஷண விசேஷ்யபாவ ஸம்பந்தமுள்ளது. 'தத் த்வம்' பதங்களாலோ அவைகளின் அர்த்தங்களாலோ பிரிவற்ற ஸச்சிதானந்த வஸ்து மட்டும் குறிப்பிடப்படும்பொழுது விருத்தமான அம்சங்களைத் தள்ளி விட்டு விரோதமில்லாத சைதன்யத்தை மட்டும் குறிப்பதால் லக்ஷ்ய லக்ஷணபாவ ஸம்பந்தமும் உள்ளது.

மேலே சொல்லப்பட்ட ஸம்பந்தங்களில் மூன்ருவதான லக்ஷ்யலக்ஷணபாவ ஸம்பந்தத்தை 'பாகத்யாகலக்ஷணை' (அம்சத்தை விடும் லக்ஷணை) ஜஹதஜஹல்லக்ஷணை (விட்டு விடாதலக்ஷணை) என்றும் கூறுவது உண்டு ஒரு வாக்யத்திலிருந்து அதன் பொருளைப்புரிந்து கொள்வதற்கு முக்ய வ்ருத்தி, குணவ்ருத்தி லக்ஷணுவிருத்தி என்ற மூன்று வ்ருத்திகளைக்காரணமாக சாஸ்திரங்களில் கூறுவார்கள். राजा गच्छति என்ற வாக்யத்திலிருந்து முக்ய விருத்தியினுலேயே அதாவது சப்த சக்தியினுலேயே 'அரசன் போகிருன்' என்று அறிந்து கொள்கிருேம். नीलं उत्पलं என்ற வாக்யத்தில் नीलं என்ற சொல் கருப்பு நிறத்தையும் उत्पलं என்ற சொல் உத்பல புஷ்பத்தையும் குறிப்பிடும். நீலநிறம் புஷ்பமாகாது புஷ்பம் நீல நிறமாகாது. ஆனுலும் புஷ்பத்தில் நீல நிறம் உள்ளது. ஆகவே கௌணவிருத்தியால் நீல நிறமுள்ள உத்பலபுஷ்பம் என்று இந்த வாக்யத்திற்கு பொருள் கிடைக்கிறது. இது போலவே अग्निः माणवकः என்ற வாக்யத்திற்கு நெருப்பு மாணவன் என்று பொருள். மாணவன் நெருப்பாக இருக்க முடியாது ஆனுலும் அக்னியில் உள்ள காந்தி என்ற குணம் மாணவனிடம் இருப்பதால் अग्निः माणवकः என்று சொல்கிருேம். இந்த வாக்யத்திற்கு கௌண விருத்தியால் காந்தியுள்ள மாணவன் என்று பொருள் கூறுகிருேம்.

லக்ஷணு விருத்தியானது ஜஹல்லக்ஷணு (விட்டலக்ஷணை) அஜஹல்லக்ஷணு (விடாத லக்ஷணை) ஜஹதஜஹல்லக்ஷணு (விட்டும் விடாத லக்ஷணை) என்று மூன்றுவிதமாகும்.

ஒரு சொல்லின் பொருளை விட்டுவிட்டு வேறு பொருள் கொள்வது ஜஹல்லக்ஷணையாகும். உதாஹரணம் गङ्गायां घोषः 'கங்கையில் இடைச்சேரி' என்பது இவ்வாக்யத்தின் பொருள்.

கங்காபதம் முக்யவிருத்தியால் பிரவாஹத்தைக் குறிக்கும் ஜலப்ரவாஹத்தில் இடைச்சேரி இருக்கமுடியாது. ஆகவே முக்யார்த்தத்தை ஏற்றுக்கொண்டால் விரோதம் ஏற்படுவதால் ஜஹல்லக்ஷணை வ்ருத்தியால் ப்ரவாஹம் என்ற முக்யார்த்தத்தை விட்டுவிட்டு गङ्गायां என்ற சொல்லுக்கு கங்கைக் கரையில் என்ற அர்த்தம் கொள்கிறோம். இப்பொழுது விரோதமில்லை. கங்கைக் கரையில் இடைச்சேரி இருக்கலாம் ஆகவே गङ्गायां घोषः என்ற வாக்யத்திற்கு ஜஹல்லக்ஷணையால் 'கங்கைக்கரையில் இடைச்சேரி' என்ற பொருள் கிடைக்கிறது

ஒரு சொல்லின் பொருளை விடாமல் அத்துடன் வேறு பொருளையும் சேர்த்துக்கொள்வது அஜஹல்லக்ஷணையாகும். உதாஹரணம். शोणो धावति 'சிகப்பு ஓடுகிறது' என்பது இவ்வாக்யத்தின் முக்யார்த்தம் இதில் விரோதம் ஏற்படுகிறது. சிகப்பு நிறம் ஓடாதல்லவா அதனால் இங்கு சோணபதத்தின் முக்யார்த்தமான சிகப்பு நிறத்தைவிடாமல் அத்துடன் குதிரை என்ற வேறு அர்த்தத்தையும் சேர்த்துக்கொண்டு அஜஹல் லக்ஷணைவ்ருத்தியால் இவ்வாக்யத்திற்கு 'சிகப்புக்குதிரை ஓடுகிறது' என்ற அர்த்தம் கிடைக்கிறது.

ஒரு சொல்லின் பொருளில் ஒரு அம்சத்தை விட்டு விட்டு மற்றொரு அம்சத்தை விடாமல் வைத்துக்கொள்வதற்கு ஜஹதஜஹல்லக்ஷணை என்று பெயர். सोऽयं देवदत्तः அவன் இந்த தேவதத்தன் என்பது இந்த வாக்யத்தின் முக்யார்த்தம் இங்கு स' என்ற சொல் அந்ததேசம் அந்த காலம் இவற்றுடன் கூடிய தேவதத்தனையும் अयं என்ற சொல் இந்த தேசம் இந்த காலம் இவற்றுடன் கூடிய தேவதத்தனையும் குறிப்பிடுகிறது இங்கு அந்தக்காலமும் இந்தக்காலமும் அந்த தேசமும் இந்த தேசமும் ஒன்ருக முடியாது. ஆகவே விரோதமேற்படுகிறது. ஆகையினுல் ஜஹத்அஜஹல்லக்ஷணை விருத்தியால் இரண்டு சொற்களிலும் உள்ள முக்யார்த்தத்தில் ஏகதேசமான காலதேசங்களைவிட்டு ஏகதேசமான தேவதத்த வியக்தியை மட்டும் பொருளாகக் கொள்ளவேண்டும். இப்பொழுது விரோதமில்லை. இந்த இடங்களில் முக்யார்த்தத்தை ஏற்றுக்கொண்டால் விரோதம் ஏற்படுவதால் லக்ஷணை விருத்தியால் வேறு அர்த்தம் கொள்ளப்படுகிறது.

तत् (அது) त्वं (நீ) இந்த இரு பதங்களுக்கும் எது வாச்யார்த்தம், எது லக்ஷ்யார்த்தம் என்ருல், மாயை, மாயையில் உள்ள பிரதிபிம்பம், மாயைக்கு அதிஷ்டானமான பிரம்மம் இம்மூன்றும் சேர்ந்து தத்பதத்தின் வாச்யார்த்தம் ப்ரஹ்ம ஸ்வரூபம் மட்டும் தத்பத லக்ஷ்யார்த்தம் இதுபோல் त्वं (நீ) என்ற பதத்துக்கு வாச்சியார்த்தமாவது அவித்யை, அவித்யையில் பிரதிபிம்பம், அவித்யையின் அதிஷ்டானமான ஸாக்ஷி சைதன்யம் இம்மூன்றும் சேர்ந்தது. त्वं பதத்தின் லக்ஷியார்த்தம் ஸாக்ஷிரூபியாக இருக்கும் கூடஸ்த சைதன்யம். (கூடஸ்தம் என்ருல் மாறுதலில்லாதது அசைவற்றது முக்காலத்திலும் நாசமில்லாதது எனப்பொருள்). ஆகையால் तत् त्वं இரு பதங்களின் வாச்சியார்த்தமான ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் விரோதம் ஏற்படுவதால் அந்த இரண்டிலும் விருத்தமான அம்சங்களை விட்டுவிட்டு விருத்தமில்லாத பிரம்ம சைதன்யம் கூடஸ்த சைதன்யம் இவற்றை லக்ஷணையால் அர்த்தமாகக் கொள்ளவேணும். தத்பத லக்ஷ்யார்த்தமான ப்ரஹ்ம சைதன்யமும் த்வம்பத லக்ஷ்யார்த்தமான கூடஸ்த சைதன்யமும் ஒரே வஸ்துவானபடியால் இப்பொழுது மஹாவாக்யார்த்தத்தில் விரோதமில்லை. ஆகவே தத்த்வம்பத லக்ஷ்யார்த்தமான ப்ரஹ்ம கூடஸ்த சைதன்யங்களின் ஐக்யம் தான் அகண்டார்த்தமாக மஹாவாக்யத்தால் போதிக்கப் படுகிறது.

உதாஹரணமாக பிள்ளை, பேரன் என்ற இரண்டு அம்சங்களை நீக்கிவிட்டால், தகப்பன் பாட்டன் என்ற தன்மைகள் போய், தனிப்பட்ட தேவதத்தன் என்பவனே மிஞ்சுகிருன்; இதுபோல் பெரிய குளம், குடம் என்ற அம்சங்களை நீக்கி விட்டால், சீதளமானதும், த்ரவமானதும், ருசியாயுமுள்ள ஜலம் மட்டும் மீதமிருக்கும். அதேபோல், பெரிய திரி, சிறிய திரி என்ற வித்யாஸத்தை நீக்கிவிட்டால், சிவந்த பிரகாசமுள்ள, உஷ்ணமான அக்னி மட்டும் மிஞ்சுகிறது. அப்படியே மாயை, அவித்யை என்ற இரு உபாதிகளையும் நீக்கிவிட்டால் சச்சிதானந்த ஸ்வபாவமான ஆத்மா ஒன்றே மிஞ்சுகிறது.

இப்படி விசாரணை செய்து, பரிபூர்ண ஸ்வபாவமுள்ள ஆத்மாவே என்னுடைய ஸ்வரூபம், अहं ब्रह्मास्मि, ब्रह्मैवाहमस्मि நான் பிரம்மம் ப்ரஹ்மமே நான்) என்ற அனுபவம் எந்த

மகானுபாவனுக்கு வருகிறதோ அவனே முக்தன். செய்ய வேண்டியதை செய்து முடித்தவனும் அவனே என்று வேதாந்த வாக்கியங்கள் முழங்குகின்றன.

ஏழாவது வர்ணகம் முற்றும்.

॥ अष्टमवर्णकम् ॥

इतः परमात्मनः पूर्वोक्तशरीरत्रयविलक्षणत्वमवस्थात्रयसाक्षित्वं पञ्चकोशव्यतिरिक्तत्वं सच्चिदानन्दस्वरूपत्वं च चत्वारि लक्षणानि क्रमेण चतुर्भिर्वर्णकैरुच्यन्ते। एतेषु शरीरत्रयविलक्षणत्वं पञ्चकोशव्यतिरिक्तत्वं चातद्व्यावृत्तिलक्षणम्, अवस्थात्रयसाक्षित्वं तटस्थलक्षणम्, सच्चिदानन्दस्वरूपत्वं स्वरूपलक्षणम्। तथा आकाशादिशरीरत्रयान्तं दृश्यजातं 'नेति नेति' इति वाक्येन विहायावशिष्टं वस्त्वात्मेत्यतद्व्यावृत्तिलक्षणम्, 'अस्य प्रपञ्चस्य यदधिष्ठानं तदात्मवस्तु' इति तटस्थलक्षणम्, सच्चिदानन्दः पूर्णं नित्यमात्मवस्तु' इति स्वरूपलक्षणम् ॥

अस्मिन्नष्टमवर्णके शरीरत्रयविलक्षणत्वमुच्यते। शरीरत्रयस्याज्ञाने तद्विलक्षणत्वमपि दुर्विज्ञेयमिति प्रथमतः शरीरमुच्यते। स्थूलं सूक्ष्मं कारणमिति शरीरं त्रिविधम्। तत्र सर्वेषां प्रत्यक्षं करचरणाद्यवयवोपेतं स्तम्भवद्वर्तमानं यत् तत्स्थूलशरीरम्। सप्तदशावयवकं सूक्ष्मशरीरम्। अज्ञानमेव कारणशरीरम्। एतेषां शीर्यते क्षीयत इति व्युत्पत्त्या शरीरमिति नाम। तथा हि — इदं स्थूलशरीरमन्नाभावे शीर्यते, अन्ने विद्यमानेऽपि व्याधिना शीर्यते, तदभावेऽपि वयःपरिणामेन शीर्यते। पल्लवमिव सूक्ष्मशरीरमपि कदाचिद्वर्धते कदाचित् क्षीयते। रागद्वेषाद्यन्तःकरणवृत्तिविजृम्भणमेव सूक्ष्मशरीरस्य वृद्धिः, तासां संकोच एव जीर्णता। कारणशरीरस्यापि 'अहं जीवः' इति

प्रपञ्चाद्विलक्षण इति यो गुरुमुखेणात्मानं जानाति स एव असङ्गः स एव कृतकृत्यः स एव मुक्त इति सकलवेदान्तनिश्चय इति जानीहि ॥

इति अष्टमवर्णकम् ॥

எட்டாவது வர்ணகம்.

இனி வரும் நான்கு வர்ணகங்களில் ஆத்மாவின் நான்கு லக்ஷணங்கள் நிருபிக்கப்படும். அவையாவன:—

1. ஆத்மா ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களைக் காட்டிலும் வேறுபட்டது.

2. அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஜ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும் ஐந்து கோசங்களைக் காட்டிலும் வேறுபட்டது. இவை இரண்டும் அதத்வ்யாவ்ருத்தி லக்ஷணம் அதாவது ஆத்மாவல்லாததான (அநாத்மாவான) மூன்று சரீரங்களையும் ஐந்து கோசங்களையும் ஒவ்வொன்றுக ஆத்மா அல்ல ஆத்மா அல்லஎன்று ஒதுக்கித்தள்ளுவதன் மூலம் மிஞ்சியுள்ள ப்ரஹ்மவஸ்துவைக் காட்டுகிறது. அதுபோலவே ஆகாசம் முதல் சரீரம் வரை காணப்படும் பொருள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றுக ஆத்மா அல்ல என்று தள்ளி மிஞ்சிய வஸ்துவை ஆத்மாவாக காட்டுவதும் அதத்வ்யாவ்ருத்தி லக்ஷணம்.

3. விழிப்பு, ஸ்வப்னம், ஸுஷுப்தி ஆகிய மூன்று நிலைகளிலும் ஸாக்ஷியாக உள்ளது. இது தடஸ்த லக்ஷணம் கரையிலுள்ள மரம் நதியில் இல்லாவிட்டாலும் நதியை காட்டுகிறது. இது போல் உண்மையில் அவஸ்தாத்ரயங்களேயில்லாதபடியால் அவஸ்தாத்ரய ஸாக்ஷித்வமும் ப்ரஹ்மத்திற்கு இல்லை ஆனாலும் கல்பிதமான அவஸ்தாத்ரயங்களுக்கு பாஸகமாக ஸவிசேஷப்ரஹ்மம் இருப்பதால் இந்த லக்ஷணத்தைக் கொண்டு நிர்விசேஷப்ரஹ்மத்தைத் தெரிந்து கொள்ளலாம் கல்பிதமான பிரபஞ்சம் அதன் அதிஷ்டானமான ப்ரஹ்மத்திற்கு லக்ஷணமாகிறது.

4. ஸச்சிதானந்த ஸ்வருபமானது ப்ரஹ்மத்தின் ஸ்வருபம் ஸச்சிதானந்தமானதால் இது ஸ்வருப லக்ஷணமாகிறது. பூர்ணம் நித்யம் இவையெல்லாம் ஸ்வருபலக்ஷணம்.

இந்த 8வது வர்ணகத்தில் மூவகை சரீரங்களைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது நிருபிக்கப்படுகிறது. மூவகை சரீரங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளாவிட்டால் அவைகளைக் காட்டிலும் ஆத்மாவிலக்ஷணன் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது. ஆகையால் மூவகை சரீரங்களைப்பற்றி முதலில் கூறப்படுகிறது.

ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணமென்று, சரீரம் மூவகைப் படும். எல்லோருக்கும் பிரத்யக்ஷமாய்த் தோன்றுவதும் கை, கால் முதலிய அவயவங்கள் கொண்டதும் கம்பம்போல் இருப் பதும் எதுவோ அது ஸ்தூல சரீரம். ஸூக்ஷ்ம சரீரம் என்பது 5 ஞானேந்திரியங்கள், 5 கர்மேந்திரியங்கள், 5 பிராணன்கள், மனம், புத்தி என்னும் பதினேழு அவயவங்கள் கொண்டது. அக்ஞானம் காரண சரீரம்.

சரீரம் என்றபதத்துக்கு குறைவையடைவது என பொருள். ஸ்தூல சரீரம் ஆகாரமில்லாவிட்டால் குறைவையடையும். ஆகாரம் இருந்தாலும் வியாதியினுல் குறையும், அதுவு மிலலாமல் வயதுஅதிகமாவதால குறைவையடையும். ஸூக்ஷ்ம சரீரமும், புஷ்பம் தளிர்களைப்போல் சிலசமயம் வளர்கிறது, சிலசமயம் குறைவை அடைகிறது. ராகம் த்வேஷம் முதலான அந்தக்கரண வ்ருத்திகள் அதிகரித்தால ஸூக்ஷ்ம சரீரவளாச்சி என்றும் அவை குறைந்தால் சூக்ஷ்ம சரீரத்தின குறைவு என்றும் தெரிந்துகொள்ளவேண்டும். காரண சரீரத்துக்கும் "நான ஜீவன்" எனப்படும்போது வளர்ச்சியும், "நான் பிரம்மம்" என்னும்போது குறைவும் உண்டு. இந்த ஸூக்ஷ்ம காரண சரீரங்களின் வளர்ச்சியை அஞானிகளிடமும் அவைகளின் குறைவை ஞானிகளிடமும காணலாம். ஆகையால் மூவகை சரீரத்துக்கும் கிழத்தனம் ஏற்படுவதால் சரீரம் என்று சொல்லப்படுகிறது. எரிக்கப்படுவதால் இவை களுக்கு தேஹம் என்ற பெயரும் உண்டு.

கேளவி:—உலகில் ஸ்தூல சரீரத்தைத்தான் அக்னியினுல் எரிக்கிருர்கள். ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் அக்னியினுல்

எரிக்கப்படுவதில்லையே. அப்படி இருக்க அவைகளுக்கு தேகம் (எரிக்கப்படுவது) என்ற பெயர் எப்படி வந்தது?

பதில:— அக்னியைவிட கொடூரமான தாபத்ரயங்களால் (ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், ஆத்யாத்மிகம்) எல்லா சரீரங் களும் தபிக்கப்படுவதால் மூவகை சரீரத்துக்கும் சரீரம் என்ற பெயர் உகந்ததே. ஸ்தூல பூதங்களிலிருந்து உண்டானபடி யால் சரீரம் ஸ்தூலமாக இருக்கிறது ஸ்தூல சரீரம்போல் ஸ்தூலமாக இல்லாததாலும் ஸூக்ஷ்ம பூதங்களிலிருந்து உண்டானபடியாலும் ஸூக்ஷ்மமாயிருக்கிறது. தான் மறைந்து கொண்டு சப்தம் முதலான விஷயங்களை அறிவிப்பதால் இதற்கு லிங்க சரீரமென்றும் பெயர். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவ்விரண்டிற்கும் காரணமாக இருப்பதால் காரண சரீரம் என்று மற்றதை சொல்லுகிரேம்

கேளவி:— முன்பு ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்கள் இரண்டும் பஞ்சபூதங்களிலிருந்து உண்டானவை என்று சொல்லப் பட்டது இப்போது இவை இரண்டும் காரண சரீரத்திலிருநது உண்டானதாக சொல்லப்படுகிறதே. எது சரி?

பதில்:—அத்யாரோப ஸ்ருஷ்டியில் (ஆத்மாவில் கிரமமாக பிரபஞ்சத் தோற்றம் ஏற்படும்பொழுது) சரீரம் பஞ்ச பூதங் களிலிருந்து உண்டானதாக சொல்லப்பட்டது. அது சரியே. ஆனுல் மொத்தமாக ஸ்ருஷ்டியைக் கூறும்பொழுது பிரபஞ்சம் முழுவதற்கும் அக்ஞானம் காரணமானதாலும் ஆத்மாவுக்கு சரீரம் ஏற்படுவதற்கும் அக்ஞானம் காரணமானதாலும் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் என்ற இரண்டு சரீரங்களுக்கும் அக்ஞானம் காரணமென்று கூறப்படுகிறது.

சிருஷ்டியில் கிரம சிருஷ்டி யுகபத் சிருஷ்டி என்ற வகை களின் விவரங்கள் என்ன? வரிசைக்கிரமமாக, அதாவது மூலப்பிரகிருதி, மாயை அவித்யை, ஆவரணம், விக்ஷேபம், ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், மண் என்று கிரமமாக உத்பத்தியைச் சொல்வது கிரமசிருஷ்டி. எல்லா பிரபஞ்சமும அக்ஞானத்தால் ஆத்மாவை அறியாததால் உண்டானதாகச் சொல்வது யுகபத் சிருஷ்டி எனப்படும்.

கேளவி:— ஸ்தூல சரீரம் கண்ணுக்குத் தெரிவதால் அதைப்பற்றி ந்தேகம் இல்லை. ஸூக்ஷ்ம சரீரம் நமக்குத்

தெரியாததால் இது உள்ளது என்று எப்படி தீர்மானிக்க முடியும் ?

பதில்:—பதினேழுவிதமான கரணங்களின் காரியங்களால் இந்த ஸூக்ஷ்ம சரீரம் இருக்கிறது என உணரலாம். அந்த 17வித கரணங்களின் காரியத்தை ஸ்தூல சரீரத்தால் செய்ய முடியாதா எனில், முடியாது என்பதுதான் பதில். ஏனெனில் ஸுஷுப்தி, மூர்ச்சை மரணம் ஆகிய நிலைகளில் ஸ்தூல சரீரம் இருந்தபோதிலும் மேல்கண்ட 17 கரணங்களின் காரியங்கள் ஏதும் காணப்படாததால் விழிப்பிலும் ஸ்வப்னத்திலும் அந்தக் கரணங்களின் வேலை காணப்படுவதாலும் ஸ்தூல சரீரத்தைத்தவிற 17 அவயவங்களுடன் கூடிய சூக்ஷ்ம சரீரம் உண்டு என்று முடிவு செய்கிறோம். அதுவே லிங்க சரீரம் எனப்படும்.

கேள்வி:—இந்த ஸ்தூல சரீரம் இல்லாமல் ஸூக்ஷ்ம சரீரம் காரியம் செய்வதில்லையே ஆகையால் இரண்டும் சேர்ந்துதான் பார்ப்பது முதலான காரியங்களைச்செய்கிறது என்று சொல்லக் கூடாதா ?

பதில்:—பகுத்தறிவுடன் விசாரித்துப் பார்த்தால் பார்ப்பது முதலிய காரியங்கள் எல்லாம் சூக்ஷ்ம சரீரத்தால் ஏற்படுகிறதே தவிற ஸ்தூல சரீரத்தால் அல்ல என்பது தெரியவரும். எப்படியெனில, கட்டையில் ஏற்றிய நெருப்பு சமையல் செய்ய உஷ்ணத்தைக் கொடுக்கிறது. கட்டையின்றி அக்னி வேலை செய்வதில்லை. ஆனாலும் எரிப்பது சமையல் பக்குவம் செய்வது ஆகியவை நெருப்பின் வேலையேதான் கட்டையின் வேலை இலலை. அதுபோல ஸ்தூல சரீரத்தை உபயோகித்துக் கொண்டு ஸூக்ஷ்ம சரீரம் எல்லாக்காரியங்களையும் செய்த போதிலும் அவை சூக்ஷ்ம சரீரத்தின வேலையே தவிற ஸ்தூல சரீரத்தின் வேலை இலலை. ஆகையால் பார்ப்பது முதலிய காரியங்களிலிருந்து 17 அவயவங்கள் கொண்ட சூக்ஷ்மசரீரம் ஒன்று உண்டு என்று தீர்மானிக்கலாம்.

5 ஞானேந்திரியங்கள்—காது, கண், நாக்கு மூக்கு, தோல். 5 கர்மேந்திரியங்கள்—வாக்கு, கை, கால், குதம், குறி. 5 பிராணன்கள்—பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன். அந்தக்கரணம் 2-மனஸ் புத்தி, இவை தான் லிங்க சரீரத்திலுள்ள 17 அவயவங்கள்.

சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் ஆகியவை ஞானேந்திரியங்களால் கிரகிக்கப்படும் விஷயங்கள் அறிவதற்கு உதவி செய்வதால் ஞானேந்திரியம் எனப்பெயர். சுகத்தையும் பிரகாசத்தையும் விளக்குகிற ஸத்வகுணத்திலிருந்து உண்டாயிருக்கிறபடியால் இந்த இந்திரியங்கள் ஞான ஸாதனமாகின்றன. பேசுவது, எடுப்பது, நடப்பது வெளிப்போக்குவதுசந்தோஷம்,ஆகிய க்ரியைகளைச்செய்வதால் வாக் முதலியவற்றிற்கு கர்மேந்திரியம் எனப்பெயர். சஞ்சலமாயும் அழுக்கடைந்துமுள்ள ரஜோகுணத்திலிருந்து உண்டானபடியால் இவை க்ரியா ஸாதனங்கள். வெளிமூச்சு விடுதல் உள் மூச்சு இழுத்தல் ஆகியவைகளால் சரீரத்தைக் காப்பாற்றி பலத்தையும் கொடுப்பதால் இவைகளுக்கு பிராணன்கள் எனப்பெயர். ரஜோகுண காரியமானதால்தான் இவைகளுக்கு இந்த சக்தி உண்டாகிறது என அறியவும் விமர்சனம் (ஆலோசனை) செய்யும் அந்தக்கரண வ்ருத்திக்கு மனம் என்றும் தீர்மானம் செய்யும் விருத்திக்கு புத்தி என்றும் பெயர். இவ்வாறு ஸூக்ஷ்ம சரீரத்திற்கு 17 அவயவங்கள் உள்ளன.

உலகில் ஒரு வஸ்துவை அறியவேண்டும் என்றால் மூன்று உபாயங்கள் உண்டு. இவை 1 உத்தேசம், 2 லக்ஷணம், 3 பரீக்ஷை ஒரு வஸ்துவின் பெயரை மாத்திரம் சொல்வது உத்தேசம். வஸ்துவின் வாஸ்தவமான ரூபத்தை அறிவது லக்ஷணம். வஸ்துவின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொள்ளும் விசாரணையே பரீக்ஷை என்பது. 17 அவயவங்களின் பெயரைச் சொன்னதினாலேயே உத்தேசம் ஏற்பட்டுவிட்டது, அடுத்தது லக்ஷணம்.

அவ்யாப்தி, அதிவ்யாப்தி, அஸம்பவம் என்னும் மூவித தோஷங்களற்று அதற்குமட்டும் ஏற்பட்டுள்ள தர்மம் அதற்கு லக்ஷணமாகும்.

(1) அவ்யாப்தி : லக்ஷணத்தால் குறிப்பிடப்படவேண்டிய லக்ஷ்யத்தில் சிலவற்றில் அந்த லக்ஷணம் இல்லாமலிருந்தால் இது அவ்யாப்தியாகும்.

உதாஹரணம் :—கருப்பு நிறமுள்ளது பசு என்று சொன்னால் இந்த லக்ஷணம் பசுக்களிலேயே சிகப்பு நிறமுள்ள பசுவில் இல்லை. ஆகவே அவ்யாப்தி என்ற தோஷம் வருவதால்

சில பசுக்களில் இல்லாமல் சில பசுக்களில் மட்டும் உள்ள இது எல்லாப்பசுக்களுக்கும் பொதுவான லக்ஷணமாகாது.

(2) அதிவ்யாப்தி :— லக்ஷ்யமல்லாதவற்றிலும் லக்ஷணம் இருக்குமானால் இது அதிவ்யாப்தியாகும்.

உதாஹரணம்:— நான்கு கால்களுள்ளது பசு என்று சொன்னால் இந்த லக்ஷணம் பசுவல்லாத நாய் முதலானவற்றிலும் இருக்கிறபடியால் அதிவ்யாப்தி தோஷமுள்ளது. ஆகையால் இதுவும் பசுவுக்கு லக்ஷணமாகாது.

(3) அஸம்பவம் : – லக்ஷ்யம் முழுவதிலுமே இல்லாமலிருப்பது.

உதாஹரணம் : – ஒரு குளம்பு உள்ளது பசு என்று சொன்னால் ஒரு பசுவுக்குக்கூட ஒரு குளம்பு இல்லாதபடியால் இது அஸம்பவ தோஷமுள்ளது. ஆகையால் இம்மூன்றும் தோஷமுள்ளதால் பசுவுக்கு லக்ஷணமல்ல. ஸாஸ்னு (திமில்) முதலியவைகளுடன் கூடியது பசு என்று சொன்னால் இதுதான் பசுவிற்கு லக்ஷணமாகும். இது எல்லாப் பசுக்களிலும் இருப்பதாலும் பசுவைத்தவிர வேறு ஒன்றிலும் இல்லாததாலும் மூவித தோஷங்களற்ற அஸாதாரண தர்மமானதாலும் இதுதான் பசுவின் சரியான லக்ஷணமாகும்.

இதுபோல் ஞானேந்திரியங்களுக்கு லக்ஷணம் சொல்ல முடியுமா என்றால் சொல்லலாம். க்ரமமாகச் சொல்கிறோம். ச்ரோத்ரேந்திரியம் என்றால் என்ன ? திக்கு என்ற அதிஷ்டான தேவதையால் ஏவப்பட்டு முறுக்குவடிவமுள்ள காதுடன் சேர்ந்த ஆகாசத்தில் இருந்துகொண்டு 18 பாஷைகள் வேதம் சாஸ்திரம் இவைகளை இது இப்படிப்பட்டது என்று உணரும் இந்திரியம் சுரோத்திரேந்திரியமாகும். இதை பரீக்ஷிப்பது எப்படியெனில் சரீரத்தில் காது என்ற ஓட்டை இருக்கும் இடத்தில் உள்ள ஆகாசமே சப்தத்தை கேட்கிறது என்று சொல்வோமானால் ஸுஷுப்தி, மூர்ச்சையடைந்திருக்கும் நிலை முதலிய சந்தர்ப்பங்களிலும் இந்த காதுடன் சேர்ந்த ஆகாசம் இருப்பதால் அப்பொழுதும் சப்தத்தைக் கேட்கவேணுமே. அப்பொழுது சப்தத்தை அறியமுடிவதில்லையே. ஆதலால் சுரோத்ரேந்திரியமென்பது அந்த ஆகாசத்தைக்காட்டிலும் வேறு என்று தீர்மானிக்கலாம்.

த்வகிந்த்ரியம் என்றால் எது ? வாயு என்னும் அதிஷ்டான தேவதையால் தூண்டப்பட்டு சரீரத்திலுள்ள தோல் முழுவதும் பரவியிருந்துகொண்டு சீதம், உஷ்ணம், மிருது, கடினம், கரடுமுறடு என்ற அநேகவிதமான ஸ்பர்சத்தை அறிகிறது த்வகிந்திரியம் ஸுஷுப்தி முதலிய சமயங்களில் தோல் முன்போலவே இருந்தபோதிலும் ஸ்பர்ச உணர்ச்சி தோன்றுவதில்லை. ஆகையால் தோல்மட்டும் த்வகிந்திரியம் ஆகாது. தோலைக்காட்டிலும் வேறுதான் த்வகிந்திரியம்.

சக்ஷுரிந்திரியம் எது எனில், சூரியரூபமான அதிஷ்டான தேவதையால் ஏவப்பட்டு கண்ணின் கருவிழியில் இருந்துகொண்டு நீலம், சிவப்பு, கருப்பு, வெளுப்பு, மஞ்சள், பெரிது, சிறிது, குட்டை, நீளம என்று சொல்லப்படும் பலவிதமான ரூபங்களை அறிகிறது சக்ஷுரிந்திரியம். கருப்பு விழியே ரூபங்களை அறிகிறது என்று சொல்லமுடியாது. ஏனெனில் தூக்கத்தில் இந்தக்கண் இருந்தும் ரூபம் தெரிவதில்லை. ஆகையால் வெளிக்கண் சக்ஷுரிந்திரியம் ஆகமாட்டாது.

ரஸனேந்திரியம் எது எனில், வருணன் என்ற அதிஷ்டான தேவதையால் தூண்டப்பட்டு நாக்கில் இருந்துகொண்டு, தித்திப்பு, கசப்பு, உப்பு முதலிய ஆறு ரஸங்களை எது உணர்கிறதோ அது ரஸனேந்திரியமே தவிற, வெறும் நாக்கு ரஸனேந்திரியமாகாது. ஏனெனில் ஸுஷுப்தியில் நாக்கு மட்டும் இருந்தும் ரஸ உணர்ச்சி ஏற்படுவதில்லை.

முகரும் இந்திரியம் எது எனில் அசுவினீ தேவதையால் தூண்டப்பட்டு மூக்கின் நுனியில் இருந்துகொண்டு, நல்ல வாசனை, துர்வாஸனை இவைகளை எது அறிகிறதோ அதுதான் க்ராணேந்திரியம் ஸுஷுப்தியில் மூக்கு இருந்தும் வாசனை தெரியாததால் மூக்கு கிராணேந்திரியமாகாது. மூக்கைக் காட்டிலும், வேறானது அது இவ்விதம் ஞானேந்திரியங்களின் லக்ஷணங்கள் கூறப்பட்டன.

இனி கர்மேந்திரியங்களின் லக்ஷணங்களை கவனிப்போம். அக்னி என்னும் அதிஷ்டான தேவதையால் தூண்டப்பட்டு மோவாய்க்கட்டையின் அடி மேல் கீழ் உதடுகள், பல், கழுத்து ஹிருதயம், தொப்பிள் முதலிய சரீரத்தின் அவயவங்களை அடைந்து முன்சொன்ன பலவித சப்தங்களை எது சொல்

கிறதோ அது வாக் இந்திரியம். ஸுஷுப்தியில் இந்த அவயவங்கள் இருந்தபோதிலும் பேசுவதில்லை. ஆகையால் இந்த அவயவங்கள் மட்டும் வாக் இந்திரியமாகாது. இவற்றைக்காட்டிலும் வேறானதுதான் வாகிந்திரியம்.

இந்திர தேவதையால் தூண்டப்பட்டு உள்ளங்கையை ஆசிரயித்து ஆதானம் (எடுப்பது) முதலிய காரியங்களை எது செய்கிறதோ அது, பாணி (கை) இந்திரியம். சாதாரணமான கையாகிய அவயவம் மட்டும் பாணி என்ற இந்திரியமாகாது. ஏனெனில் தூக்கம் முதலிய காலங்களில் இந்தக் கை இருந்தும் எடுப்பது முதலான வேலை செய்வதில்லை.

உபேந்திர தேவதையினால் தூண்டப்பட்டு உள்ளங்காலில் இருந்துகொண்டு நடத்தல் எனும் வேலையை எது செய்கிறதோ அது பாத இந்திரியமாகும். சாதாரணமான கால் என்ற அவயவம் பாத இந்திரியமாகாது. ஏனெனில் தூங்கும் காலத்தில் கால் இருந்தும் நடப்பதில்லை

மிருத்யு தேவதையினால் தூண்டப்பட்டு குதம் என்னும் அவயவத்தை ஆசிரயித்துக்கொண்டு எது சரீரத்தை விட்டு மலத்தை வெளித்தள்ளுகிறதோ அதற்கு பாயு இந்திரியம் எனப்பெயர் கேவலம் குதம் என்னும் அவயவம் பாயு இந்திரியமாகாது. ஏனெனில் ஸுஷுப்தியில் இந்த அவயவம் இருந்தும் அதன் வேலையை அது செய்வதில்லை. ஆகையால் இந்த அவயவத்தைக் காட்டிலும் வேறானது பாயு இந்திரியம்.

பிரஜாபதி என்ற தேவதையினால் தூண்டப்பட்டு யோனி (பிரஜா உத்பத்தி ஸ்தானம்), லிங்கம் (ஆண்குறி) என்ற அவயவங்களை அடைந்து சுக்லம், சோணிதம், மூத்திரம் முதலியவைகளை எது வெளியில் தள்ளுகிறதோ அதற்கு உபஸ்த இந்திரியம் எனப்பெயர். கேவலம் சரீரத்தில் உள்ள அந்த அவயவம் உபஸ்தேந்த்ரியமாகாது. ஏனெனில், ஸுஷுப்தியில் இந்த அவயவம் இருந்தும் அதன் வேலை நடைபெறுவதில்லை.

இனி ஐந்து பிராணன்களின் லக்ஷணங்கள் என்னவென்று கவனிப்போம். விசிஷ்டம் என்று பெயருள்ள அதிஷ்டான தேவதையின் பிரேரணையினால் ஹ்ருதயத்தில் இருந்துகொண்டு வெளிமூச்சு விடுகிறது பிராணவாயு, விசுவசிருஷ்டன் என்ற

தேவதையினால் தூண்டப்பட்டு குதம் (குண்டி) என்ற அவயவத்தில் இருந்துகொண்டு உள்ளே மூச்சை இழுப்பது அபானவாயு எனப்படும். விசுவயோனி என்ற தேவதையால் தூண்டப்பட்டு சரீரத்துக்கு உள்ளும் வெளியும் இருந்துகொண்டு இந்திரியங்களுக்கு பலத்தை எது கொடுக்கின்றதோ அது வியான வாயு என்பது அஜன் என்ற தேவதையின் தூண்டுதலால் கழுத்து பிரதேசததில் இருந்துகொண்டு எது ஸுஷுப்தியில் இந்திரியங்களுக்கு அந்தந்த அவயவங்களில் லயத்தை ஏற்படுத்தியும் விழிப்பு வரும் காலத்தில் வேலை செய்யும்படி அநதந்த அவயவங்களில் அந்தந்த இந்திரியங்களை ஸ்தாபித்தும் மனிதன் இறந்தவுடன் அந்த இந்திரியங்களை எடுத்துக்கொண்டு வேறு லோகங்களுக்கு (ஜீவனுடன்) செல்லுகிறதோ அதற்கு உதானவாயு எனப்பெயர். ஜயன் என்ற தேவதையின் தூண்டுதலால் எது தொப்புள் பிரதேசத்தில் இருந்துகொண்டு நாம் உட்கொள்ளும் பக்ஷ்யம் (கடிக்கப்படுவது) போஜ்யம் (விழுங்கப்படுவது) சோஷ்யம் (உறிஞ்சப்படுவது) லேஹ்யம் (நாக்கால் நக்கப்படுவது) ஆகிய நான்கு வகையான உணவுகளையும் ஜாடராக்னியில் ஜீரணிக்கச் செய்து எது சரீரத்திற்கு புஷ்டியை உண்டுபண்ணுகிறதோ அது ஸமான வாயு எனப்படும. இப்படி பிராணன்கள் ஐந்து வகைப்படும்.

இதுதவிற நாகன், கூர்மன். க்ருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்று ஐந்து வாயுக்கள் சொல்லப்படுகின்றன. அவைகள் முன்சொல்லப்பட்ட ஐந்து பிராணன்களைச் சேர்ந்தவைதான். நாகன் என்பது வாந்தி எடுக்கும்படி செய்கிறது கூர்மன் என்பது கண்களை மூடுவது திறப்பது மேல் கீழ் உதடுகளைச் சேர்ப்பது பிரிப்பது இந்தக் காரியங்களைச் செய்கிறது. க்ருகரன் என்பது தும்மலையும், தேவதத்தன் என்பது கொட்டாவியையும் உண்டுபண்ணுகிறது. தனஞ்ஜயன் என்பது உடலைப் பருக்கும்படி செய்கிறது.

இதன்மேல் அந்தக்கரணத்தின் நான்கு பிரிவுகளான மனம், புத்தி, சித்தம் அஹங்காரம் என்பவைகளை கவனிப்போம். சந்திர தேவதையால் தூண்டப்பட்டு கழுத்தை அடைந்து வஸ்துவை ஆராய்ந்து இப்படியா அப்படியா என்று யோஜிப்பது மனஸ். நான்முக பிரும்மனால் தூண்டப்பட்டு வாயை அடைந்து எது தீர்மானம் செய்கிறதோ அது புத்தி

எனப்படும், அஹங்காரம் என்பது ருத்திரனால் தூண்டப்பட்டு ஹிருதயத்தில் இருந்துகொண்டு பற்றுதலை உண்டுபண்ணுகிறது சித்தம் என்பது க்ஷேத்ரஜ்ஞனை விஷ்ணுவினால் தூண்டப்பட்டு நாபி (தொப்புள்) பிரதேசத்தை அடைந்து நினைவுறுத்துகிறது.

ஒரு சுருதி லிங்க சரீரத்தில் 16 அவயவங்கள்தான் உள என்கிறது. இந்த இடத்தில் அந்தக்கரணத்தை ஒன்றாகக் கணக்கிட்டிருக்கிறது. வேறு ஒரு சுருதி 17 அவயவங்கள் கொண்டது லிங்கசரீரம் என்கிறது இதன்படி மனது புத்தி என்று இரண்டும் கணக்கிடப்படுகிறது மற்றொரு சுருதி லிங்க சரீரம் 19 அவயவங்களுடையதாகச் சொல்லுகிறது. அப்போது மனஸ், புத்தி, சித்தம் அகங்காரம் என்ற அந்தக் கரணத்தின் நான்கு பிரிவுகளையும கணக்கிடவேண்டும்.

இனிக் காரண சரீரம் எது எனப் பார்ப்போம். அஞானம் தான் காரண சரீரம். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் இவ்விரண்டு சரீரங்களுக்கும் இது காரணமாகிறது. அதனால் இப்பெயர் இது ஜீவனும் ஈசுவரனும் முதலில் அடையும் சரீரமானதால் பின்னிட்டு வரும் இரண்டு சரீரங்களுக்கும் காரணமாக ஆகிறது. இதற்கு என்ன பிரமாணமெனில் சுருதி, யுக்தி, அனுபவம் மூன்றும் ப்ரமாணமாகும். அக்ஞானம் காரணம் எனறு சுருதி கூறுகிறது. கார்யத்தைக்கொண்டு காரணத்தை ஊகிககவேண்டும். இது யுக்தி. நான் அறிவில்லாதவன் என்று எல்லோருக்கும் அக்ஞானனுபவம் இருக்கிறது.

ஆத்மா எது என்று முன்பு விசாரித்தபோது ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்களுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லி அந்த மூன்று சரீரங்களின் லக்ஷணங்கள் சொல்லப் பட்டதல்லவா. அதுபோல் ஆத்மாவை லக்ஷணங்களினால் எப்படி அறிவது என்றால், சொல்லுவோம். எல்லா இடத்திலும் பரிபூர்ணமாக இருப்பது பிரம்மம், அதே ப்ரஹ்மம் ப்ரத்யகாத்மஸ்வரூபமாக உளது என்று எல்லா உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன. ஆகையால் ஆத்மா ஸச்சிதானந்த ஸ்வரூபமானது என்று அறியவும். ஸத் என்றால் என்ன? சித் என்றால் என்ன? ஆனந்தம் என்றால் என்ன? மூன்று காலங்களிலும் (சென்ற, நிகழ், வரும்) பாதிக்கப்படாமை ஸத் என்பது. ஸ்வயமே ப்ரகாசமயமானது சித் என்பது,

தன்னுள் ஏற்படும் அனுபவமே ஆனந்தம். இப்படி ஆத்மா ஸச்சிதானந்த ஸ்வரூபமுடையது. ஆத்மா அல்லாதது பொய், ஜடம், துக்கம் இந்த ஸ்வரூபமாக உள்ளது.

ஆத்மா, அனாத்மா என்பவைகளுள் உள்ள வித்தியாஸங்களை எப்படி அறிவது? புருஷனுடைய லக்ஷணம் ஸ்திரீயிடத்தில் இலலை. ஸ்திரீயின் லக்ஷணம் புருஷனிடத்தில் இல்லை. ஆகையால் ஸ்திரீயும் புருஷனும் வெவ்வேறு, அதுபோல் ஸத் (இருப்பது) என்றதின் லக்ஷணம் பொய்யில் (ஒரு ஸமயத்தில் இலலாதது) கிடையாது. பொய்யின் லக்ஷணம் ஸத்தில் இல்லை. எப்படி வெளிச்சத்தின் லக்ஷணம் இருட்டில் இல்லையோ, இருட்டினுடைய லக்ஷணம் வெளிச்சத்தில் இல்லையோ அதுபோல் அறிவின் லக்ஷணம் ஜடத்தில் இல்லை. ஜடத்தின் லக்ஷணம் அறிவில் கிடையாது. எப்படி சந்திரிகையின் லக்ஷணம் வெய்யிலில் இல்லையோ, வெய்யிலின லக்ஷணம் சந்திரிகையில் கிடையாதோ அவ்விதமே ஆனந்தத்தின் லக்ஷணம் துக்கத்தில் இல்லை துக்கத்தின் லக்ஷணம் ஆனந்தத்தில் கிடையாது. ஆகையால் ஸச்சிதானந்தரூபமான ஆத்மாவும் அந்ருத ஜட துக்க ரூபமான அநாத்மாவும் வெவ்வேறுதான்.

இவைகளுள் இருக்கும் வித்தியாஸத்தை இன்னும் விரிவாக அறிவோம். இறந்த காலம், நிகழ்காலம், வருங் காலம் இம்மூன்றிலும் பாதிக்கப்படாமல் ஒரே ரூபமாய் இருப்பது ஸத். முக்காலத்திலும் பொய்யாக இருந்தாலும் மெய்போல் தோன்றி விசாரிக்கப்பட்டபோது பாதிக்கப் படுவது அஸத் எனப்படும். இதற்கு திருஷ்டாந்தம்: கொஞ்சம் இருட்டாக இருக்கும் இடத்தில் உள்ள கயிறு, அதன்மேல் ஏற்படும் தோற்றமாகிய ஸர்ப்பம், மாலை, தடி, நீர்க்கோடு முதலியவைகளால் பாதிக்கப்படாமல் பிராந்தி ஏற்படுவதற்கு முன்னும் பிராந்தி இருக்கும்போதும், பிராந்தி நீங்கிய பின்னும் ஒரே ரூபமாக இருக்கிறது. இந்தக் கயிற்றில் ஆரோபிதமான (தோற்றமான) ஸர்ப்பம் முதலியவைகள் முக்காலத்திலும் இல்லாதவைகளாக பொய்யாக இருந்தும் இருப்பவைபோல தோன்றுகிறது. இதைப்பார்க்கும் மனிதன் உண்மையை விசாரணை செய்தால் அது பாதிக்கப்படுகிறது இப்படிப்பட்ட கயிற்றின் லக்ஷணம் ஸர்ப்பத்தில் இல்லை. ஸர்ப்பத்தின் லக்ஷணம் கயிற்றில் இல்லை. ஆகவே சொல், அர்த்தம்,

லக்ஷணம், தோற்றம், வியவகாரம் என்று ஐந்து வகைகளினாலும் கயிறும் அதில் தோன்றும் பாம்பும் ஒன்றுக்கொன்று விலக்ஷணமானது என்று தெரிகிறது.

அப்படியே ஸத்தின் லக்ஷணம் அஸத்தாகிய தேகம் முதலிய பிரபஞ்சத்தில் கிடையாது. அஸத்தின் லக்ஷணம் ஸத்தான ஆத்மாவில் இல்லை. ஆகையால் இவைகளுக்குள்ளும் மேலே சொன்ன ஐந்து வகைகளால் வைலக்ஷண்யம் இருக்கின்றது. இப்படி விசாரணை செய்து ஸத்துக்கும் அஸத்துக்கும் உள்ள வித்தியாஸத்தை உணரவேண்டும்.

சித் என்பதற்கும் ஜடம் என்பதற்கும் உள்ள பேதத்தைப் பார்ப்போம். ஸூரியன் முதலியவைகளின் ஒளியை எதிர்பாராமல் தன் சொந்த பிரகாசத்தாலேயே பிரகாசித்துக்கொண்டு தன்னிடம் ஆரோபிதமான ஜடவஸ்துவையும் பிரகாசப்படுத்துகிறதாகவும் அதனாலே ஒளியுள்ள ஸூர்யன் முதலியவைகளையும் ஒளியற்றதான மண் கல் முதலிய வஸ்துக்களையும் எது பிரகாசப்படுத்துகிறதோ அதுதான் சித் வஸ்து.

ஜடத்தின் லக்ஷணம் என்னவெனில், தானும் பிரகாசிக்காமல் மற்றதையும் பிரகாசப்படுத்த முடியாத தன்மையையுடையது ஜடம். இரண்டுக்கும் திருஷ்டாந்தம்:—சூரியன் இதர வஸ்துவின் பிரகாசத்தை எதிர்பாராமல் தானே பிரகாசித்துக்கொண்டு தன் ஒளியுடன் சேர்ந்துள்ள குடம், வஸ்திரம் முதலிய பதார்த்தங்களையும் பிரகாசப்படுத்துகிறது. இதுபோல்தான் சித் பிரகாசமும். எப்படி குடம் வஸ்திரம் முதலியவை தான் பிரகாசிக்காமல் மற்றதையும் பிரகாசப்படுத்த சக்தியற்றதாக இருக்கிறதோ அதுபோல்தான் ஜட வஸ்துவும். எப்படி சூரியனுக்கும் குடம் முதலியவைகளுக்கும் சப்தம் முதலிய மேலேசொன்ன ஐந்து வகையிலும் பேதம் உண்டோ அப்படியே "சித்"துக்கும் ஜடத்துக்கும் பேதம் உண்டு.

இப்படி அறிவதனால் என்ன பிரயோஜனம் எனில் உலகில் எந்த வஸ்து பிரகாசப்படுத்தப்படுகிறதோ அதில் உள்ள மாறுதல்கள் பிரகாசிக்கும் பதார்த்தத்தை முக்காலங்களிலும் பாதிப்பதில்லை என்று உணர்கிறோம். அது எப்படியெனில், சூரியனால் பிரகாசப்படுத்தப்பட்ட குடத்தில் ஓட்டை ஏற்பட்டால் நஷ்டமோ, ஓட்டையில்லாமலிருந்தால் லாபமோ

ஸ்பர்சத்தால் விலக்கப்படும் தன்மையோ, ஸ்பர்சம் இல்லாததால் ஸ்வீகரிக்கும் தன்மையோ நல்ல லக்ஷணத்தால் சந்தோஷமோ, அவலக்ஷணத்தால் துக்கமோ நன்றாக இருத்தலால் சிறப்போ, நன்றாக இல்லாமையால் சிறப்பின்மையோ இது முதலான மாறுதலான குணங்கள் பிரகாசத்தைக் கொடுக்கும் சூரியனை அடைவதில்லை. இதுபோல் ஆத்மாவினால் பிரகாசத்தை அடையும் தேகம், இந்திரியம் முதலியவைகளிலுள்ள பெயர், ரூபம், ஜாதி, வருணம், ஆசிரமம், ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி, கட்டளை, தடை [1] ஆறுவித மாறுதல், [2] ஆறுவித அலைகள். ஆறுகோசங்கள் குருட்டுத்தன்மை, மந்தத்தன்மை, சாமர்த்தியம் முதலிய எல்லா குணபேதங்களும் பிரகாசப்படுத்தும் ஆத்மாவை முக்காலத்திலும் கொஞ்சமேனும் பாதிக்காது என்ற ஞானம் ஸுலபமாக ஏற்படும்.

இனி ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் உள்ள பேதம் சொல்லப்படும் ஆனந்தத்தின் லக்ஷணம் என்ன? வேறு ஒன்றினால் ஏற்படாததும், மிக மிகச்சிறந்ததும் (இதைவிட மேலானது இல்லாததும்) சாசுவதமுமான சுகம் எதுவோ அதுவே ஆனந்தம் துக்கம் என்பது என்னவெனில் ப்ரதிகூலமாக அறியத்தக்கது துக்கம். மற்றொன்றில் விருப்பம் ஏற்படுவதன் மூலமாக இல்லாமல் தானாகவே விருப்பம் ஏற்படும் பொருளைக்காட்டிலும் வேறானது எதுவோ, எதில் வெறுப்பு ஏற்படுகிறதோ அது துக்கம் என்றும் சொல்லலாம்.

இது மூவகைப்படும்:— ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் இந்திரியங்களினால் தேகத்தில் வாதம், பித்தம், சிலேஷ்மம் இவற்றின் விபரீதத்தினால் உண்டாகும் வியாதி முதலிய துக்கம் ஆத்யாத்மிகம். பிருதிவி முதலான பூதங்களாலும் ஸர்ப்பம், முதலிய பிராணிகளினாலும் ஏற்படுவது ஆதிபௌதிகம். தேவதைகளால் ஏற்படும் மழைஇன்மை, அதிகமழை, இடி முதலியவற்றால் ஏற்படும் துக்கம் ஆதிதைவிகம் எனப்படும்.

ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் என்ன திருஷ்டாந்தம்? அம்ருதம் தான் ஸ்வயமாக ஸுக ரூபமானது. அதை

1. உண்டாவது, இருப்பது, வளர்ச்சி, மாறுதல், குறைவு, அழிவு இவை 6 பாவ விகாரங்கள்.

2. ஷடூர்மிகள்—சோகம், மோஹம், பசி, தாகம், கிழத்தனம், சாவு

சாப்பிடுபவர்களுக்கும் ஸுகத்தைக் கொடுக்கிறது. காலகூட விஷம் தான் கொடியது. அதை சாப்பிடுபவர்களையும் தபிக்கச் செய்கிறது. இப்படிப்பட்ட அமிருதத்துக்கும் விஷத்துக்கும் மேலே சொன்ன சப்தம் முதலிய ஐந்து காரணங்களால் எப்படி பேதமுள்ளதோ அப்படியே ஆனந்தத்தின் லக்ஷணம் தாபத்ரயங்களை உண்டுபண்ணும் துக்கத்தில் இல்லை துக்கத்தின் லக்ஷணமும் ஆத்மஸ்வருபமான ஆனந்தத்தில் இல்லை. ஆகையால் ஐந்து வகையிலும் ஆனந்தத்திற்கும் துக்கத்திற்கும் பேதம் உண்டு என்று அறியவேணும் இதனால் முடிவானது என்னவெனில், "நான்" என்பதில் உள்ள ஆத்மா என்பது கயிறைப்போல் "ஸத்" ரூபமானதும் சூரியனைப்போல் "சித்" ரூபமானதும், அம்ருதம்போல் "ஆனந்த" ரூபமுமானது இது பாம்பைப் போல் பொய்யானதும், குடத்தைப்போல் ஜடமானதும், விஷத்தைப்போல் துக்கத்தை உடையதுமான தேகம் இந்திரியம் முதலான பிரபஞ்சத்திலிருந்து வேறுபட்டது என்று எவன் குருமுகமாக ஆத்மாவை அறிந்து கொள்கிருனே அவன் பற்றற்றவன், அவனே செய்ய வேண்டியதை செய்தவன் அவனே முக்தன் என்பது வேதாந்த சாஸ்திரத்தின் முடிவு என்பதை அறியவும்.

எட்டாவது வர்ணகம் முற்றும்.

॥ नवमवर्णकम् ॥

आत्मा शरीरत्रयविलक्षणः, अवस्थात्रयसाक्षी, पञ्चकोशव्यतिरिक्तः, सच्चिदानन्दलक्षण इत्यात्मन उक्तेषु चतुर्विधलक्षणेषु शरीरत्रयविलक्षणत्वमेवमष्टमवर्णके उक्तम्। इतः परमवस्थात्रयसाक्षित्वमस्मिन्नवमे वर्णके उच्यते। मनः सत्वरजस्तमोगुणात्मकम्। तथापि सत्त्वगुणप्रधानमेव मनः। सात्त्विकेनैव मनसा आत्मा ज्ञातव्यः, न च राजसेन, नापि तामसेन। तत्र सत्वगुणः सूक्ष्मः। रजोगुणश्चञ्चलः। तमोगुणः स्थूलः। तस्माद्धूमप्रवेशायोग्ये रन्ध्र

दुक्तानां चतुर्णां पूर्वोक्तेषु चतुर्ष्वेवान्तर्भाव इति सिद्धान्तः। वेदान्तिनश्च केचित्षट्प्रमाणान्युदाहरन्ति। एतेषां लक्षणादिकमतिविस्तृतम्। अस्माकं यावदावश्यकं तावन्मात्रमुच्यते। अक्षमिन्द्रियम्। इन्द्रियेण जन्यं प्रमाणं प्रत्यक्षप्रमाणम्। धूमादिलिङ्गेन जायमानमनुमानम्। सादृश्येन जायमानमुपमानम्। आप्तवाक्यं शब्दः। आत्मन इन्द्रियागोचरत्वात्तत्र न प्रत्यक्षं प्रमाणं प्रवर्तते। निरंशत्वात्तत्रात्मनि नानुमानं प्रवर्तते। अद्वितीयत्वान्नोपमानम्। तस्मादात्मनि शब्द एव प्रमाणम्। आप्तवाक्यं शब्दः। आप्तश्च यथार्थवक्ता। अत ईश्वरवाक्यं श्रुतिरेव शब्दः। तस्माच्छ्रुतिरेवात्मनि प्रमाणम् ॥

पूर्वोक्तसाक्षिरूपं संन्यासिनं तेन दृष्टाः पुरुषतदवस्थातद्व्यापारगुणदोषा यथा न स्पृशन्ति, एवमात्मानं दृश्यमाना अहंकारतदवस्थातद्व्यापारगुणदोषा न स्पृशन्ति। एवं यो भाग्यशाली पुरुषः साक्षिमात्रमात्मानमहंकारादिभिरस्पृष्टं चैतन्यमात्रं श्रुतिभिर्जानाति स एव जीवन्मुक्तः। तथैव श्रुतिरपि वदति। हे पुत्र, त्वमपि वेदान्तशास्त्रमात्मनि प्रमाणमिति विश्वस्य तदुक्तप्रकारेणावस्थात्रयसाक्षिणमात्मानं जानीहि ॥

इति नवमवर्णकम् ॥

ஒன்பதாவது வர்ணகம்

மூன்று (ஸ்தூல ஸூக்ஷ்ம காரண) சரீரங்களைக் காட்டிலும் வேறுபட்டது மூன்று அவஸ்தைகளுக்கும் (விழிப்பு, ஸ்வப்னம், ஸுஷுப்தி) ஸாக்ஷி ஐந்து கோசங்களுக்கு (அன்ன மயம், பிராண மயம், மனோ மயம், விஞ்ஞான மயம், ஆனந்தமயம்) வேறுபட்டது ஸச்சிதானந்த ஸ்வரூபம் என்ற ஆத்மாவின் நான்கு லக்ஷணங்களில் 8வது வர்ணகத்தில் மூன்று

சரீரங்களைக் காட்டிலும் வேறானது என்ற முதல் லக்ஷணம் விளக்கப்பட்டது.

இந்த 9 வது வர்ணகத்தில் மூன்று அவஸ்தைகளிலும் ஸம்பந்தப்படாமல் சாக்ஷியாக இருந்துகொண்டு அவைகளை ஆத்மா பார்த்துக்கொண்டிருக்கிறது என்ற 2வதுலக்ஷணத்தை விளக்குவோம்.

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்றும் மனதின் குணங்கள் ஆயினும் மனது என்பது முக்கியமாக ஸத்துவ குணத்தையே உடையது ஸாத்விகமான மனதால்தான் ஆத்மா அறிய முடியுமே தவிர ராஜஸ மனத்தாலும் தாமஸ மனத்தாலும் அறியமுடியாது. ஸத்வ குணம் சூக்ஷ்மமானது, ரஜோகுணம் சஞ்சலமானது, தமோகுணம் ஸ்தூலமானது. புகைமட்டும் நுழையக்கூடிய ஒரு துவாரத்தில் எப்படி பெரிய தூண் நுழையாதோ, காற்றினால் தீபம் அசைந்துகொண்டிருக்கும் பொழுது எப்படி சூக்ஷ்மமான வர்ணத்தை தீர்மானிக்க முடியாதோ, அதேபோல் ஆத்மாவை அறியவேண்டுமாயின் சூக்ஷ்மமான ஸாத்விக மனத்தினால்தான் அறியமுடியும். அதல்லாமல் ஸ்தூல மனதாலும் சஞ்சல மனதாலும் ஸூக்ஷ்மமான ஆத்மஸ்வரூபத்தை அறியமுடியாது.

மூவகை அவஸ்தை என்பது என்ன ? விழிப்பு, ஸ்வப்னம் ஸுஷுப்தி, என்பவை. எல்லா இந்திரியங்களாலும வெளி விஷயங்களை அறிவது விழிப்பு. விழிப்பில் ஏற்பட்ட அறிவின் ஸம்ஸ்காரத்தால அந்தக்கரணமே அனுபவிப்பவனாகவும், அனுபவிக்கப்படும் பொருள்களாகவும் மாறுதல் அடைவது ஸ்வப்னம். ஸ்தூலம், ஸூக்ஷ்மம் ஆகிய ஜகத் எல்லாம் அவைகளுக்குக் காரணமான அஞ்ஞானத்தில் லயமான பின்பு ஸாக்ஷியால் மட்டுமே அறியத்தக்க அஞ்ஞானம் மட்டும் மீதம் இருப்பது ஸுஷுப்தி.

இம்மூன்று அவஸ்தையிலும் சாக்ஷியாக ஆத்மா இருக்கிறது என்று சொல்லப்பட்டதே அது எப்படியெனில், ஆத்மாவிடத்தில் சாக்ஷியின் லக்ஷணங்கள் இருப்பதால்தான். சாக்ஷியின் லக்ஷணம் எது ? ஒரு மனிதன் வேறு மனிதனுடைய அவஸ்தைகள் அவற்றின் கார்யங்கள், இந்த அவஸ்தைகளுடன் கூடிய அந்த வேறு மனிதன் இவற்றையெல்லாம்

தன்னிடம் ஒருவித மாறுபாடுமில்லாமல் நேரில் பார்ப்பதுதான் ஸாக்ஷித்தன்மை என்பது. உதாரணம் : ஒன்றிலும் பற்றுதல் இல்லாமல் சும்மாவிருக்கும் ஒரு ஸந்நியாசிக்கு அங்கு வந்து போகும் மனிதர்களிடமாவது அவர்களின் காரியங்களிலாவது கொஞ்சமும் சம்பந்தமில்லை ஆனாலும் தன் மனதில் கொஞ்சமும் மாறுதல் இல்லாமலே அந்த மனிதர்களையும் அவர்களின் அவஸ்தைகளையும் அதன் காரியங்களையும் அந்த ஸந்நியாஸி நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் அந்த ஸந்யாஸியை ஸாக்ஷி என்று கூறலாம். இதுபோல் ஆத்மாவும் ஜீவர்களின் மூன்று அவஸ்தைகளையும், மூன்று அவஸ்தைகளின் வியாபாரங்களையும் அவஸ்தைகளுடன் கூடிய ஜீவர்களையும் நேரில் பார்த்துக்கொண்டிருந்த போதிலும் எவ்வித மாறுதலுமில்லாமல் இருக்கிறது.

இதை திருஷ்டாந்தத்துடன் நன்கு விளக்கிக்கூறுகிறோம். விழிப்புநிலை என்பது ஒரு பெரிய பட்டணம் போலுள்ளது அதன் பிராகாரங்கள் (கோட்டைகள்) போன்றது ஸ்வப்னாவஸ்தை. அதனுள் இருக்கும் ஒரு மாளிகைபோல் உள்ளது சுஷுப்திநிலை. அந்த மூன்றிற்கும் யஜமானனான பிரபுவைப் போல் இருப்பது அந்த மூன்று அவஸ்தைகளிலும் பற்றுதல் உள்ள ஜீவன் அந்த பிரபு கோட்டைக்கு வெளியில் இருந்து கொண்டு சுகம் துக்கம் ஆகியவைகளை அனுபவித்து அதனால் சந்தோஷத்தையும் வருத்தத்தையும், அடைந்து பிறகு அந்த கோட்டைக்கு உள்ளேயும், சுகம் துக்கம் இரண்டையும் அனுபவித்து சந்தோஷத்தையும் துன்பத்தையும் அடைந்து பிறகு மாளிகைக்கு வந்து எல்லா வியவகாரங்களையும் விட்டு விட்டு சும்மா இருந்துகொண்டு தன் பத்தினியுடன் எவ்விதம் சுகத்தை அனுபவித்துக்கொண்டிருப்பானோ அதுபோலவே ஜீவாத்மாவும் விழிப்பில் ஸ்தூல சரீரத்தில் அபிமானம் கொண்டு மனது, வாக்கு, சரீரம் என்னும் மூன்று கரணங்களாலும் காரியங்களைச்செய்துகொண்டு விசுவன் என்ற பெயருடன் இருந்துவிட்டு பிறகு ஸ்வப்னநிலையில் ஸூக்ஷ்ம சரீரத்தில் அபிமானம் கொண்டு மனோமயமான முக்கரணங்களால் குணமாயும் தோஷமாயும் உள்ள காரியங்களைச் செய்துகொண்டு தைஜஸன் என்ற பெயருடன் இருந்துவிட்டு, பின்னால் காரணசரீரத்தில் அபிமானம்கொண்டு ஸுஷுப்தி அவஸ்தையில் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்

களையும் அடங்கும்படி செய்து பிராஜ்ஞன் என்ற பெயருடன் நித்தியானந்த சுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறான்.

இப்படி ஆத்மா, மாறுபாடு இல்லாமல் ஒரே நிலையில் இருப்பவனாகவும் ஆகாசம்போல் எதிலும் பற்று இல்லாதவனாகவும் இருந்துகொண்டே ஜாக்ரத் ஸ்வப்னம் ஸுஷுப்தி என்ற மூன்று நிலைகளிலும் சைதன்யரூபமாக சாக்ஷியாக இருக்கிறான். என்று சுருதி (வேதம்) யுக்தி, அனுபவங்களால் அறிய வேண்டும். ‘ஆத்மா ஸாக்ஷியாகவும் அறிபவனாவும் தனிப்பட்டவனாகவும் குணமற்றவனாகவும் இருக்கிறான்’ என்று சுருதி கூறுகிறது முன் சொன்ன பட்டண திருஷ்டாந்தம் யுக்தி. அனுபவத்தைக்கூறுகிறோம்.

முன் தினத்தில் கண்ட அவஸ்த்தாத்ரயங்களை இன்று நினைவுபடுத்திக் கொள்கிறோம். முன் அனுபவித்தது தான் பின்னால் நினைவுக்கு வரும் இப்பொழுது நினைவுக்கு வருவதால் முன் தினம் அவஸ்தாத்ரயங்களுடன் ஸம்பந்தப்படாமல் அவற்றை நேரில் கண்டிருக்கிறோமென்று தெரிகிறது. இதனால் ஆத்மா அவஸ்தாத்ரய ஸாக்ஷி என்று கிடைக்கிறது. இதனால் தான் ஒவ்வொருநாளும் அவஸ்தாத்ரயங்களை நாம் அனுபவிக்கிறோம். மேலும் முன்காலத்தில் இருந்த அவஸ்தாத்ரயங்களையும் எதிர்காலத்தில் வரப்போகும் அவஸ்தாத்ரயங்களையும் வரிசையாக ஆத்மா அனுபவிக்கிறபடியால் மாறி மாறி வரும் அவஸ்தாத்ரயங்கள் நீங்கியபோதிலும் அதைப்பார்க்கும் ஒரே ஆத்மா நித்யமாக மாறாமல் இருக்கிறான் என்பதும் தெரிய வருகிறது.

கேள்வி :—உலகில் எவனுக்கு அவஸ்தைகள் உள்ளனவோ அவனேதான் சாக்ஷியாக- அவஸ்தைகளைப் பார்க்கிறவனாகக் காணப்படுகிறான். நீங்களோ வேறொருவனை - அவஸ்தைகள் அற்றவனை ஸாக்ஷியாகக் கூறுகிறீர்களே. இது சரியா ?

பதில் :— அந்தக்கரணத்தில் தோன்றும் சைதன்ய ப்ரதி பிம்பம்தான் ஜீவன் எனப்படுகிறது. இவனுக்கு சிதாபாஸன் என்று பெயர். இவன் ஸ்வரூபம் பொய்யானது கல்பிதம் இவனுக்குத்தான் அவஸ்தைகள் எல்லாம்.

ஸுஷுப்தியில் அந்தக்கரணம் லயமாகி இல்லாமல் போனபோது அந்தக்கரண பிரதிபிம்பமான ஜீவனும் மறைந்து

விடுகிறது. அப்பொழுது ஜீவன் இல்லை ஆகவே அவன் எப்படி ஸுஷுப்தி அவஸ்தா சாக்ஷியாக இருக்கமுடியும் ? ஆகவே பிம்பபூதமான ஆத்மாதான் ஸுஷுப்தி சாக்ஷியாக இருக்கிறான் என்று கட்டாயம் ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படியானால் அந்த ஆத்மாவே விழிப்பு, ஸ்வப்னம் முதலிய நிலைகளிலும் சாக்ஷியாக இருக்கிறான் என்றால் சுலபமாகி விடுமே ? மேலும் மூன்று நிலைகளிலும் ஒரே சாக்ஷி இருப்பது தான் உசிதம்.

மேலும் ஜீவனுக்கு மாறுதல் ஏற்படுவதால் சாக்ஷியாக இருக்கும் நிலைமை அவனுக்குக் கிடையாது ஆத்மாவோ மாறுதல் அடையாததால் சாக்ஷியாக இருக்கும் நிலைமை அதற்குப் பொருந்தும். ஜீவன் எப்படி மாறுதல் உடையவன் எனில், அவன் “நான் சுகி” “நான் துக்கப்படுபவன்” என்று அந்தக்கரண விருத்திகளோடு சேர்ந்துகொண்டு விடுவதால் இவனிடம் மாறுதல்கள் ஏற்பட்டுவிடுகின்றன. ஆகவே ஜீவன் சாக்ஷியாக இருக்கமுடியாது.

அப்படியானால் ஜீவனைத்தவிர வேறான சாக்ஷியாக இருக்கும் ஆத்மா யார் ? அவன் லக்ஷணம் என்ன ? அவன் இருக்கிறான் என்பதற்கு என்ன பிரமாணம் ? அதை அறிவதற்கு என்ன உபாயம் ?

மாறுதல் இல்லாமல் எப்போதும் ஒரேமாதிரியாக உள்ளவனே சாக்ஷி அதுதான் ஆத்மா அவன் ஆகாசம்போல் எங்கும் நிறைந்தவன். சச்சிதானந்தரூபன் அவனே அந்தக்கரணத்தில் பிரவேசித்து ஜீவ ரூபத்தையடைந்து பிரபஞ்ச காரியங்களை நடத்துகிறான். இப்படிப்பட்ட பாரமார்த்திகமான ஆத்மா உண்டு என்பதற்கு வேதம்தான் பிரமாணம்.

அந்தக்கரணத்தில் பிரவேசித்த சிதாபாஸன் (சேதனன் போல் தோன்றுகிறவன்) என்ற ஜீவன் அவஸ்தைகளோடு கூடியவன் அவன் இப்பொழுது விழித்துக்கொண்டிருக்கிறான், இப்போது ஸ்வப்னம் காண்கிறான். இப்போது சுஷுப்தியில் அஞ்ஞானத்தினால் மயங்கி இருக்கிறான். இப்போது சுகப்படுகிறான். இப்போது துக்கப்படுகிறான், இப்போது உதாசீனனாக இருக்கிறான் என்றெல்லாம் இந்த ஜீவனின் பலவித அவஸ்தைகள் எல்லாவற்றையும் தான் சித்ரூபியாக (ஞான ரூபி) இருந்துகொண்டு எவன் அறிகிறானோ அவனே ஆத்மா.

அவன்தான் மூன்று அவஸ்தைகளையும் நேரில் பார்க்கிறவன் சாக்ஷி என்று தெரிந்துகொள்ளவேணும்.

அந்த ஆத்மாவுக்கு தன்னுடைய மாறுதலற்ற தன்மை எப்படித் தெரிகிறது எனில், தன் முகத்தின் அழகைத் தான் நேரில் பார்க்க முடியாவிட்டாலும், கண்ணாடியில் விழும் தன் பிரதிபிம்பம் மூலம் அதை எப்படி அறியமுடிகிறதோ அப்படியே ஆத்மாவும் தன் மாறுதலற்ற தன்மையை அந்தக் கரணத்தில் விழும் தன் பிரதிபிம்பம் மூலம் அறியமுடியும்.

கண்ணாடியும் அதனுள் காணப்படும் முகத்தின் பிரதிபிம்பமும், பிம்பமான முகத்தை எப்படி அறிவதில்லையோ அப்படியே அந்தக்கரணமும் அதில் தோன்றும் பிரதிபிம்பமான ஜீவனும் பிம்பரூபமான ஆத்மாவை அறியமுடியாது.

அப்படியானால் இந்த ஆத்மா எதனால் அறியப்படுகிறது எனில் எதனாலும் அறியப்படவில்லை அறியப்படும் வஸ்துக்கள் எல்லாம் த்ருச்யம்—ஞேயம்—ஞானத்திற்கு விஷயமானது ஆத்மா அறிவு ரூபமானது ஸ்வயம் பிரகாசமான ஆத்மா வேறு வஸ்துவினால் அறியப்படுவதில்லை. இது எப்படி எனில் பார்க்கப்படும் குடம் அதைப் பார்ப்பவனை அறிவதில்லை. அதைப் பார்ப்பவன் தானே அறிவுள்ளவனானதால் தன்னைத்தானே தான் அறிந்து கொள்கிறான். ஒரு உதாஹரணம் பத்து மனிதர்கள் சேர்ந்து பிரவாகமுள்ள ஆற்றை நடந்து தாண்டினார்கள். அக்கரைக்கு வந்தபின் எல்லோரும் வந்துவிட்டார்களா என்று சோதிக்க ஒவ்வொருவனும் மற்றவர்களை எண்ணிவிட்டு (தன்னை விட்டு விட்டு) ஒருவன் 10வது நபர் காணவில்லையே அவன் பிரவாஹத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டு இறந்துவிட்டான் என்று தீர்மானித்து வருந்திக்கொண்டிருக்கையில் அங்கு ஒரு வழிப்போக்கன் வந்து 'ஏன் அழுகிறீர்கள்' என்று கேட்க, " நாங்கள் 10 பேர்கள் வந்தோம் இப்பொழுது 10வது பேர்வழி காணவில்லை " என்றார்கள். வழிப்போக்கன் இவர்கள் 10 பேரை நிற்கவைத்து ஒவ்வொருவராக எண்ணிக் காட்டி கடைசியில் " 10வது பேர்வழி நீயேதான் " என்றான். எல்லோரும் ஆனந்தம் அடைந்தனர். இந்த உதாரணத்தில் இறந்துபோய்விட்டான் என்று நம்பின 10வது பேர்வழி

பின்னிட்டு தன்னைத் தானேதான் அறிந்து கொள்கிறான். தன்னைக்காட்டிலும் வேறான 9 பேர்களில் ஒருவராலும் அறியப்படுவதில்லை. அதேபோல் ஆத்மா தானே அனுபவ ஸ்வரூபனானதால் மற்றதால் அறியப்படுவதில்லை என்று உணரவும்.

இதற்கு பிரமாணம் என்ன ? பிரமாணங்கள் 4 வகைப்படும். (1) பிரத்யக்ஷம் (2) அனுமானம் (3) உபமானம் (4) சப்தம் என்பவை. இவை தவிர மேலும் நான்கும் உண்டு (1) அர்த்தாபக்தி (2) ஸம்பவம் (3) ஐதிஹ்யம் (4) அனுபலப்தி எனப்படும். பின் சொல்லப்பட்ட நான்கும் முன் சொல்லப்பட்ட நான்கிலேயே அடங்கியுள்ளது என்று தீர்மானம். வேதாந்திகளில் சிலர் பிரமாணங்கள் ஆறு என்பார்கள். இவற்றின் லக்ஷணம் முதலியவைகளை இங்கு கூற ஆரம்பித்தால் ரொம்பவும் விரிவாகிவிடும். ஆகையால் நமக்குத் தேவையானதை மட்டும் கூறுவோம். அக்ஷம் என்றால் இந்திரியம் இந்திரியத்தால் உண்டாகும் பிரமாணம் பிரத்யக்ஷ பிரமாணம் புகை முதலிய அடையாளங்களினால் ஏற்படுவது அனுமானம். ஸாத்ருச்யத்தினால் ஏற்படுவது உபமானம். நண்பனின் வாக்யம் சப்தம் என்பது

ஆத்மா இந்திரியங்களால் அறியப்பட முடியாது. அதனால் பிரத்யக்ஷ பிரமாணம் இங்கு உபயோகமாகாது. ஆத்மாவில் பாகம் இல்லாததால் அனுமானமும் இங்கு வராது. ஆத்மா ஒன்றானதால் உபமானமும் இதற்கு சொல்லமுடியாது. ஆகவே ஆத்மா உண்டு என்பதற்கு சப்தம்தான் பிரமாணம். நண்பனின் வாக்யம்தான் சப்த ப்ரமாணமென்பது. உண்மையை சொல்பவன் தான் நண்பன். ஆகையால் உண்மையைச் சொல்லும் முக்ய நண்பரான ஈசுவரனுடைய வாக்யமான வேதம்தான் சப்தப்ரமாணமாகும் ஆகையால் ஆத்மா உண்டு என்பதற்கு சுருதி (வேதம்) தான் பிரமாணமாகும்.

முன்பு சொன்ன உதாஹரணத்தில் பார்த்துக்கொண்டிருக்கும் ஸந்நியாசியை அவரால் பார்க்கப்படும் மனிதர்கள் அவர்களுடைய நிலைகள், அதன் காரியங்கள், குண தோஷங்கள் இவை எல்லாம் பாதிக்கிறதில்லை அப்படியே ஆத்மாவை அவரால் பார்க்கப்படும் அகங்காரம், அதன்

நிலை. அதன் காரியங்கள், குண தோஷங்கள் இவை பாதிப்ப தில்லை. இப்படி எந்த பாக்யசாலி வேதங்கள் மூலம் சாக்ஷி ரூபியாயும் அகங்காரம் முதலியவைகளால் பாதிக்கப் படாதவனாயும் சைதன்ய ஸ்வரூபியாயும் உள்ள ஆத்மாவை அறிகிறானோ அவனே ஜீவன் முக்தன் என்று வேதம் சொல்லு கிறது. இதைத்தான் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும்.

ஒன்பதாவது வர்ணகம் முற்றும்.

॥ दशमवर्णकम् ॥

इदानीं दशमवर्णके आत्मनः पञ्चकोशव्यतिरिक्तत्वमुच्यते । अन्नमयप्राणमयमनोमयविज्ञानमयानन्दमयाः पञ्च कोशाः । अन्नविकारशुक्रशोणितजन्यं षड्भावविकारसहितमन्नेनैव वर्धमानमिदं स्थूलशरीरमेवान्नमयकोशः । कर्मेन्द्रियैः सह प्राणः प्राणमयकोशः । ज्ञानेन्द्रियैः सह मनो मनोमयकोशः । तैरेव सह बुद्धिर्विज्ञानमयकोशः । प्रियमोदप्रमोदवृत्तिभिः सहाज्ञानमानन्दमयकोशः । इष्टवस्तुसंदर्शनसंतोषः प्रियम् । तल्लाभसंतोषो मोदः । तदनुभवसंतोषः प्रमोदः । एवं पञ्च कोशाः । यथा खड्गं तत्कोशः, शिवलिङ्गं संपुटः, आम्रफलं त्वक्, पुरुषं कञ्चुकः, इत्येतान्येते यथा आच्छादयन्ति, एवं पञ्च कोशा अप्यात्मानमाच्छादयन्ति । अतः कोशा इति संज्ञा । ननु खड्गादीनां तत्कोशादीनां च सत्ता भिन्ना । पञ्चकोशानामात्मभिन्नसत्ताकत्वाभावात्कोशादिभ्यो वैषम्यात् कथमात्माच्छादकत्वमिति चेत्, उच्यते । आदित्यकिरणपरिणामविशेषत्वान्मेघस्य आदित्यसत्तैव सत्ता, तथापि स मेघ आदित्यं यथा आच्छादयति; अग्निमुपजीव्य वर्तमानस्य धूमस्याप्यग्नेः सत्तैव सत्ता, तथापि स धूमो यथा अग्निमाच्छादयति; एवमात्मसत्तया सत्तावन्तोऽपि कोशा आत्मानमाच्छादयन्ति ॥

பத்தாவது வர்ணகம்

இந்த 10வது வர்ணகத்தில் ஆத்மா பஞ்சகோசங்களுக்கு அப்பால்பட்டவன் என்பது விளக்கப்படும். அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஜ்ஞானமயம், ஆனந்தமயம் என்று ஐந்து கோசங்கள் உள. அன்னத்தின் மாறுதல்களான சுக்லம், சோணிதம் இவைகள் மூலம் உண்டானதும் ஆறுவித மாறுபாடுகளை உடையதும் அன்னத்தினால் வளர்வதுமான இந்த ஸ்தூல சரீரம் அன்னமயகோசம் எனப்படும். கர்மேந்திரியங்கள் ஐந்தும் (வாக்கு, கை, கால், பாயு, உபஸ்தம்) பிராணன் ஐந்தும் சேர்ந்து பிராணமயகோசம், ஞானேந்திரியங்கள் ஐந்தும் (காது, தோல், கண், நாக்கு, மூக்கு) மனமும் சேர்ந்தது மனோமய கோசம் மேற்படி 5 ஞானேந்திரியங்களும். புத்தியும் சேர்ந்தது விஜ்ஞானமய கோசம். ஆனந்தமயகோசம் என்பது பிரியம், மோதம், பிரமோதம் என்ற விருத்திகளும் அஜ்ஞானமும் சேர்ந்தது. தான் விரும்பிய வஸ்துவைப் பார்ப்பதினால் ஏற்படும் சந்தோஷம் பிரியம் எனப்படும். அந்த வஸ்துவை அடைவ தால் ஏற்படும் சந்தோஷம் மோதமாகும். அதையே தான் அனுபவிப்பதால் ஏற்படும் சந்தோஷம் ப்ரமோதம்.

மேலே ஐந்து கோசங்கள் சொல்லப்பட்டன. வாளுக்கு உறை போலும், சிவலிங்கத்துக்கு சம்புடம் போலும், மாம்பழத்துக்கு தோல் போலவும், மனிதனுக்கு சட்டை போலவும் (எப்படி இவை மூடிக்கொண்டிருக்கின்றனவோ அப்படி) ஐந்து கோசங்கள் ஆத்மாவை மூடிக்கொண்டிருக் கின்றன. அதனால் கோசம் எனப்பெயர்.

கேள்வி:— வாளும் உறையும் தனித்தனியாக இருப்பதைக் காண்கிறோம் பஞ்சகோசங்களோ ஆத்மாவை விட்டுதனியாக ஒரு இடத்திலும் இருக்கவில்லை ஆத்மாவின் இருப்பைத்தவிர பஞ்சகோசங்களுக்குத் தனியாக இருப்பே இல்லை. இரண்டு பொருள்கள் தனித்தனியாக இருந்தால்தான் ஒன்று மற்றொன்றை மறைப்பதாகக்கூறமுடியும். ஆகவே பஞ்ச கோசங்கள் ஆத்மாவை மறைப்பதாக எப்படிக்கூறமுடியும்?

பதில்:— ஸூரியனுடைய கிரணங்கள்தான் மேகமாக ஆகின்றன. ஸூரியன் இல்லாவிட்டால் மேகம் இல்லை,

ஆகையால் ஸூர்யன் மேகம் இரண்டின் இருப்பும் ஒன்றுதான் ஆனாலும் மேகம் ஸூரியனை மறைக்கிறது. அக்னியிலிருந்தே புகை உண்டாகிறது இரண்டினுடைய இருப்பும் ஒன்றே. இருந்தாலும் புகை அக்னியை மறைக்கிறதல்லவா இதுபோல் ஆத்மாவின் இருத்தலால் தனக்கு இருத்தலை உடைய கோசங்கள் ஆத்மாவை மறைக்கமுடியும்.

இனி ஆத்மா பஞ்சகோசங்களைக்காட்டிலும் வேறு பட்டவன் என்பதை கவனிப்போம். வாளை உறையில் போட்டிருக்கும்போது இரண்டு என்று சொல்லாமல் அதை வாள் என்று ஒன்றாகவே சொல்லுகிறோம் ஆனாலும் கத்தி உறையைக்காட்டிலும் வேறுதான் அதே போல் பஞ்ச கோசங்களை ஆத்மாவுடன் சேர்த்தே நாம் சொன்ன போதிலும் அவை வெவ்வேறானவைதான்.

கேள்வி:— ஆத்மாவையும் கோசங்களையும் ஒன்றாகவே வியவஹாரம் செய்வதால் அவற்றுக்கு ஒன்றுக்கொன்று சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லவேணும் ஆகவே ஆத்மாவுக்கு எதனுடனும் சம்பந்தமில்லை அது மாசற்றது, என்றெல்லாம் சொல்வது எப்படிப்பொருந்தும்?

பதில்:—தர்க்க சாஸ்திரத்தில் சம்பந்தம் என்பது இரு வகைப்படும் (1) ஸமவாய சம்பந்தம் (2) ஸம்யோக சம்பந்தம் என்று. ஸமவாய ஸம்பந்தம் என்பது, அவயவத்திற்கும் அவயவத்தோடு கூடிய வஸ்துவிற்கும் குணத்துக்கும் குணத்தை உடையதற்கும், செய்கைக்கும் செய்பவனுக்கும், ஜாதிக்கும் வியக்திக்கும் விசேஷத்திற்கும் நித்யமாய் உள்ள திரவ்யங்களுக்கும் உள்ள சம்பந்தம். இப்படிப்பட்ட ஸமவாய சம்பந்தம் ஆத்மாவுக்கும் ஐந்து கோசங்களுக்கும் சொல்லமுடியாது. ஏனெனில் முன் சொன்ன வகைகளில் இவை சேரவில்லை. அப்படியானால் பேரிகைக்கும் அதைத் தட்டும் தடிக்கும் உள்ள ஸம்யோக ஸம்பந்தம் இவற்றிற்குக் கூறலாமோ எனில், அதுவுமில்லை. திரவ்யங்களுக்குத்தான் ஸம்யோக ஸம்பந்தம் உண்டு. ஆத்மா த்ரவ்யமல்ல. ஆகையால் ஸம்யோக சம்பந்தமும் இல்லை. அப்படியானால் ஆத்மாவுக்கும் ஐந்து கோசங்களுக்கும் உள்ள சம்பந்தம் எந்த வகையானது என்று கேட்டால், கயிற்றுக்கும் பாம்புக்கும், கிளிஞ்சலுக்கும் வெள்ளிக்கும், தூணுக்கும்

மனுஷ்யனுக்கும், ஆகாயத்துக்கும் வர்ணத்துக்கும் உள்ளதுபோல் அத்யாஸ (சுமத்தல்) சம்பந்தம்தான் அதாவது ஒன்றின ஸ்வபாவத்தை அந்த ஸ்வபாவம் இல்லாத மற்றொன்றின் பேரில் சுமத்துவதே அத்தியாஸம். அத்யாஸம் இருவகைப்படும்: ஏகதராத்யாஸம் (ஏதாவது ஒன்றுகதுமட்டும் மற்றொன்றில் அத்யாஸம்) அநயோந்யாத்யாஸம் (ஒன்றுக்கொன்று அத்யாஸம்) அஹங்காரமும் ஆத்மாவும் சேர்ந்தே ஒரே ஞானத்தால் அறியப்படுவதால் இங்கு அந்யோந்யாத்யாஸம்தான்.

ஆத்மாவுக்கும் அன்னமயகோசத்துக்கும் ஒன்றுக்கொன்று எப்படி அத்யாஸம் (சுமத்தல்) காணப்படுகிறது என்று பார்ப்போம். நான் மனுஷியன் நான் தேவன் என்றும், நான் புருஷன் நான் ஸ்திரீ என்றும், நான் பிறந்தேன் நான் இருக்கிறேன், நான் வளர்ந்திருக்கிறேன், நான் மாறுதலடைந்திருக்கிறேன், நான் மூப்பு அடைந்திருக்கிறேன், நான் இனி இறப்பேன் என்றும், நான் குழந்தை நான் இளவயதானவன், நான் வாலிபன் நான் கிழவன் என்றும், நான் பிராம்மணன், நான் க்ஷத்திரியன் நான் வைச்யன் என்றும், நான் பிரம்மசாரி, நான் கிருகஸ்தன், நான் வானப்ரஸ்தன், நான் சந்நியாசி, என்றும் நான தமிழன், நான் தெலுங்கன் என்றும், நான் ஸ்ரீவத்ஸகோத்திரகாரன் நான் கௌசிக கோத்திரமுடையவன் என்றும், நான் ராமன், நான் சங்கரன், நான் கோவிந்தன் என்றும், நான் தீக்ஷிதன், நான் சாஸ்திரி என்றும், நான் யுத்தவீரன், நான் அனுபவிப்பவன் என்றும். அன்னமய கோசத்தில் உள்ள மாறுதலடையும் தர்மங்களை ஆத்மாவின் பேரில் சுமத்துகிறோம் ஆத்மாவிலுள்ள சச்சிதானந்தங்களை "என் சரீரம் இருக்கிறது பிரகாசிக்கிறது. பிரியமாக இருக்கிறது" என்று சரீரத்தில் ஆரோபம் செய்கிறோம். இவ்வாறு அன்னமயகோசத்திற்கும் ஆத்மாவிற்கும் ஒன்றுக்கொன்று ஆரோபம் காட்டப்பட்டது.

இனி பிராணமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று எப்படி அத்யாஸம் ஏற்பட்டிருக்கிறது எனப் பார்ப்போம். "நான் பசியுள்ளவன் எனக்கு தாகம் உண்டு. நான் பலவான், நான் வீர்யவான், நான் செய்கையுடையவன், நான் பேச்சாளி, நான் போகிறவன், நான் கொடையாளி நான் ஆனந்தமடைபவன், நான் ஊமை நான்

நொண்டி, என்றெல்லாம் கூறுவதன் மூலம் பிராணமய கோசத்தின் தர்மங்களை ஆத்மாவின் பேரில் சுமத்துகிறோம். ஆத்மாவின் சச்சிதானந்த தர்மங்களை பிராணமய கோசத்தின் பேரில் சுமத்தி "என்னுடைய பிராணன் இருக்கிறது விளங்குகிறது. பிரியமாயிருக்கிறது" என்று சொல்லுகிறோம் ஆகவே பிராணமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று அத்யாஸம் என்ற சம்பந்தம் உண்டு.

இப்படியே மனோமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் ஒன்றுக்கொன்று அத்யாஸம் (சுமத்தல்) என்ற சம்பந்தம் இருப்பதை கவனிப்போம். நான் ஸங்கல்பமுள்ளவன், நான் விகல்பமுள்ளவன் நான் துக்கத்தை உடையவன், நான் மோகமடைந்தவன், நான் காமனை உள்ளவன், நான் லோபி, நான் கேட்பவன், நான் பார்ப்பவன், நான் தொடுபவன், நான் சுவையறிபவன், நான் முகர்பவன், நான் செவிடன், நான் குருடன், என்று மனோமய கோசத்தின் காரியங்களை அதற்கு சம்பந்தமில்லாத ஆத்மாவின் பேரில் சுமத்தி இரண்டையும் ஒன்றாகவே பேசுகிறோம். ஆத்மாவின் ஸ்வரூபமான சச்சிதானந்த லக்ஷணத்தை மனோமய கோசத்தின் பேரில் ஏற்றி "என் மனம் நன்றாக இருக்கிறது. பிரகாசிக்கிறது" என்று சொல்லுகிறோம். இப்படி ஆத்மாவுக்கும் மனோமய கோசத்துக்கும் ஒன்றுக்கொன்று அத்யாஸம் (சுமற்றல்) என்ற சம்பந்தம் உண்டு.

விஜ்ஞானமயகோசத்தில் எப்படி இந்த அத்யாஸம் ஏற்படுகிறது என்று பார்ப்போம். உலகில் "நான் செய்பவன்" நான் புத்திசாலி, நான் யுக்திசாலி, நான் ஒரே தடவையில் அறிபவன், நான் எல்லா லோகங்களிலும் சஞ்சரிப்பவன், நான் ஆசையுள்ளவன், நான் துவேஷமுள்ளவன் நான் வேதாத்யயனம் செய்தவன், நான் பண்டிதன் நான் விரக்தன், நான் பக்திமான், நான் உபாஸகன் நான் ஞானி, என்று சொல்லி விஜ்ஞானமயகோசத்தின் குணங்களை ஆத்மாவின் பேரில் சுமற்றுகிறார்கள். ஆத்மாவின் சச்சிதானந்த லக்ஷணங்களை விஞானமய கோசத்தில் சுமத்தி எனக்கு புத்தி இருக்கிறது, அது பிரகாசிக்கிறது, அது பிரியமானது என்று சொல்லுகிறார்கள். இப்படி விஜ்ஞானமய கோசத்துக்கும் ஆத்மாவுக்கும் அந்நியோன்னியம் அத்யாஸம் (சுமற்றல்) காண்கிறோம்.

ஆனந்தமயகோசத்திற்கும் ஆத்மாவுடன் இப்படியே அத்யாஸம் (சுமற்றல்) காணப்படுகிறது. உலகில் பேசும் போது நான் அனுபவிக்கிறவன், நான் சுகி, நான் சந்தோஷமடைந்தவன், நான் ஸாத்விகன், நான் ரஜோகுணமுடையவன், நான் தமோகுணமுடையவன், நான் ஜடன், நான் மூடன், நான் சூன்யமானவன், நான் துஷ்டன், நான் மோகமடைந்தவன், நான் விவேகமற்றவன், நான் ப்ராந்தியுள்ளவன் என்று சொல்லி ஆனந்தமயகோசத்திலுள்ள மாறுபடும் குணங்கள் ஆத்மாவின்பேரில் சுமத்தப்படுகின்றன. ஆத்மாவின் சச்சிதானந்த லக்ஷணத்தை ஆனந்தமய கோசத்தின்பேரில் சுமத்தி என்னுடைய அஜ்ஞானம் இருக்கிறது தெரிகிறது என்று சொல்லுகிறோம். இப்படி ஆனந்தமய கோசத்திற்கும் ஆத்மாவிற்கும் ஒன்றுக்கொன்று அத்தியாஸம் (சுமற்றல்) ஏற்படுகிறது.

இப்படி ஐந்து கோசங்களுக்கும் ஆத்மாவுக்கும் அந்நியோன்னியாத்யாஸம் (சுமற்றல்) என்ற சம்பந்தம் உண்டு. இந்த அத்யாஸம் எதனால் ஏற்படுகிறது என்றால் இது ஆத்மா, இவை ஐந்து கோசங்கள் என்று நன்றாகப் பிரித்து ஞானம் இல்லாததால் இந்த அவிவேகத்தால் உண்டாகிறது அப்படியானால் ஐந்து கோசங்களையும் ஆத்மாவையும் பிரித்துத் தெரிந்து கொள்வது எப்படி? உலகில் பசு, புத்ரன், மனைவி. சிநேகிதன், வீடு, தனம், தானியம் முதலியவைகளைப்பற்றிப் பேசும்போது இவை என்னுடையவை என்று கூறுகிறோம். இதுபோலவே "இது என் சரீரம், இது என் பிராணன், இது என் மனம், இது என் புத்தி, இது என் அஞானம்" என்று சொல்லுகிறோம். இங்கு 'இவை' என்று சொல்லப்படும் பசு முதலியவைகளும் என்னுடையது என்பதில் உள்ள ஆத்மாவும் வெவ்வேறு என்று நிச்சயமாகத்தெரிகிறது அவைகள் ஆத்மாவல்ல. இது போலவே சரீரம் முதலிய கோசங்களையும் என்னுடையவை என்று கூறுவதால அவை ஆத்மாவல்ல. ஆத்மாவைக் காட்டிலும் வேறானவை என்று நிச்சயமாகத் தெரிகிறது. பஞ்ச கோசங்களும் ஆத்மாவும் வெவ்வேறு என்பதற்கு இதுதான் யுக்தி. வேதத்திலும் 'அசரீரம்' என்ற பதத்தால் ஆத்மா சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது 'ஆத்மா சரீரமற்றது' என்று சுருதி கூறுவதால் ஐந்து கோசங்களைக்காட்டிலும் ஆத்மா

வேறு என்று தெரியவருகிறது. பசு முதலியவைகளின் வளர்ச்சி, நாசம் ஆகிய குணங்கள் அவைகளின் யஜமானனிடம் ஒட்டுவதில்லை என்பதை நாம் கண்டிருக்கிறோம். அது போலவே சரீரங்களாகிற பஞ்சகோசங்களின் மாறுதல்களும் ஆத்மாவை அணுகுவதில்லை என்பது அனுபவம்.

கேள்வி :— மேலே சொன்ன உதாஹரணத்தில் பசு முதலியவை வெளியே உள்ளவையாகையால் நன்கு அறிய முடிகிறது. ஆத்மாவும் பஞ்சகோசங்களும் உள்ளே இருப்பதால் கொஞ்சமும் அறியமுடியவில்லை. மேலும் பசுவும் யஜமானனும் வெவ்வேறுயிருப்பதை நாம் நன்கு காண்கிறோம். ஐந்து கோசங்களும் ஆத்மாவும் வெவ்வேறாக இருப்பது நமக்குத் தெரியவில்லை. இரும்பை நெருப்பில் காய்ச்சினால் இரும்பும் நெருப்பும் பிரிக்கமுடியாதபடி ஒன்றாகவே தோன்றுவதுபோல் பஞ்சகோசங்களும் ஆத்மாவும் ஒன்றாகத் தான் தோன்றுகின்றன. இவ்வாறு திருஷ்டாந்தத்திற்கும் தார்ஷ்டாந்திகத்திற்கும் பல வேற்றுமைகள் இருப்பதால் பசு திருஷ்டாந்தத்தைக்கொண்டு ஸ்வப்ரகாசமான ஆத்மாவைக்காட்டிலும் பஞ்சகோசங்கள் வேறு என்பதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும் ?

பதில் :— வெளிப்பார்வை (ஸ்தூலஞானம்) கண்ணினாலும் உள்பார்வை (ஸூக்ஷ்மஞானம்) புத்தியினாலும் ஏற்படுகிறது. வெளிப்பார்வையால் அறியமுடியாத வஸ்துக்களையும் உள் அறிவினால் அறியமுடியும். வீணையின் தந்திக்கம்பிகளுக்கும் அதன் ஸ்வரங்களுக்கும், காய்ச்சப்பட்ட ஜலத்துக்கும் அக்னிக்கும், புஷ்பத்திற்கும், அதன் வாசனைக்கும் இவைகளில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் வெளிப்பார்வையில் வித்யாஸம் பார்க்கமுடியாமல் போனாலும், சூக்ஷ்மமான காது முதலிய ஞானேந்திரியங்களால் புத்திசாலியான மனிதன் வித்யாஸங்களை அறிந்து இது வீணையின் தந்தி இது ஸ்வரம், இது ஜலம் இது நெருப்பு, இது புஷ்பம் இது வாஸனை என்று வீணை முதலியவைகளிலிருந்து ஸ்வரம் முதலியவைகளைத் தனிப்படுத்தித் தெரிந்துகொள்வது சுலபமானதே. இதேமாதிரி ஜலத்தையும் பாலையும் பிரிக்க மற்றவர்களுக்கு முடியாவிட்டாலும் ஹம்ஸத்துக்கு அது சுலபமாகிறது. இவை எப்படியோ அதேமாதிரி ஆத்மாவிடத்திலிருந்து பஞ்சகோசங்களைப் பிரித்துத்தெரிந்துகொள்வது ஸ்தூல புத்தியால் முடியாத போனாலும் சூக்ஷ்ம புத்தியால் முடியும்.

அநாதிகாலமாக வந்துள்ள பூர்வ ஜன்ம வாசனைகளோடு கூடிய மனிதர்களின் பிரபஞ்ச வியவஹாரத்தை அங்கீரித்து பஞ்ச கோசங்கள் என்றும் அதை ஆத்மாவிடமிருந்து பிரிப்பது என்றும் சொன்னோம். வாஸ்தவத்தை விசாரித்தால் ஆத்மாவிடத்தில் பஞ்சகோசமே கிடையாது எப்படியெனில், கயிற்றில் சர்ப்பமும், கிளிஞ்சலில் வெள்ளியும், கம்பத்தில் மனிதனும் ஆகாசத்தில் நீலவர்ணமும் ப்ராந்தியால் தோன்றுகிறதே தவிற அவை அங்கு இல்லை மற்றொன்றில் தோன்றுகிற ஸர்ப்பம் முதலியவை முக்காலங்களிலும் உண்மையல்ல அதுபோல் ஆத்மாவிடத்தில் பஞ்ச கோசங்கள் தோன்றுகின்றனவே தவிற அவை வாஸ்தவமானவை அல்ல உலகில், எது தோன்றுகிறதோ அது அஸத் இரண்டு சந்திரன்கள் இருப்பதாக கண் வியாதிக்காரனுக்கு தோன்றுகிறது. அதில் இரண்டாவது சந்திரன் வாஸ்தவமல்லவே. ஆரோபிதம், கல்பிதம்தானே அது பொய்யென்று கண் வியாதி இல்லையானால் தெரியும் ஆனதால் பஞ்சகோசங்களும் ஆத்மாவில் ஆரோபிதம் அவை பொய்யானவை.

கேள்வி:— கயிற்றில் தோன்றிய ஸர்ப்பம் அதிஷ்டானமான கயிற்றின் ஸ்வரூபத்தை அறிந்த பிறகு அந்த க்ஷணம் முதல் தோன்றுவதில்லை, அதனால் ஸர்ப்பம் முதலியவற்றை ஆரோபிதம் என்று சொல்லலாம். பஞ்சகோசங்களோ ஆத்மாவை அறிந்த பிறகும் கூட தோன்றிக்கொண்டிருக்கின்றனவே தவிற மறைவதில்லையே! ஆகவே பஞ்ச கோசங்களை ஆரோபிதமென்று எப்படிக்கூறலாம்.

பதில்:— உலகில் ஸத் (இருத்தல்) மூன்று வகைப்படும். (1) ப்ராதிபாஸிகஸத் (2) வ்யாவஹாரிகஸத் (3) பாரமார்த்திகஸத் என்பவை. சிருஷ்டி இருவகை (1) ஈசுவர சிருஷ்டி (2) ஜீவசிருஷ்டி என. கிளிஞ்சலில் வெள்ளித் தோற்றம், கயிற்றில் பாம்புத்தோற்றம் இவையெல்லாம் ஜீவச்ருஷ்டி. இதுதான் பிராதிபாஸிகஸத் (கத்காலத்தில் மட்டும் தோன்றுவது) என்பது இந்த ஜீவச்ருஷ்டிக்கு அதிஷ்டானமாக உள்ள ஆகாசம் வாயு முதலியவை எல்லாம் வ்யாவஹாரிகஸத் (விவகார காலம்வரை உள்ளவை) என்பது.

இது ஈசுவர சிருஷ்டி. இந்த ஈசுவர சிருஷ்டிக்கும் அதிஷ்டான மாக இருக்கும் எந்த பிரம்மம் உண்டோ அது பாரமார்த்திக ஸத் (உண்மையாக இருத்தல்) அதுதான் சாசுவதமானது

வியாவஹாரிகஸத் வியவஹாரம் முடியும் வரை இருக்கும். பிராதிபாஸிகஸத் (கிளிஞ்சலில் வெள்ளி) தோற்றம் உள்ள வரையில் இருக்கும். இந்த தோற்றம் போய்விட்டால் அந்த வெள்ளியும் நீங்கிவிடும். 'ப்ரதிபாஸம்' என்ருல் தோற்றம். அந்த தோற்றத்தால் ஏற்படுவது ப்ராதிபாஸிகம்.

பிராதிபாசிகம், வ்யாவகாரிகம் இரண்டும் ஒருவஸ்துவின் பேரில் ஆரோபிதம் என்ற விஷயத்தில் ஒரே மாதிரியானலும் இவைகளின் ஸத்தை வெவ்வேறு. மனிதனின் அறிவின் குறைவால் இருட்டு முதலிய காரணங்களினுல் கயிற்றில் பாம்பு தோன்றியது. விளக்கு வந்தபின் இருட்டு நீங்கவே இது கயிறுதான் என்ற அதிஷ்டான ஞானம் வந்ததும் அங்கு தோன்றிய பாம்பு நாசமடைந்துவிடுகிறது. ப்ராதிபாஸிக வஸ்து அதிஷ்டான ஞானத்தால் நாசமடைவதுபோல் வியாவஹாரிக பிரபஞ்சம் அதன் அதிஷ்டானமான ஆத்ம ஞானத்தால் நாசமடைவதில்லை. ஆத்மஞானம் வந்தவுடன் பிரபஞ்சம் மறைந்துவிடுமானல் ஆத்மஞானிகளான ஜீவன் முக்தர்களே உலகில் இருக்கமாட்டார்கள். ஞானிகளுக்கு பிரபஞ்ச வியவஹாரமில்லாததாலும் அக்ஞானிகளுக்கு உபதேசம் செய்ய சக்தி இல்லாததாலும் சிஷ்யனுக்கு உபதேசம் செய்ய குருவும் கிடைக்கமாட்டார். குரு இல்லாத தால் சிஷ்யனும் இல்லை. குருசிஷ்ய பரம்பரையே உலகில் இருக்காது. ஆகையால் அதிஷ்டானமான ஆத்மஞானம் வந்த பிறகும் அவர்களுக்கு வியாவஹாரிக பிரபஞ்சம் இருப்ப தாகத்தான் ஒப்புக்கொள்ளவேண்டும்.

மண்ணில் ஆரோபிதமான குடமானது, குயவனுல் செய்யப்பட்ட அடி வயிறு பருத்தும் மேலே கழுத்து சிறுத்தும் உள்ள அதன் வடிவம் நசிக்கும்வரை இருந்துகொண்டுதான் இருக்கும். இதுபோலவே ஆத்மாவில் ஆரோபிதமான பஞ்சகோசங்கள் பொய் என்ற ஞானம் வந்தபோதிலும் பிராரப்தம் முடியும்வரை எரிந்த வஸ்திரம் போல் தோன்றிக் கொண்டுதானிருக்கும். (வீட்டில் வஸ்திரத்தை மடித்து வைத்திருந்தான். வீடு எரியும்போது அந்த வஸ்திரமும்

எரிந்துவிட்டது. ஆனுலும் தூரத்திலிருந்து பார்க்கும்போது வஸ்திரம்மடித்துவைத்திருப்பதுபோலவே தோன்றும். அருகில் வந்து கையால் எடுத்துப்பார்த்தால்தான் சாம்பலாகியிருப்பது தெரியவரும். இதுதான் தக்தபடந்யாயம் எரிந்த வஸ்திரம் போல் என்பது)

இதனுல் முடிவு என்ன என்று பார்ப்போம். மண்ணில் ஏற்பட்ட குடத்தின் பெயர், உருவம் இவைகள் நீங்கிவிட்டால் மண் ஒன்றுதான் வாஸ்தவமாக மிச்சமாகிறது. அதுபோலவே ஆத்மஞானத்தால் ஆத்மாவில் ஆரோபிதமான (சுமத்தப் பட்ட) பஞ்ச கோசங்கள் விலக்கப்பட்டால் சச்சிதானந்த ரூபமான ஆத்மா ஒன்றே வாஸ்தவமாக மிஞ்சுகிறது. இவ்வாறு எவன் அறிகிருனே அவன் ஆத்மஞானி. அவனே பிரம்மஞானி, அவனுக்குத்தான் விதேகமுக்தி (சரீரம் நாச மானதும் பூர்ண விடுதலை) கிடைக்கும் என்று எல்லா உபநிஷத்துக்களும் சொல்லுகின்றன.

பத்தாவது வர்ணகம் முற்றும்.

॥ एकादशवर्णकम् ॥

अथेदानीमस्मिन्नेकादशवर्णके आत्मनः सच्चिदानन्दरूपत्वं चतुर्थलक्षणमुच्यते। आत्मनः सद्रूपं किं चिद्रूपं किमानन्दरूपं किमिति चेत्, शृणु। कालत्रयेऽपि केनाप्यबाध्यमानत्वे सत्येकरूपत्वं सतो लक्षणम्। इदं लक्षणमात्मन्यस्ति। अस्य प्रमाणं किमिति चेत्, अस्य प्रपञ्चस्य सृष्टेः पूर्वम् 'सदेवासीत्' 'आत्मन आकाशः संभूत,' इत्यादिवेदान्तशास्त्रं प्रमाणम्। किं च सर्वजनानामनुभवश्च प्रमाणम्। आढ्यो दरिद्रः कर्मी भक्तो मुमुक्षुरिति सर्वे जनाः। एतेषामनुभवः कीदृश इति चेत्, 'अहं पूर्वजन्मनि सत्पात्रेषु यत्किंचिद्दत्तवान्, तेनास्मिञ्जन्मन्यैश्वर्यमनुभवामि; अस्मिञ्जन्मन्यपि यत्किंचिद्दत्तं चेत् भविष्यज्जन्मन्यैश्वर्यमनुभविष्यामि' इत्याढ्यस्यानुभवः। 'अहं पूर्व-

11-வது வர்ணகம்

ஆத்மாவின் நான்காவது லக்ஷணமான ஸச்சிதானந்த ரூபம் இந்த அத்தியாயத்தில் விளக்கப்படும்.

கேள்வி:— ஆத்மாவின் 'ஸத்' ரூபம் எது? 'சித்' ரூபம் எது? 'ஆனந்தரூபம்' எது?

பதில்:— முக்காலத்திலும் எதனாலும் எவ்விதமும் பாதிக்கப் படாமலும் மாறுபாடடையாமலும் ஒரேவிதமாக இருப்பது தான் ஸத் என்பது இந்த லக்ஷணம் ஆத்மாவிடத்தில் இருக்கிறது இதற்கு என்ன பிரமாணம் எனில், வேதாந்த சாஸ்திரத்தில் இந்த பிரபஞ்சத்தின் சிருஷ்டிக்கு முன் "ஸத்" ஒன்றுதான் இருந்தது அதிலிருந்து ஆகாசம் முதலியவை உண்டாயின என்று சொல்லப்படுவதுதான் பிரமாணம் மேலும் உலகில் உள்ள எல்லா ஜனங்களின் அனுபவமும் பிரமாண மாகும். பணக்காரன், தரித்திரன், கர்மாவில் ஈடுபட்டவன், பக்தன், மோக்ஷத்தில் ஆசையுள்ளவன் என்று உலகமக்களை ஐந்து பிரிவாகப்பிரிக்கலாம். இவர்களின் அனுபவம் பின் வருமாறு:—

"நான் பூர்வஜன்மத்தில் ஸத்பாத்திரத்துக்கு (சிறந்த யோக்யதை உள்ளவர்களுக்கு) ஏதோ கொஞ்சம் கொடுத் திருப்பேன் அதனால்தான் இந்த ஜன்மாவில் ஐசுவரியத்தை அனுபவிக்கிறேன் இந்த ஜன்மாவிலும் ஏதாவது மற்றவர் களுக்குக்கொடுப்பேனாகில் அடுத்த ஜன்மாவிலும் ஐசுவரிய வானாக இருப்பேன்" என்பது பணக்காரரின் அனுபவம்.

"நான் பூர்வ ஜன்மாவில் ஸத்பாத்திரத்தில் ஏதும் தானம் செய்யவில்லை. அதனால் இந்த ஜன்மாவில் தரித்திரனாக இருக்கிறேன். இந்த ஜன்மாவில் நான் ஏதாவது தானம் கொடுக்காவிடில் அடுத்த ஜன்மாவிலும் தரித்திரனாக இருப்பேன்' என்பது தரித்திரனுடைய அனுபவம்.

"பூர்வஜன்மத்தில் நான் நல்ல கர்மாக்களைச் செய்தேன். அந்த வாசனையினால் இந்த ஜன்மாவிலும் நல்ல கர்மாக்களை செய்கிறேன். இதனால் வரும் ஜன்மாவில் சுவர்க்கத்தில் தேவத்தன்மையை அடைவேன்" என்பது கர்மாவை செய்பவனின் அனுபவம்.

"பூர்வஜன்மாவில் பகவானை உபாசித்தேன். அந்த தொடர்பினால் இந்த ஜன்மாவிலும் பகவத் பக்தனாக இருக் கிறேன். இதனால் அடுத்த ஜன்மாவில் வைகுண்டம் முதலிய லோகங்களில் ஸாலோக்யம் முதலான முக்தியை அடைவேன் என்பது பக்தனுடைய அனுபவம்.

"பல ஜன்மாக்களில் ஈசுவரார்ப்பணமாக கர்மாவைச் செய்தேன். அதனால் இந்த ஜன்மாவில் சாதன சதுஷ்டயத் துடன் கூடி ஸத்குருவை அடைந்து சிரவணம் முதலியவை களால் ஆத்மஞானம் கிடைத்தது. இனிமேல் எனக்கு ஜன்மா கிடையாது. நான் அடையவேண்டியதை அடைந்து விட்டேன் என்பது முமுக்ஷுவின் அனுபவம்.

இப்படி எல்லா ஜனங்களுக்கும் மூன்று காலங்களிலும் (अहमस्मि) நான் இருக்கிறேன் என்றே அனுபவம் காணப்படு வதால் இந்த ஆத்மாவில் ஆரோபிதமான தேகத்துக்குத்தான் நாசம் உண்டே தவிர ஆத்மாவுக்கு ஒருக்காலும் எவ்விதத் திலும் நாசம் கிடையாது என்று அறியவேணும். ஆகையால் ஆத்மா முக்காலங்களிலும் பாதிக்கப்படாமல் மாறுபாடடை யாமல் ஏகரூபமாக இருப்பதால் ஆத்மாவுக்கு 'ஸத்' (இருத்தல்) என்ற லக்ஷணம் உண்டு.

அனுபவத்தால் சொல்லப்பட்ட இந்த விஷயம் யுக்திக்கு பொருந்தி இருக்குமா எனில் விசாரித்துப் பார்த்தால் இது யுக்திக்கும் சரியாகவே இருக்கிறது. எப்படியெனில் நாம் இந்த உலகத்தில் இருக்கிறோமா இல்லையா என்று விசாரித்தால் இருக்கிறோம் என்றுதான் சொல்லவேண்டும். ஒவ்வொரு வருக்கும் நான் இருக்கிறேன் என்றுதான் அனுபவம் ஏற்படுகிறது நமக்கு சரீரம் இருக்கிறதா இல்லையா என்று பார்த்தால் இருக்கிறது என்றுதான சொல்லவேண்டும். ஏனெனில் நாம் சரீரத்தை நேரில் காண்கிறோம்.

இந்த சரீரம் எதனால் ஏற்பட்டது? கர்மாவினால் அந்த கர்மா நம்முடையதா அல்லது பிறருடையதா? நம்முடையது தான் என்று சொல்லவேண்டும். மற்றவனுடைய கர்மா வினால் அவனுக்கல்லவா ஸ்வர்க்கம் முதலிய பலன் ஏற்படும் நமக்கு அது வராதே பிறர் செய்த கர்மாவினால் வேறு ஒருவன் பலனை அடைவான் என்றால், யாகம் செய்தவனுக்கு அதன்

பலனுன ஸ்வர்க்கம் கிடைக்காமல் போய்விடும். யாகம் செய்யாதவனுக்கு ஸ்வர்க்கம் கிடைத்துவிடும். இது நியாய மில்லை. மேலும் முன் ஒரு காலத்தில் ஸ்ரீசுகர் முதலிய பிரும்மரிஷிகள் செய்த ஞானஸமாதியின் பலனுக நம் எல்லோருக்கும் விதேக கைவல்யம் கிடைக்கவேணும் ஆகை யால் நாம் செய்த கர்மாவினுல்தான் நமக்கு இந்த சரீரம் கிடைத்திருக்கிறது என்று தீர்மானிக்கவேணும்.

இந்தசரீரத்தை உண்டு பண்ணிய கர்மா இந்த ஜன்மாவில் செய்யப்பட்டதா பூர்வஜன்மாவில் செய்யப்பட்டதா என்று யோசித்தால், பூர்வஜன்மாவில் செய்யப்பட்டது என்றே சொல்லவேணும். இந்த சரீரம் உண்டானபின் செய்யும் கர்மா இந்த சரீரத்துக்கு காரணமாக இருக்கமுடியாது. காரணம் என்பது காரியம் ஏற்படுவதற்கு முன்னுலேயே இருக்கவேண்டும். இந்த சரீரம் ஏற்பட்டபின் நாம் செய்யும் கர்மாவானது இந்த சரீரம் ஏற்படுவதற்குமுன் இல்லாத படியால் இது இந்த சரீரத்திற்குக்காரணமாக முடியாது. முற்பிறவிகளில் செய்த கர்மாதான் இந்த சரீரத்திற்குக் காரணம். முன்பு கர்மா செய்யும்போது நாம் இருந்தோமா இல்லையா என்று விசாரித்தால், இருந்தோம் என்றே சொல்ல வேணும். இல்லாமலிருந்தால் எப்படி கர்மாவை செய்ய முடியும்? அப்போது நமக்கு சரீரம் இருந்ததா இல்லையா எனில், இருந்தது சரீரமில்லாவிட்டால் கர்மாவை செய்ய முடியாது அது அந்த ஜன்மாவில் செய்த கர்மாவின் பலனு அலலது அதற்கு முன் பிறவியில் செய்த கர்மாவின் பலனு எனில், அது அதற்கு முன் ஜன்மாக்களில் செய்த கர்மாவின் பலன்தான் என்போம். இப்படி அடிக்கடி விசாரிக்கையில் சரீரத்துக்கும் கர்மாவுக்கும் இருத்தல் பிரவாகம் போல் அநாதி தண்ணீர் வெவ்வேருயிருந்தாலும் ப்ரவாஹத்தில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பது போல் கர்மாவால் சரீரம் சரீரத்தால் கர்மா என்ற ரீதியில் அநாதிகாலமாக கர்மாவும் சரீரமும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது இதுதான் ப்ரவாஹ அநாதி என்பது. இவ்விரண்டுடன் கூடிய ஆத்மாவுக்கு உத்பத்தியே இல்லாததால் ஆகாசம்போல் இதன் ஸ்வரூபமே அநாதிதான். இது முக்யமான அநாதி இவ்வாறு சென்ற காலத்திலும் நிகழ்காலத்திலும் ஆத்மாவின் இருப்பை யுக்தியாலும் தீர்மானிக்கலாம்.

இனி வரும் காலத்தில் ஆத்மா இருக்கிறதா இல்லையா என்று யுக்தியினுல் பார்ப்போம். நாம் முன் ஜன்மாவில் சிரவணம், மனனம், இவைகளைச் செய்யாமல் கர்மாவை மட்டும் முக்கியமாகக்கருதிச்செய்ததால் இந்த ஜன்மாவும் சரீரமும் ஏற்பட்டிருக்கிறது. இப்போது நாம் செய்யும் கர்மாவும் இனி பினனுல் ஜன்மாக்களைக்கொடுக்கும். அந்த ஜன்மாவில் செய்யும் கர்மா அதற்குப்பின்னும் ஜன்மாவைத் தரும். இப்படிப்பார்த்தால் வருங்காலத்திலும் கர்மாவுக்கும் சரீரத்துக்கும் பிரவாஹம்போல் இருத்தல் என்பது தீர்மான மாகிறது. இதற்கு முடிவே இல்லை தத்துவஞானம் ஏற்பட்டு கர்மா நாசமடைந்தால சரீரம் ஏற்படுவதில்லை இந்த இரண்டுக்கும் சம்பந்தப்பட்ட ஆத்மாபிரும்மஞானம் ஏற்படும் வரையில் சரீரத்தின உண்டாகுதல், நசித்தல் முதலியவை களை அனுபவித்துக்கொணடும் சரீரம் இருக்கும் காலத்தில் சுக துக்கங்களை அனுபவித்துக்கொண்டும் கீழே ஸ்தாவரம் வரை யிலும், மேலே பிரஹ்மலோகம் வரையிலும் அலைந்து கொண்டும் இருக்கிறுன ஆத்மா நாசததை அடைவதில்லை தததுவஞானம் ஏற்பட்டால, அவித்யை, ஆசை, கர்மா முதலியவை எல்லாம் நசித்து, துக்கத்துக்குக் காரணமானது ஏதும் இல்லாமல், ஸ்வஸ்வருப ஆனந்த அனுபவத்துடன் விதேக கைவல்யத்தை அடைந்து நித்யானந்த ஸ்வருபமாகி விடுகிறுன். இப்படி வருங்காலத திலும் ஆத்மாவுக்கு "ஸத்வம் (இருததல்) உண்டு, நாசம் என்பது கிடையாது ஆகவே எலலாககாலங்களிலும ஆத்மா இருக்கிறுன் என்பது யுக்தியினுல் சித்திக்கிறது.

இப்படி முக்காலத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதாலும் ஸ்வஸ்வருபமாய ஒன்ருக இருப்பதாலும (ஸத) எப்போதும் இருத்தல் என்பது தீர்மானமாயிற்று. இப்படி சுருதி (வேதம்) யுகதி அனுபவம் இவைகளைகொணடு பார்க்கும்போது அநேக பிரளயங்களில் அநேக பிரபஞ்சங்கள் நாசமடைந்தும் தான நாசமடையாமல் ஆத்மா இருக்கிறது எனறு அறிந்தோம். ஆகவே ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் எனபது பிரபஞ்சத்துக்கே தவிர ஆத்மாவுககு அல்ல. இவ்விதம் முக்காலத்திலும் ஒரே ரூபமுடையதாலும் எதனுலும் பாதிக்கப் படாததாலும் ஆத்மா 'ஸத்ரூபம்" (எப்போதும் இருத்தல் உடையது) என்று அறியவேண்டும்.

ஆத்மா 'சித்' (அறிவுமயம்) ரூபமானது என்று எப்படி தீர்மானிக்கிறது? சூரியன முதலிய இதர ப்ரகாச வஸ்துக்களின் உதவி இலலாமல் தானே பிரகாசித்துக்கொண்டு அதன் பேரில் சுமத்தப்பட்ட ஸகல ஜடபதார்த்தங்களையும் விளங்கும்படி செய்வதுதான் சித்ரூபமென்பது. இந்த சித்ரூப லக்ஷணம் ஆத்மாவில் இருக்கிறது. எப்படியெனில் கும்மிருட்டிலும் கூட வேறுஒன்றின உதவி இல்லாமல் ஆத்மா தானே பிரகாசிக்கிறது. ஆத்மாவின் பேரில் சுமத்தப்பட்ட சரீரத்தின் தர்மங்களான பால்யம் யௌவனம் கிழட்டுத்தனம் ஆகிய நிலைகளையும் அந்நிலைகளில் ஏற்படும் காரியங்களையும் இதர உதவியின்றி நனருக அறிகிறது. ஆகவே ஆத்மா "சித்ரூபம்" எனபது தீர்மானமாகத் தெரிகிறது.

கேள்வி:—நமக்கு ஸர்வஜ்ஞத்வம் (எல்லாமறிந்த நிலை) இல்லாததால் எல்லா பதார்த்தங்களையும் விளங்கச்செய்யும் சக்தி நமக்கு எப்படி வரும்?

பதில்:—பிரபஞ்சம் இருவகைப்படும். வெளி பிரபஞ்சம் உள் பிரபஞ்சம் என்று. இவ்விரண்டு பிரபஞ்சங்களும் நம்மால்தான் விளங்கும்படி செய்யப்படுகின்றன. பிரபஞ்சத்தால் நாம் பிரகாசப்படுத்தப்படவில்லை. எப்படியெனில்:— பிருதிவி, அப்பு, தேயு. வாயு, ஆகாசம் என்றும் சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்றும், பஞ்சீக்ருத பூதங்கள் என்றும், ப்ரம்மாண்டம் என்றும் பதிநான்கு புவனங்கள் எனறும், நான்குவித ஸ்தூல சரீரங்கள் என்றும், பலவிதமான பெயர், உருவம், குணம, தர்மம், மாறுதல் சக்தி இவைகளுக்கு ஆச்ரயமாக உள்ளது தான் வெளிப்பிரபஞ்சம் என்பது இபபடிப்பட்ட வெளி பிரபஞ்சத்தை பல உட்பிரிவுகளால் பலவாருகப் பிரித்து பிரமாணங்களால் நாம் தான் அறிகிறோம். நம்மை இந்த பிரபஞ்சம் அறிவதில்லை எனறு உள் நோக்கி விசாரித்துப் பார்க்கும்போது வெளி உலகத்தை பிரகாசப்படுத்தும் தன்மை நமக்கு இருப்பது தீர்மானமாகத் தெரிகிறது.

இனி உள் உலகத்தை பிரகாசப்படுத்தும் தன்மை நமக்கு எப்படி ஏற்படுகிறது என்று பார்ப்போம். உள் உலகம் என்பது அனனமயாதிகோசம் முதல் ஜீவன் முக்திநிலை வரை பலவாருகப் பிரிந்துள்ளது. அதாவது:—

"இது அன்னமயம், இது பிராணமயம், இது மனோமயம் இது விஜ்ஞானமயம், இது ஆனந்தமயம், இப்படி இவை ஐந்து கோசங்கள் என்றும், இது ஸ்தூலசரீரம் இது சூக்ஷ்ம சரீரம், இது காரணசரீரம், இப்படி இவை மூன்று வகை சரீரங்கள் என்றும், இவை சரீரத்தின் ஆறுவித மாறுபாடுகள் இவை ஆறுவித கோசங்கள் இவை ஆறுவித ஊர்மிகள் (ஸமுத்திரத்தில் அலைகள் போல் ஓயாமல் திரும்பித் திரும்பி வருவதால் கிழத்தனம்-மரணம், பசி-தாகம், ராகம்-த்வேஷம் இந்தஆறுக்கும் ஊர்மி-அலை என்றுபெயர்.) இது குருட்டுத்தனம் இது மந்தத்தனம், இது சுறுசுறுப்புத்தனம், இது விருப்பம், இது வெறுப்பு, இது மூன்றுவித கரணங்கள் (மனம் வாக்கு காயம்) இது அந்தக்கரணம் இது விழிப்பு, இது ஸ்வப்னம், இது சுஷுப்தி இப்படி மூவகை அவஸ்தைகள், இவை ஐந்து ஞானேந்திரியங்கள், இவை ஐந்து கர்மேந்திரியங்கள் இவை ஐந்து பிராணன்கள், இவை ஐந்து உபபிராணன்கள். இது மனஸ், இது புத்தி, இது சித்தம், இது அஹங்காரம், இது ஸங்கல்பம், இது தீர்மானம். இது கவனம், இது பற்றுதல், இவன் வித்வான், இவன் தைஜஸன், இவன் பிராஜ்ஞன் என்று இவர்கள் அவஸ்தையுடன் கூடியவர்கள் இது பிராதிபாஸிகம், இது வ்யாவஹாரிகம். இது பாரமார்த்திகம், இது ஸாத்விகம், இது ராஜஸம், இது தாமஸம். இது சுகம். இது துக்கம், இது ஞானம், இது அஞானம், இது பிரியம், இது வெறுப்பு, இது உபேக்ஷை, இது ஸாதன சதுஷ்டயம், இவை மைத்ரீ, கருணை முதிதை உபேக்ஷை என்ற நான்கு. இது அஷ்டாங்கயோகம், இது சிரவணம், இது மனனம், இது நிதித்யாஸனம், இது ஸமாதி என்றும், இது பிரமாணம் இது அறியப்படுவது, இவன் அறிகிறவன், இது தாபத்ரயம் இது ஆதி (மனதில் உள்ளது), இது வியாதி, (சரீரத்திலுள்ளது) இது ஆரோக்யம், இது பக்தி, இது வைராக்யம், இது மந்தம், இது தீவ்ரம். இது அதிக தீவிரமானது, இது ஸகுணோபாஸனை. இது மனோநாசம், இது வாஸனாக்ஷயம், இது விதேஹ கைவல்யம், இது ஜீவன் முக்தி என்ற வெவ்வேறு பெயர், ரூபம், குணம். மாறுதல்கள் சக்திகள் இவைகளுக்கு ஆச்ரயமாக இருப்பது உள் பிரபஞ்சம். இவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியே பிரிக்கப்பட்டு நம்மால் அறியப்படுகிறது. இந்த உள் பிரபஞ்சம் நம்மை அறிவதில்லை. நாம் அதை அறிகிறோம். ஆகவே ஆத்மா எல்லாவற்றையும் அறிவதாலும் வேறொன்றினாலும் ஆத்மா

அறியப்படாததாலும் ஆத்மா 'சித்' ரூபமானது என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

கேள்வி :— ஆத்மா 'சித்ரூபி' யாராலும் அறியப்படுவதில்லை என்று சொலலப்பட்டதே, மனதுக்கு எல்லாம் தெரிகிறதே ஆத்மாவும் அதே மனதால் அறியப்படட்டுமே ?

பதில் :— மனம் என்பது உண்டாகி அழியக்கூடியது. ஸங்கல்ப ரூபமானது அளவுக்குட்பட்டது, குடம்போல் பூத காரியம், காமம் முதலிய விகாரங்களால் கலங்கியது ஞாபகம் மறதி இவைகளுடன் கூடியது. இப்பேற்பட்ட மனம் ஜடமென்று தெரிந்துகொள்ள வேண்டும். அந்த மனதுக்கு பிரகாசத்தன்மை கிடையாது. இந்த மனதும்கூட சைதன்யத்தால்தான் அறியப்படுகிறது. அப்படிப்பட்ட ஜடமான மனது தானே பிரகாசிக்கும் 'சித்'தை எப்படி அறியமுடியும் ? ஒரு விதத்திலும் அறியவே முடியாது.

கேள்வி :— அப்படியானல் "मनसैवानुद्रष्टव्यम्" மனதால்தான் (ஆத்மாவை) அறியவேண்டும் என்ற வேதவாக்யத்தின் தாத்பரியம் என்ன ?

பதில் :— அக்னியில் தங்கத்தை வைத்து காய்ச்சினல் காய்ச்சப்பட்ட தங்கத்துக்கு பிரகாசம் உண்டாகிறது. இதனுல் தங்கத்தினிடத்தில் ஏற்கனவே இல்லாத பிரகாசத்தை புதிதாக அக்னி உண்டு பண்ணவில்லை. ஆனல் அக்னியினல் தங்கம் காய்ச்சப்பட, தங்கத்தின் மேல் உள்ள அழுக்குப் போன உடனே முன்பு அதில் இருந்த சுவர்ணத்தின் பிரகாசம் விளங்குகிறது. புதிதாக பிரகாசம் உண்டு பண்ணப்படவில்லையே. புதிதாக அக்னியினல் தங்கத்தில் பிரகாசம் உண்டாக்கப்படுகிறது என்று சொல்வோமானல் சூளையில் வைக்கப்பட்டிருக்கும் மண் பானையிலும் இந்த பிரகாசம் உண்டு பண்ணப்பட வேண்டுமே. அப்படி இல்லையே. இது எப்படியோ அப்படியே மேலே சொன்ன வேத வாக்யத்திலும் அர்த்தம் கொள்ள வேண்டும். எப்படியெனில், மனது ஆத்மாவின் ரூபமாக மாறி ஆத்மாவின் பிரதிபிம்பத்துடன் கூடிக்கொண்டு ஆத்மாவை மறைக்கிறதும் பொய்யானதும் அனுதியுமான அஞ்ஞானத்தைப் போக்குகிறது. இந்த அஞானம் நீங்கியதும் ஆத்மா தானகவே விளங்குகிறது என்று தான் அந்த வாக்யத்துக்கு அர்த்தம் கொள்ள வேண்டும்.

மனதும் ஆத்மாவால்தான் அறியப்படுகிறது. மனதினல் ஆத்மா அறியப்படவில்லை. இதுவும் எப்படியெனில் உதாகரணத்தில் பார்ப்போம். தீபத்தால் இருட்டைப் போக்கடிக்கும் இடத்தில் விளக்கு, எண்ணை, திரி இந்த மூன்று மட்டும் இருந்தால் இருட்டு நீங்காது. இதற்குக் காரணமாக இருக்கும் எங்கும் நிறைந்துள்ள அக்னியும் இவைகள் இல்லாமல் தானகவே இதைச் செய்ய முடியாது. இருந்தபோதிலும் அந்த திரியுடன் சேர்ந்த அக்னி தீபம் என்ற பெயர் கொண்டு இருட்டைப் போக்குகிறது. இதேமாதிரி, விளக்கு ரூபமான சரீரத்தில், கர்மா என்ற எண்ணையுடன் கூடிய மனது என்ற திரியில் அக்னி ரூபமான ஆத்மா சேர்ந்து அதனுடன் ஒன்ருகக்கலந்துகொண்டு ஜீவன் என்ற பெயரையும் பெற்று அந்தந்த விஷயங்களை மறைக்கும் அஞானரூபமான இருளை நீக்கி, தீபமானது குடம் முதலிய வஸ்துக்களை விளக்குவதுபோல உள்ளேயும் வெளியிலும் உள்ள பதார்த்தங்களை பிரகாசப்படுத்துகிறது. தீபமானது எப்படிதான் ஒளிமயமாக இருந்துகொண்டு தனது பிரகாசத்தால் தன்னுடன் சேர்ந்துள்ள வஸ்துக்களையும் பிரகாசப்படுத்துகிறதோ அப்படியே ஆத்மாவும் அந்தக்கரணத்தில் இருந்துகொண்டு தனது சைதன்யத்தால் தானே பிரகாசித்துக் கொண்டு தன்னுடன் சேர்ந்துள்ள உள்ளேயும் வெளியிலும் உள்ள எல்லா வஸ்துக்களையும் பிரகாசப்படுத்துகிறது. ஆகவே ஆத்மா 'சித்ரூபம்' (ஞானரூபம்) என்று தீர்மானமாகிறது.

இனி ஆத்மா ஆனந்தரூபமானது என்பது பற்றி அறிவோம். சாசுவதமானதும், வேறு ஒன்றின் மூலம் ஏற்படாததும், நிரதிசயமானதும் (தன்னைவிட வேறு உயர்ந்தது இல்லாததும்) ஆன ஸுகம் எது உண்டோ அதற்கு ஆனந்தம் எனப்பெயர். அதுதான் ஆத்மாவின் ஸ்வரூபம். அதனுல்தான் மாலை, சந்தனம், ஸ்திரீ இவைகளை அனுபவிப்பதனுல் ஏற்படும் சுகம் அநித்தியம் ஒரு வஸ்துவின் உதவியால் உண்டானது, சிறப்புள்ளது என்பதனுல் அது ஆத்மஸ்வரூபம் ஆகமாட்டாது என்று ஏற்படுகிறது. முன் சொன்ன ஆனந்தமே ஆத்மஸ்வரூபம். அது எப்படியெனில், சுஷுப்தியில் அடையும் ஆனந்தத்தில் ஆத்மஸ்வரூப ஆனந்தத்தின் அடையாளம் இருப்பதால் அந்த ஆனந்தமே நான் என்று அறியவும்.

கேள்வி:—ஸுஷுப்தியில் துக்கமின்மையே காணப்படுகிறது ஆனந்த அனுபவம் காணப்படுவதில்லையே. ஆகவே ஸுஷுப்தியில ஆனந்தத்தின் அடையாளம் உண்டு என்று எப்படி சொல்வது.?

பதில்:—உலகில் தூங்கி எழுந்தவன் "நான் இவ்வளவு காலம் சுகமாய்த்தூங்கினேன்" என்று தூக்கத்தில் தான் அனுபவித்த சுகஸ்வரூபத்தை சொல்லுகிறான். ஆகையால் ஸுஷுப்தியில் எல்லோருக்கும் ஸ்வானுபவத்தில் ஆனந்தம் இருக்கிறது என்று தெரிகிறது

கேள்வி:—அப்படியானால் மேலே சொல்லப்பட்ட நித்யத்வம், வேறு ஒன்றின் ஆசிரயமின்மை, உயர்வற்ற தன்மை என்ற மூன்று லக்ஷணங்களும் சுஷுப்தியில் உள்ள ஆனந்தத்தில் இருக்கிறதா?

பதில்:—முதலில் வேறு ஒன்றின் ஆசிரயமின்மையைப்பற்றி கவனிப்போம். சந்தனம் புஷ்பம், ஸ்திரீ முதலான விஷயங்கள் உபாதிகள் அவைகளால் அடையும் சுகம் ஔபாதிகம் இந்த உபாதிகளில் ஒன்றுகூட ஸுஷுப்தியில் இல்லை. ஆனால் எல்லோராலும் சுகம் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் ஸுஷுப்தியில் வேறு காரணமற்ற சுகம் இருக்கிறது என்று அறியலாம். அடுத்தது இதன் உயர்வற்ற தன்மை எப்படி என்று கவனிப்போம். தைத்திரீய உபநிஷத்தில் மனுஷ்யானந்தத்திலிருந்து ஹிரண்யகர்பரின் ஆனந்தம் வரை 11 வகையான ஆனந்தங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவை ஒன்றுக்கொன்று நூறு மடங்கு அதிகமானவை. ஆகையால் அவை ஸாதிசயம் உயர்வு, தாழ்வு உள்ளவை அந்த ஆனந்தங்கள் எல்லாவற்றிற்கும் மேல்பட்ட பிரும்மானந்தம் எல்லையற்றதானதினாலும் அதைவிட மேல்பட்ட வேறு ஆனந்தம் இல்லாததாலும் இதுவே நிரதிசயமானது இந்த பிரம்மானந்தமும் ஸுஷுப்தி ஆனந்தமும் ஒன்றே. அதனால் ஸுஷுப்தி ஆனந்தமும் நிரதிசயம் அதனால்தான் எல்லோரும் இதை விரும்புகிறார்கள். "ஸுஷுப்தி ஸுகமே சுகம். விஷய சுகம் சுகமல்ல" என்று எண்ணிக்கொண்டு எல்லோரும் ஸ்திரீ, புத்ரன் முதலியவர்களால் ஏற்படும் ஸுகத்தை விட்டுவிட்டு மிருதுவான படுக்கையை சம்பாதித்துக்கொண்டு பிரயத்தினத்துடன் தூக்கத்தை வரவழைத்துக்கொண்டு ஸுஷுப்தி சுகத்தை

அனுபவிக்கிறார்கள் இந்த சுஷுப்தி சுகத்தை அனுபவிததுக் கொண்டிருக்கும்போது மிகவும ரூபலாவண்யமுடைய ஸ்திரீ தன்னை எழுப்பினாலும் கோபிப்பார்கள். அப்போது வேறு எதையும் அவர்கள் விரும்புவதில்லை. தூங்கி எழுந்த பிறகும் அதே ஆனந்தத்தை நினைத்துக்கொண்டு சந்தோஷப்படுவதுடன் மறுபடி அதையே அடையவேண்டி மறுபடியும் தூங்க பிரயத்னப்படுகிறார்கள். ஆகையால் சுஷுப்தியின் ஆனந்தம் உயர்வற்றது என்று நன்கு விளங்குகிறது.

இதற்கு சாசுவதத்வம் எப்படிச் சொல்வது எனில் விழிப்பிலும், ஸ்வப்னத்திலும் அநேக ரூபமாக பற்பல விஷயங்களால் தனித்தனியாக சுகம் அனுபவிக்கப்படுகிறது. ஒரு அளவுக்கு உட்பட்டதாகையால் இவை அநித்தியமானது சுஷுப்தி சுகம் ஒரே ரூபமானது அளவுக்கு உட்படாதது. வேறு ஒரு வஸ்துவின்மூலம் இது உண்டாவதில்லை ஆகவே இது நிதயம்.

நித்யமானால் இந்த சுகம் விழிப்பிலும் ஸ்வப்னத்திலும் கூட அனுபவிக்கப்படவேண்டுமே அப்பொழுது இது ஒருவராலும் அனுபவிக்கப்படுகிறதில்லையே எனில் அபபோதும இநத சுகம் இருககிறது ஆனால் மனதின் விருத்துகளால் மறைககப்பட்டு இநத சுகம அனுபவிக்கப் படுவதில்லை.

கேள்வி:—எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் ஆனந்தத்தை காரியரூபமான அநதக்கரண விருத்திகள எபபடி மறைக்கமுடியும ?

பதில :—சூரியனை மேகம் போலும், அக்னியைப் புகை போலும், கயிற்றைப் பாமபு போலும், பிருமமானந்தத்தை அநதக்கரண விருத்திகள் (காரியரூபமாக இருந்தும்) மறைக்கின்றன. சாமபலால் மறைக்கப்பட்ட அக்னியும் பனியால் மூடப்பட்ட சூரியனும் இலலையென்றே சிறுவர்களும் மூடர்களும எண்ணுகின்றனர். ஆனால் விவேகிகள் அப்படி எண்ணுவதிலலை. இதுபோலவே வெளிப் பார்வை உள்ளவர்களுக்கு ப்ரஹ்மானந்த ரூபமான ஸுஷுப்தி ஆனந்தம் மறைக்கப்பட்டு தெரியாமல் போனாலும் உள் நோக்கு உள்ளவாகளுக்கு அப்படியில்லை. அவர்களுக்கு ப்ரஹ்மானநதம ஸ்வஸ்வரூபமாக விளங்குவதால் மூக்காலங்

களிலும் ஒரேவிதமாக அவர்களால் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் ப்ரஹ்மானந்தத்தைவிட வேருக இல்லாத ஸுஷுப்தி ஆனந்தம் நித்யம் என்பது தீர்மானமாகிறது.

இப்படி வேறு ஆதாரமில்லாததும் வேறு உயர்வற்றதும் சாசுவதமுமான பிரும்மானந்தத்தின் ஸத் சித் ஆனந்தம் என்ற மூன்று லக்ஷணங்களும் நமக்கு அனுபவத்துக்கு வருவதால் நாம் ஆனந்தரூபர் என்பது தீர்மானமாகிறது. இவ்விதம் சச்சிதானந்த லக்ஷணம் நம்மிடம் இருப்பதாக சுருதி யுக்தி அனுபவங்களால் முடிவானதால் நாம் ஸச்சிதானந்த ப்ரஹ்மம் என்பது தீர்மானமாகிறது. “நாம் சச்சிதானந்த ஸ்வருபம்” என்று எப்படி அனுபவம் வருகிறது என்று கேட்டால் ஆறுவித லிங்கங்களால் வேதாந்த சாஸ்திரத்தின் தாத்பரியத்தைத் தீர்மானிப்பது என்ற சிரவணத்தை குருமுகமாகச் செய்து அதை அனுசரித்து மனனம், மனனத்தை அனுசரித்து நிதித்யாஸனம் முதலியது செய்து பின்னிட்டு வெகுகாலம் நிதித்யாஸனமே செய்து கொண்டிருப்பவனுக்கு “நான் சச்சிதானந்தமயமான பிரும்மம்” என்ற ஞானம் உண்டாகிறது. இது பரோக்ஷ ஞானம் எனப்படும்.

இந்த பரோக்ஷ ஞானத்தையும் விட்டு விட்டு “நான் காரியத்தைச் செய்பவன்” “இது என் காரியம்” “நான் இன்ன ஜாதிக்காரன்” “நான் இந்த வருணத்தவன்” “நான் இத்த ஆசிரமத்தில் இருப்பவன்” என்ற பற்றுதலை முற்றிலும் விட்டு விட்டு “நான் பிரும்மம்” “ப்ரும்மமே நான்” என்ற அனுபவத்தையும் அது விஷயமான முயற்சியையும் அதில் செய்கிறேம் என்ற எண்ணத்தையும் விட்டு விட்டு சும்மா ஸுஷுப்தியில் இருப்பது போல், ஜலத்தில் கரைந்த உப்பு மாதிரி, பிரும்மத்தில் மனம் லயித்தவனுக மாறுதல் இன்றி இருக்கும் மகாத்மாவுக்கு நிர்விசேஷமான எந்த ஞானம் ஸ்வயமாகவே தோன்றுகிறதோ அதுவே அபரோக்ஷானுபவம். இப்படிப்பட்ட அனுபவமானது எப்பொழுது ஏற்படுகிறதோ அப்போது அந்த புருஷன் ஸ்வானுபவரூபியாகவே ஆகிருன். ஆனந்தரூபியாகிருன். அந்த ஆனந்தத்தின் பெருமையை அவன்தான் அறியமுடியுமே தவிற மற்றவர்கள் அறிய முடியாது. ப்ரஹ்மானந்தத்தை விவரிக்கின்ற வேதாந்தமும் உள்ளபடி அறியாது. அதை எடுத்துச்சொல்லவும் முடியாது.

அந்த ஆனந்தத்தை அனுபவிக்கும் மனிதனும் அதை அநுபவிக்கத்தான் முடியும். அவன சுஷுப்தி சுகத்தைப் போல் அதை மற்றவர்களுக்கு எடுத்து உரைக்கவும் முடியாது. மனதினுல் நினைத்துப்பார்க்கவும் முடியாது. ஆகையால் நம்முடைய ஸ்வானுபவத்தை நாம்தான் அறிய முடியும். எந்த ஈசுவரன் தன் கருணையினுல் குருவாகத் தோன்றி நமக்கு உபதேசம் செய்கிருரோ அவராலும் இது இப்படி என்று சொல்லமுடியாது. இப்படி ஸ்வானுபவத்தை அறிந்தும் அதை தெரியாததுபோலவே ஆனந்தருபமாக

பதினென்ருவது வர்ணகம் முற்றும்

॥ द्वादशवर्णकम् ॥

अस्मिन्द्वादशवर्णके आत्मनोऽखण्डार्थं रहस्यमपि कृपया गुरुरुपदिशति ॥

शिष्यः — हे स्वामिन्, भवद्भिरेकादशसु वर्णकेषूपदिष्टैर्यैः-देहादिपञ्चकोशेषु 'अहम्' 'मम' इत्यात्मात्मीयत्वबुद्धिर्गलिता । 'बुद्धिप्रकाशकं सच्चिदानन्दरूपं यद्ब्रह्म तदेवाहम्' इत्यात्मज्ञानमागतम् । सर्वे संशया नष्टाः । तथापि पुनरेकः संशयो वर्तते । स क इति चेत्, शृणु । अयमात्मा सद्रूप इति चिद्रूप इत्यानन्दरूप इति चोक्तं किल । एवं त्रिविधरूपप्रतिपादकानि त्रीण्यपि पदानि त्रिविधभेदभिन्नार्थं प्रतिपादयन्ति तथा भिन्नार्थकानीव मम प्रतिभान्ति । तस्मादेतस्य सच्चिदानन्दपदत्रयस्य भिन्नार्थत्वप्रतीयमानस्य अखण्डार्थत्वं कथं सिध्यत्? इति शिष्यवचः श्रुत्वा गुरुरुपदिशति— हे पुत्र, अखण्डार्थः क इति चेत्; देशपरिच्छेदः कालपरिच्छेदो वस्तुपरिच्छेद इति त्रिविधपरिच्छेदरहिततया अपरिच्छिन्नोऽर्थोऽखण्ड इति जानीहि । तर्ह्यखण्डस्यैतानि त्रीणि लक्षणानि किमर्थानीति चेत्,

यदपरोक्षज्ञानमेतच्च यः प्राप्नोति, स एव 'चण्डालोऽस्तु स तु द्विजोऽस्तु गुरुरित्येषा मनीषा मम' इति भगवत्पादाचार्यवचनात्कुटीचकबहूदकहंससंन्यासिभ्योऽधिकतया पूजनीयः, स एव परमहंस इति निश्चित्य त्वमपि मदुक्तप्रकारेणात्मानं सम्यक्श्रुत्वा मत्वा ध्यात्वा साक्षात्कृत्य नित्यशुद्धबुद्धमुक्तसत्यपरमानन्दाद्वयब्रह्मरूपेण तिष्ठ । एतावदेवाचार्यैर्वक्तव्यं शिष्येण च श्रोतव्यम् । इतः परं वक्तव्यं श्रोतव्यं च नास्तीति सिद्धम् ॥

इति द्वादशवर्णकम् ॥

समाप्तश्चायं ग्रन्थः ॥

பன்னிரண்டாவது வர்ணகம்

இந்த வர்ணகத்தில் ஆத்மாவின் அகண்டார்த்தம் என்னும் ரஹஸ்யம் விளக்கப்படுகிறது.

கேள்வி:—கீழே உள்ள 11 வர்ணகங்களில் அடங்கிய உபதேசங்களால் தேகம் முதலிய ஐந்து கோசங்களில் 'நான்' "என்னுடையது" என்ற எண்ணம் விலகிவிட்டது. புத்தியைப் பிரகாசப்படுத்தும் எந்த சச்சிதானந்தரூபமான பரமாத்மா உண்டோ அதுவே நான் என்ற ஞானம் ஏற்பட்டுவிட்டது. எல்லா ஸந்தேகங்களும் நீங்கின. இருந்தாலும் ஒரு சந்தேகம் மட்டும் இருக்கிறது. அது என்னவெனில் ஆத்மா ஸத்ரூபம், சித்ரூபம், ஆனந்தரூபம் என்று சொல்லப்பட்டதல்லவா. இந்த மூன்று லக்ஷணங்களைக்கூறும் ஸத், சித் ஆனந்தம் என்னும் மூன்று பதங்களும் வெவ்வேறான மூன்று ஸ்வரூபங்களைக் குறிப்பிடுகின்றன. ஆகவே இப்பதங்கள் வெவ்வேறான மூன்று பொருள்களை உடையதுபோல் எனக்குத் தோன்றுகின்றன. ஆகையால் வெவ்வேறான மூன்று பொருள்களைக் கூறும் இந்த மூன்று பதங்களுக்கு பிரிவற்ற ஒரேவஸ்து எப்படி பொருளாகும்?

பதில்:— தேசத்தினால் பரிச்சேதம் காலத்தால் பரிச்சேதம் வஸ்துவினால் பரிச்சேதம் என்னும் மூன்றுவித பரிச்சேதங்கள்

அற்றதும் அதனால் எல்லையற்றதுமான பொருள் தான் அகண்டம் என்பது. அகண்ட வஸ்துவிற்கு இந்த மூன்று லக்ஷணங்கள் எதற்காக எனில் கூறுவோம்.

தேச பரிச்சேதமற்றது என்ற ஒரே லக்ஷணத்தை அங்கீகரித்தால் எங்கும் வியாபகமான ஆகாசமும் தேச பரிச்சேதமற்றதாக இருப்பதால் ஆகாசமும் அகண்டார்த்தம் என்று ஆகிவிடும். அது அகண்டார்த்தமில்லை. ஆகவே அகண்டமான ஆத்மாவின் லக்ஷணம் லக்ஷ்யமல்லாத ஆகாசத்திலுமிருப்பதால் அதிவ்யாப்தி ஏற்படும். இதைத் தடுக்க கால பரிச்சேதமற்றது என்ற லக்ஷணம் கூறப்பட்டது. ஆகாசத்திற்கு உத்பத்தியும் விநாசமும் இருப்பதால் கால பரிச்சேதம் இருக்கிறது. ஆகாசம் காலபரிச்சேதமற்றதாக இல்லை. ஆகையால் அகண்டார்த்த லக்ஷணத்திற்கு ஆகாசத்தில் அதிவ்யாப்தி இல்லை.

தேச பரிச்சேத மற்றது, கால பரிச்சேதமற்றது என்ற இரண்டு லக்ஷணங்கள் மட்டும் கூறினால் ஆகாசத்தில் அதிவ்யாப்தி இல்லாவிட்டாலும் காலத்தில் அதிவ்யாப்தி ஏற்படும். எங்கும் உள்ளதால காலம் தேசபரிச்சேதமற்றது. தன்னாலேயே தன்னை அளவுக்குட்படுத்த முடியாததனால் காலம் காலபரிச்சேதமற்றது. இந்த இரண்டு லக்ஷணங்களும் காலத்தில் இருப்பதால் காலமும் அகண்டமாகிவிடும். இதற்காக வஸ்து பரிச்சேதமற்றது என்ற மூன்றாவது லக்ஷணம் சேர்க்கப்பட்டது. காலத்தைக் காட்டிலும் வேறான பொருள்கள் ஏராளமாக இருப்பதால் காலத்தில் வஸ்து பரிச்சேதம் உள்ளது காலம் வஸ்து பரிச்சேதமற்றதாக இல்லை. ஆகையால் காலம் அகண்டமல்ல ஆத்மா ஒன்றிலதான இந்த மூன்று லக்ஷணங்களும் இருப்பதால் அது ஒன்றே அகண்டம். வேறொன்றும் அகண்டம் அல்ல. இதற்காகத்தான் மூன்று லக்ஷணங்கள் கூறப்பட்டன.

கேள்வி:—ஆத்மாவை அகண்ட வஸ்துவாக ஒப்புக்கொண்டால் நீங்கள் கூறிய மூன்று லக்ஷணங்களும் ஆத்மாவில் இருக்கவேண்டுமல்லவா! இவை ஆத்மாவில் காணப்படவில்லையே! எப்படியெனில் ஒவ்வொருவரும் "நான் இந்த இடத்தில் இருக்கிறேன்" "அந்த இடத்தில் இல்லை" என்று சொல்வதனால் ஆத்மாவுக்கு தேச அளவு

உண்டு என்று தெரிகிறது. " இன்ன வருஷத்தில் பிறந்தவன், அதற்கு முன்னால் நான் இல்லை என்ற அனுபவம் இருப்பதால் ஆத்மாவுக்கு கால அளவு உள்ளது என்று தெரிகிறது. " நான் பிராம்மணன் க்ஷத்திரியன அல்ல " என்ற அனுபவம் இருப்பதால் வஸ்து அளவும் ஆத்மாவுக்கு உண்டு என்று தெரிகிறது. ஆகவே மூன்றுவிதமான அளவுக்குட்படாதது ஆத்மா என்று சொன்னது சரியாக இல்லையே?

பதில்:— முன் அத்தியாயத்திலேயே ஆத்மா அனாத்மா இவைகளின் லக்ஷணங்களைப்பற்றி சொல்லும்போது " ஆத்மா பரிபூர்ணன் " " அநாத்மா ஒரு அளவுக்கு உட்பட்டது " "கண்ணுக்கு தெரிவது வாஸ்தவமல்ல தோற்றம் " என்று சொல்லப்பட்டது அல்லவா! ஆகையால் அந்த உபதேசத்தில் நம்பிக்கை இருந்தால் இந்த சந்தேகமே வராது. ஆனாலும் மறுபடியும் விவரித்துக்கூறுகிறேன்.

இந்த மூன்றுவித அளவு (தேசம் காலம் வஸ்து இவைகளால்) ஸ்வபாவமாக தேகத்திற்குத்தான் பரிபூர்ணமான பரமாத்மாவுக்கு இந்த அளவுகள் இல்லை.

எப்படியெனில் குடம் இருக்கிறது. வஸ்திரம் இருக்கிறது, சுவர் இருக்கிறது, களஞ்சியம் இருக்கிறது. பூமி இருக்கிறது, ஜலம் இருக்கிறது, ஒளி இருக்கிறது, வாயு இருக்கிறது, ஆகாசம் இருக்கிறது என்றெல்லாம் பஞ்சபூதங்களிலும் அவைகளால் ஆக்கப்பட்ட பிரபஞ்சத்திலும் 'இருக்கிறது' என்று ஆத்மா உணரப்படுவதால் அது எங்கும் நிறைந்தது ஆனதால் ஆத்மாவுக்கு தேச பரிச்சேதமில்லை. இப்படி சர்வவியாபகமான ஆத்மாவுக்கு கால அளவும் இல்லை. முன் சொல்லப்பட்ட காரணங்களால் ஆதமா, ஆதி அநதம் அற்றது என்பதால் சென்றகால எதிர்கால அளவுகளுக்கு உட்பட்டதல்ல என்று தெரிகிறது. சென்ற காலத்திலும் எதிர்காலத்திலும் உள்ள ஆத்மா ஒரே வஸ்துவான படியால் அது நிகழ்கால அளவுக்குமுட்பட்டதல்ல. ஆகவே ஆத்மா கால அளவுக்கு உட்பட்டதல்ல. ஆத்மா எல்லா வஸ்துக்களாகவும் இருப்பதால் வஸ்து பரிச்சேதமும் அதற்கு இல்லை.

வஸ்துக்கள் என்றால் எவை? ஸஜாதீய (ஒரே வகையான) பேதத்தால் வித்யாஸமுள்ளது, விஜாதீய (வெவ்வேறு வகையான) பேதத்தால் வித்யாஸம் உள்ளது. ஸ்வகத (தனக்குள்ளேயே உண்டான) வித்யாஸம் உள்ளது இவை தான் வஸ்துக்கள். எப்படியெனில் ஒரு மரத்துக்கும் மற்றொரு மரத்துக்கும் உள்ள வித்யாஸம். அதாவது ஒரே வகைக்குள் இரண்டும் இருந்தாலும் தனித்தனியானவை என்ற வித்யாஸம். இது ஸஜாதீய பேதம் என்பது. மரத்துக்கும் கல்லுக்கும் உள்ள வித்யாஸம் விஜாதீய பேதம் என்பது, மரம் ஒரு வகை வஸ்து. கல் வேறு வகை வஸ்து. மரத்திலே அதன் இலை, புஷ்பம் என்ற வித்தியாஸம் ஸ்வகத பேதம் (தனக்குள்ளேயே இருக்கும் வித்யாஸம்) இந்த மூன்று விதமான பேதங்களும் ஆத்மாவிடத்தில் இல்லாததால் அது பேதமற்றது. வஸ்துவினால் அளவு அதற்கு கிடையாது என்று முடிவு செய்யவேணும்.

கேள்வி:—மேலே சொன்ன ஸஜாதீய, விஜாதீய வஸ்து பேதங்கள் ஆத்மாவுக்கு கிடையாது என்று சொல்லமுடியாது ஏனெனில் ஒரே சைதன்னியம் (அறிவு) பிரும்ம சைதன்யம் ஈசுவர சைதன்யம், கூடஸ்த சைதன்யம் ஜீவ சைதன்யம் என்று பிரிந்து இருக்கிறதல்லவா? ஆகையால் (ஸஜாதீய பேதம்) ஒரே வகைக்குள் பேதம் உள்ளதாக காண்கிறது. ஆத்ம ஸ்வரூபம் பிரும்மம். பிரபஞ்சம் அனாத்ம ஸ்வரூபம் என்று இரண்டு இருப்பதால் வெவ்வேறு வகையான (விஜாதீயம்) பிரிவும் இருக்கிறது பிரும்மத்தில் ஸத், சித், ஆனந்தம் என்ற மூன்று இருப்பதால் ஒரே வஸ்துவுக்குள்ளேயே (ஸ்வகத) வித்யாஸம் இருக்கிறது. ஆகவே மூன்றுவித பேதங்களும் ஆத்மாவில் இருக்கின்றன. இவை இல்லை என்று எப்படிச் சொல்வது?

பதில்:—ஒரே ஆகாசம். அது எதை ஒட்டி இருக்கிறதோ அதை உத்தேசித்து, மஹாகாசம், குடத்தின் ஆகாசம், மேகத்தில் உள்ள ஆகாசம், குடத்தில் உள்ள ஜலத்தில் பிரதிபிம்பித்த ஆகாசம் என்று பலவித வித்தியாஸங்களுடன் தோன்றுகிறது. அதுபோலவே மாயையின் காரணத்தால் ஒரே சைதன்யம் (அறிவு) பிரும்மம், ஈசுவரன் என்றும் அவித்யையின் காரணத்தால் கூடஸ்தன் என்றும் ஜீவன் என்றும் வெவ்வேறாகத் தோன்றுகிறது விசாரித்துப்பார்க்கில் வாஸ்தவத்தில் ஆகாசம் ஒன்று தான். பலவிதமாகத் தோன்றுவது வாஸ்தவமல்ல. இதுபோல் மாயையாலும்

அவித்யையாலும் சைதன்யம் பலவாகத் தோன்றினாலும் உண்மையில் ஒன்று தான். ஆகையால் ஆத்மாவுக்கு ஸஜாதீய பேதம் இல்லை.

ஆத்மாவில் விஜாதீயபேதமும் இல்லை. கயிறு இல்லாமல் பாம்புத்தோற்றம் இல்லை. ஆகாசமில்லாமல் நீலநிறமில்லை இது போலவே ஆத்மா இல்லாமல் அநாத்மா இல்லை. அதிஷ்டானத்தைத் தவிர அதில் ஆரோபிதம் எல்லாம் பொய்தான். அதிஷ்டானம் ஒன்றுதான் உண்மைப்பொருள். பொய் என்பது மலடியின் பிள்ளை, முயல் கொம்பு என்பவை போல் மூன்று காலங்களிலும் இல்லாதது அனாத்மாவானது வாஸ்தவத்தில் இல்லாதலால் விஜாதீயபேதமும் இல்லை. ஸ்வகதபேதம் (ஒன்றிற்குள்ளேயே வித்கியாஸம்) இல்லை என்பது எப்படியெனில் ‘ஆத்மா’ ‘ஸாக்ஷி’ ‘கூடஸ்தன்’ ‘பாரமார்த்திகன்’ ‘பிராஜ்ஞன்’ ‘பிரும்மம்’ ‘ஸத்’ ‘சித்’ ‘ஆனந்தம்’ ‘நித்யன்’ ‘ஒருவனே’ ‘பரிபூர்ணன்’ என்ற விதிருபமான வாக்கியங்களில் உள்ள பதங்களும், ‘பருமனற்றது’ ‘அணுவல்லாதது’ ‘இரண்டற்றது’ ‘எண்ண முடியாதது’ ‘மாறுதலில்லாதது’ ‘நாசமற்றது’ ‘செய்கையற்றது’ ‘செய்விக்கும் தன்மையற்றது’ என்ற நிஷேத வாக்கியங்களில் உள்ள பதங்களும், ஒன்றான மாறுதலற்ற ஆத்மஸ்வருபத்தை விளக்குவதில் தான் கருத்துக் கொண்டவைகளே அன்றி வெவ்வேறு ஸ்வரூபம் என்பதில் தாத்பர்யமில்லை. ஏனெனில் ஆத்மா மாறுதல் இல்லாதது. பிரிவு அற்றது. ஆகவே தனக்குள் உள்ள வித்தியாஸம் (ஸ்வகதபேதம்) அற்றது ஆத்மா என்று அறியவும்.

கேள்வி:–ஸத், சித், ஆனந்தம் இம்மூன்று சொற்களும் வெவ்வேறு பொருள்களைக் குறிப்பவை. ஆகையால் கை என்ற ஒரே பொருளைக்குறிக்கும் ஹஸ்தம், கரம், பாணி இம்மூன்று சொற்களும் பர்யாயங்களாக (ஒரே பொருளை குறிப்பவைகளாக) இருப்பதுபோல் ஸத், சித் ஆனந்தம் என்ற சொற்கள் பர்யாயங்களல்ல. “மரம் இலை, மலர், பழங்கள் உருவமாக இருக்கிறது” என்று சொல்லும்பொழுது வெவ்வேறு பொருள்களுள்ள இலை, மலர், பழம் என்ற சொற்களால் மரத்தைக் குறிக்கும்பொழுது மரத்தில் தனக்குள் இலை மலர், பழம் என்ற வேற்றுமை உண்டு என்று சொல்கிறோம். இதுபோலவே வெவ்வேறு பொருள்களுள்ள ஸத், சித்,

ஆனந்தம் என்ற சொற்களால் ஆத்மாவைக்குறிக்கும் பொழுதும் ஆத்மாவில் தன்னுள் பேதம் உள்ளது என்றுதான் சொல்லவேண்டும்?

பதில்:–தீபம், சிவப்பான உஷ்ணமான ஒளி உடையது என்கிறோம் ஆனாலும் ஸ்வகதபேதம் தீபத்தில் கிடையாது. அப்படியே ஆத்மா சச்சிதானந்தமயம் என்பதிலும் தன்னுள் பேதம் இல்லை.

கேள்வி:–அப்படியானால் அதேமாதிரி மரம், இலை, புஷ்பம் பழங்களாயிருக்கிறது என்று கூறும்போது மரத்திலும் தன்னுள் வேற்றுமை இல்லை என்று சொல்லலாமல்லவா?

பதில்:—மரத்தில் எல்லா பாகமும் இலை என்று சொல்ல முடியாது ஒரு இடத்தில் மரம் இலையாகவும் மற்றொரு இடத்தில் அது புஷ்பங்களாகவும் மற்றொரு இடத்தில் பழமாகவும் இருக்கிறது. ஆகவே அங்கு ஸ்வகதபேதம் இருக்கிறது. ஆத்மா சச்சிதானந்தமயம் என்ற இடத்தில் எல்லா அம்சமும் ஸத் சித் ஆனந்தமயமாக இருப்பதால் ஆத்மாவில் வேற்றுமை கிடையாது. சிவப்பான உஷ்ணமான ஒளி தீபம் என்ற இடத்தில் தீபம் முழுவதும் சிவப்பாகவும் உஷ்ணமாகவும் ஒளியாகவும் இருப்பதால அதில் தன்னுள் வேற்றுமை இல்லையல்லவா!

கேள்வி:— அப்படியானால், “ஆத்மா ஸத்ருபம், சித்ருபம், ஆனந்தருபம்” என்றெல்லாம் ஏன் அடிக்கடி சுருதி உபதேசிக் கிறது. ஒரே உபதேசத்தால் ஆத்மாவை அறிந்துவிடலாமே?

பதில்:—சுருதியின் தாத்பரியம் என்னவென்று கவனிப் போம். உலகில் எல்லோரும் ஆத்மாவைப் பற்றி சரியாக அறிந்து கொள்வதில்லை. ஆத்மாவில் உள்ள ஸத் (இருத்தல்) என்பதை உலகத்தின் பேரிலும், ‘சித்’ என்ற அறிவை ஜடமான புத்தியின் மேலும், ‘ஆனந்தம்’ என்பதை தன் மனைவி பிள்ளைகள் பேரிலும் ஜகத்தின் (உலகத்தின்) அஸத்தையும் புத்தியின் ஜடத்தன்மையையும் பெண்சாதி, பிள்ளை முதலியவர்களின் துக்கத்தையும் சச்சிதானந்தமய மான ஆத்மாவின் பேரிலும் அவித்யையின் காரணத்தால் சுமத்தி கஷ்டப்படுகிறார்கள். அதனால் ‘ஜகத் ஸத்ய மானது’ ‘புத்தி முதலியவை சேதனங்கள்’ ‘தன் மனைவி

பிள்ளை முதலியவர்கள் ஆனந்தமளிப்பவர்கள்' 'நான் அழியக்கூடியவன்.' 'நான் ஜடன்' 'நான் துக்கிப்பவன்' என்று சொல்லிக்கொண்டு அவஸ்தைப்படுகிறார்கள். இந்த ப்ராந்தியை நிவர்த்திக்கவே வேதமானது இவர்களைக் குறித்து உபதேசிக்கிறது. "ஹே ஜீவர்களே, நீங்கள், ஸச்சிதானந்த ரூபர்கள்தான்" என்று போதிப்பதற்காக 'ஆத்மா ஸத்ரூபமானது, பொய்யல்ல சித், (அறிவு) ரூபமானது ஜடமல்ல. ஆனந்தரூபமானது துக்கமுள்ளதல்ல' என்று பிராந்தியை நிவர்த்திக்கத்தான் இவ்வாறு உபதேசிக்கிறது.

ஸத், சித் ஆனந்தம் என்ற பிரிவுகள் ஆத்மாவில் உள்ளதாக சுருதி சொல்லவே இல்லை. உலகில் சிலர் ஸத்வம் என்பது ஆத்மாவிலுள்ள தர்மம் (தன்மை), சித்வம், ஸுகம் இவ்விரண்டும் ஆத்மாவின் குணங்கள். ஆகவே ஆத்மா ஸச்சிதானந்த ரூபமல்ல என்று வாதாடுகிறார்கள். அதை மறுப்பதற்காகவும் வேதம் ஆத்மா ஸச்சிதானந்தரூபம் என்று சொல்லுகிறது. இது தான் சுருதியின் தாத்பர்யமென்று எப்படி அறிந்து கொள்ளலாமென்றால், ஆரம்பம், முடிவு முதலான ஆறுவித ஹேதுக்களைக் கொண்டு அகண்டார்த்தத்தில் தான் எல்லா சுருதிகளுக்கும் தாத்பர்யம் என்று தீர்மானம் செய்து கொள்ளலாம்.

ஆத்மா அகண்டம் (பிரிவற்றது) என்பது சுருதியைக் கொண்டு காட்டப்பட்டது. இனி யுக்தியாலும் இதை நிரூபிப்போம்.

ஸத் என்பது தானாகவே பிரகாசிக்கிறதா, வேறொன்றால் பிரகாசிக்கிறதா? தானாகவே பிரகாசிக்கிறது எனில் ஸத்து தான் சித்து என்று ஆகும். வேறொன்றால் பிரகாசிக்கிறது எனில் அந்த வேறு வஸ்து மற்றொரு ஸத்தா அல்லது ஸத்துக்கு எதிரிடையான ஸ்வபாவமுள்ளதா? எதிரிடையான ஸ்வபாவமுள்ளதானால் முயல் கொம்புபோல் அது அஸத்தானபடியால் எப்படி அது ஸத்தை பிரகாசிக்கும்படி செய்யமுடியும்? அந்த வேறு வஸ்துவும் மற்றொரு ஸத்துதான் என்றால் அதுவும் தானே பிரகாசிக்கிறதா அல்லது வேறொன்றால் பிரகாசிக்கப்படுகிறதா என்ற கேள்வி வரும். அது தானே பிரகாசிக்கிறது எனில் அந்த ஸத்தேதான்

சித்தாகிறது. வேறொன்றினால் பிரகாசிக்கிறது எனில் மறுபடியும் முன்போல் கேள்விகள் வரும். இவ்வாறு மேலும் மேலும் கேள்விகள் கேட்டுக்கொண்டுபோனால் இதற்கு முடிவே இல்லாததால் பலவித தோஷங்கள் வரும். ஆகையால ஸத்து தானே பிரகாசிககிறது என்றுதான் சொல்லவேண்டும். அப்பொழுது ஸத்துதான் சித்து, சித்துதான் ஸத்து இரண்டும் ஒனறுதான என்று ஏற்படுகிறது. மேலும் ஸத்தைக்காட்டிலும் வேறாக சித் வஸ்து இருப்பதாக வேதத்தில் ஒரு இடத்திலும சொல்லவில்லை.

தானே பிரகாசிக்கிற அந்த ஸத்து எப்படி ஆநந்தமாகிறது எனில் ஸத்வஸ்து அத்வைதமானபடியால் இதைக்காட்டிலும் வேறு பொருள் இல்லாததால் இதுவே ஆநந்தரூபம். எங்கும் நிறைந்த பொருளில்தான் ஆனந்தம் இருக்கும். அல்பவஸ்துவில் ஆனந்தம் கிடையாது அத்வைதமான ஸத்வஸ்துதான் பூர்ணமானது. த்வைத வஸ்து பூர்ணமில்லை. ஆகவே பூர்ணமான ஸத்வஸ்து ஆனந்தரூபம்.

ஸத் எப்படி அத்வைதமாகிறது எனில், ஸத்தைக் காட்டிலும் வேறு இரண்டாவது பொருள இருக்குமானால் அது ஸத்தா அஸத்தா? சாஸ்திரம் யுக்தி அனுபவம் இவைகளின் மூலம் விசாரிததுப்பார்த்தால் இரண்டாவது ஸத்வஸ்து இலலை எனறு நிச்சயமாகத தெரிகிறது. அது அஸத்தானால் முயல கொமபுபோல் அதறகு ஸ்வருபமே இலலாததால் ஸத்வஸ்துவின அதவைததனமையை இது பாதிக்காது. ஆகவே வாஸ்தவததுல இரணடாவது பொருள் இல்லாததால் ஸத்வஸ்து அதவைதம. அதனால் இதுவே பூர்ணம். ஆகையால் ஸ்வப்ரகாசமான ஸதவஸ்துவேதான ஆனந்தம். இவ்வாறு யுக்தியைககொண்டும ஸசசிதானந்த பதங்களுக்கு அகண்ட வஸ்து பொருள் எனபதை தீர்மானிக்கலாம்.

இனி அனுபவத்தால் இந்த அகண்டார்த்தத்தை தீர்மானம் செய்வோம். அகண்டார்த்தத் தன்மையைப்பற்றி 11-வது வர்ணகத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனாலும் நன்கு மனதில் பதியவேண்டி இன்னும் ஒரு முறை அதை சொல்லுவோம். எல்லோருக்கும் சுஷுப்தியில் ஒரே சுகம் தோன்றுகிறது அந்த சுகம் ஜாக்கிரம், ஸ்வப்னம் இந்த நிலைகளில் உள்ளதுபோல பல வகைப்பட்டதல்ல அது ஒரே

ரூபமானது. வேறொன்றினால் பாதிக்கப்படாதது. ஆகவே அந்த சுகம் ஒன்றானதுதான் அந்த சுஷுப்தியில் சூரியன் முதலியவைகளின் பிரகாசத்தை எதிர்பாராமல் சுஷுப்தி ஆனந்தம் தானே பிரகாசிப்பதால் அது 'சித்' ரூபமானது அந்த சுஷுப்தி ஆனந்தம் ஸ்வயமாக பிரகாசிக்கிறது என்று எதனால் சொல்லப்படுகிறது என்றால் தூங்கி எழுந்தவன் 'இதுவரை நான் சுகமாகத்தான் தூங்கினேன்'' என்று நினைவு படுத்திக் கொள்கிறானல்லவா. இப்படி நினைவு வருவதற்கு முன்பு அதன் அனுபவம் இருந்திருக்கவேண்டுமாதலால் சுஷுப்தியில் சுகானுபவம் உண்டு என்று சொல்லவேண்டும். அந்த ஸமயத்தில் அனுபவத்துக்குக் காரணமான இந்திரியம் முதலியவை இல்லாததால் அந்த சுஷுப்தியில் ஏற்படும் ஆனந்தம் தானாகவே பிரகாசிக்கிறபடியால்தான் ஆனந்தானுபவம் ஏற்படுவதாகச் சொல்லவேண்டும்.

கேள்வி :—சுஷுப்தியில் நம் அனுபவத்தில் சுகமும் விளங்குகிறது. அஜ்ஞானமும் விளங்குகிறது. அவைகளிரண்டுக்குள் ஸுகம் ஸ்வப்ரகாசமா? அக்ஞானம் ஸ்வப்ரகாசமா?

பதில் :—சுகம்தான் ஸ்வப்ரகாசம். அக்ஞானம் அல்ல. அக்ஞானம் மறைவு ரூபமானதால் அது பிரகாசம் அல்ல. ஆகையால் சுஷுப்தியில் ஆத்மரூபமான சுகம் தானே பிரகாசித்துக்கொண்டு அஞானத்தையும் பிரகாசமடையும்படி செய்கிறது ஆகவே 'சத்' என்பதின் சுகம் ஸ்வப்ரகாசமானதுதான் என்று அனுபவத்தினாலும் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே ஸச்சிதானந்தம் என்ற பதங்களால் அகண்டார்த்தம் (ஒரே பொருள்) குறிக்கப்படுகிறது என்று அனுபவத்தாலும் முடிவுக்கு வரவேண்டியது.

இப்படி சுருதி, யுக்தி, அனுபவம் இவைகளினால் ஆத்மாவுக்கு ஸ்வகத பேதமும் (உள்ளுக்குள் வேற்றுமை) கிடையாது என்று தெரிகிறது இப்படி ஸஜாதீயம், விஜாதீயம் ஸ்வகதம் என்ற மூன்று பேதங்களும் இல்லாததால் வஸ்துவினால் அளவுக்குட்பட்டது என்பது ஆத்மாவுக்குக் கிடையாது. இவ்விதம், தேசஅளவு, காலஅளவு, வஸ்துஅளவு என்ற குறைகள் ஆத்மாவுக்கு இல்லாததால் ஆத்மா பரிபூர்ணன் (எங்கும் எப்போதும் எவ்விதத்திலும் நிறைந்தவன்) என்று தீர்மானமாகிறது இப்படி ஆத்மா அகண்டமானது ஏகரஸமானது என்று தெரிந்துகொண்டோம்.

இப்படிப்பட்ட பரிபூர்ணனான ஆத்மாவுக்கு துக்கம் என்பது பின்னால் வந்தடைந்ததே தவிர இதன் சுவபாவமானதல்ல. அந்த துக்கம் சரீரத்தால் வந்தது, சரீரம் கர்மாவினால் வந்தது, கர்மா ராகத்துவேஷங்களினால் ஏற்படுகிறது, ராகதுவேஷங்கள் பற்றுதலினால் உண்டானது, பற்றுதல் அவிவேகத்தால் வந்தது அவிவேகம் அஞானத்தினால் உண்டானது என்று அறிந்து, அந்த அஞானம் ஞானத்தால் போக்கடிக்கப்படவேண்டும், ஞானம் விசாரம் செய்வதனால் உண்டாகிறது. ஆத்மா ஸச்சிதானந்தஸ்வரூபம் என்றும் தேகம் முதலிய பிரபஞ்சம் பொய்யானது, ஜடமானது, துக்கமயமானது என்றும் அந்த பிரபஞ்சம் ஆத்மாவின்பேரில் ஆரோபிக்கப்பட்டு (சுமத்தப்பட்டு) இருக்கிறது என்றெல்லாம் விசாரணை செய்து "அதுதான் நீ" என்ற "தத்வம்" என்ற வாக்கியத்தினால் உண்டான ஞானத்தினால் முதலில் "நான் பிரும்மமாக இருக்கிறேன்" என்ற பரோக்ஷ ஞானமும் பிறகு அனுபவத்தால் ஸாக்ஷாத்கார ரூபமான அபரோக்ஷ ஞானமும் எவனுக்கு ஏற்படுகிறதோ, இப்படிப்பட்டவனையே, ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரியாள் மனீஷா பஞ்சகத்தில் 'அவன் சண்டாளனானாலும் பிராம்மணனானாலும் அவனே குரு என்று என்னுடைய எண்ணம்' என்று சொன்னார் இப்படிப்பட்டவன் பலவிதமான சந்நியாசிகளைவிடச் சிறந்தவன் பூஜிக்கத்தகுந்தவன் இவனே பரமஹம்ஸன். இந்த நிலையை அடைய வேண்டி ஒவ்வொருவரும் மேலே சொன்ன வழிகளைக் கையாண்டால் நித்ய, சுத்த, புத்த, முக்த ஸத்ய பரமானந்த, அத்விதீய பிரம்ம ரூபமாவான் என்பதுதான் குருவின் உபதேசம் என்று அறியவும். இதற்குமேல் சொல்லவேண்டியதோ கேட்கவேண்டியதோ ஒன்றும் கிடையாது.

பன்னிரண்டாவது வர்ணகம் முற்றும்.

லகுவாஸுதேவ மனனம் முற்றுப்பெற்றது